# கடல் கடந்து போனவர்கள்



கரவை மு. தயாளன்

# கடல் கடந்து போனவர்கள்

தமிழன் வாரப்பத்திரிகையில்
வெளிவந்த தொடர்கதை

ஆசிரியர்

கரவை மு. தயாளன்



வெளியீடு

லட்சுமி பதிப்பகம்
57 Blandford waye
Hayes, Middlesex UB4 0PB
England

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட் 2001 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | லட்சுமி பதிப்பகம் |

| | | |
|---|---|---|
| Title | : | Kadal Kadanthu ponavarkal (Novel) |
| Author | : | Karavai M. Thayalan |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition, Auguest 2001 |
| Published by: | | Luxmy Pathipakam<br>57 Blandford waye<br>Hayes<br>Middlesex<br>UB4 0PB<br>United Kingdom |
| Price | : | £4.00 |

Typeset at Luxmy Pathipakam UK
Printed by UK PRINTERS Srilanka

# சமர்ப்பணம்

என்னை உலகுக்கீந்து
எனக்குள் தமிழை நுழைத்து
என் பேனாவில்
தாங்களே மையாகிவிட்ட
என் பெற்றவர்களுக்கு
என் இந்த முதல்
நவீனம்
சமர்ப்பணமாகும்

# கடல் கடந்து போனவர்கள்

— சமகால அரசியற் பின்னணியில் சில அறிமுகக் குறிப்புகள்

**மு. நித்தியானந்தன்**

இலங்கையின் சிங்கள–தமிழ் இன உறவுகளில் 1980கள் தீர்க்கமான ஒரு வரலாற்றுக்கட்டத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றன. 1983 ஜூலை 24ஆம் திகதி இரவில் இலங்கையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட சிங்களப் பேரினவாதக்காட்டு மிராண்டித்தனம் நாகரிக உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அரசின் ஆசீர்வாதத்துடன்– அதிகாரபீடத்தின் பின்புலத்துடன் அரசநிர்வாக யந்திரத்தின் அங்கீகாரத்துடன் இராணுவ, பொலிஸ் அனுசரணையுடன் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த இன அழிப்பு நடவடிக்கைகள் தமிழ் மக்கள் நெஞ்சில் ஆழமான ரணத்தை ஏற்படுத்திவிட்டன. இந்த நாசகாரச் செயலைக் கேள்வியுற்று சுத்த சிங்களரத்தமே ஓடும் தான் ஒரு சிங்களவன் என்பதற்காக முதன்முதல் வெட்கப்பட்டேன் என்கிறார் பேராசிரியர் பிரயன் செனவிரட்ன.

1983 இனக்கலவரம் காட்டுமிராண்டித்தனத்தின் எல்லையைத் தொட்டிருந்தது. அந்த இனவாத நச்சு ஜூவாலை இன்னும் அந்த இரத்தினதுவீபத்தைப் பொசுக்கிய வண்ணமே உள்ளது. தமிழர்கள் உயிர்வாழ்விற்கு எந்த உத்தரவாதமுமில்லை. அதியுயர் பாதுகாப்புச் சிறைக்கூடங்களில்–வீதிகளில்–வீடுகளில்–வயல்வெளிகளில்–பஸ்களில்–ரயிலில்–கடலில்–படகில்–வேலைத்தலங்களில்–

ஆலயங்களில் தமிழர்களின் குருதி ஓடியது.

தமிழ் மக்களின் வாழ்விலும் சிந்தனையிலும் எதிர்காலம் குறித்த விசாரத்திலும் எண்பதுகளின் பின் பாரதூரமான மாற்றங்கள் நடந்தேறின. வீடுகளைவிட்டு இளைஞர்களும் பெண்களும் வெளியேறினார்கள். பாடசாலைகளைவிட்டு-தொழிலகங்களைவிட்டு விலகினார்கள். தலைமறைவு வாழ்க்கையே இளைஞர்களின் சாதாரண வாழ்க்கையாகிவிட்டது. மரணம் வாசற்கதவுகளைத் தட்டியது. சாவின் நிழல் எங்கும் கவிந்தது. உரிமைப் பொறிகள் கனன்றன. தமிழர்கள் தமது இருப்பைத் தாமே நிர்ணயிக்கும் திடம் கொண்டனர். எண்பதுகளில் தமிழ் சமூகத்தின் மத்தியில் கிளர்ந்த இந்த எழுச்சிக்கூறுகளை-தேசிய இனப்பிரச்சினையின் முகிழ்ப்புகளை ஈழத்து இலக்கிய உலகம் மிக அருந்தலாகவே வெளிப்படுத்தியுள்ளது.

சி.வி.வேலுப்பிள்ளையின் "இனிப்படமாட்டேன்", அருளரின் "லங்காராணி", ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "ஒரு கோடை விடுமுறை", விமல் குழந்தைவேலின் "மண்ணும் மல்லிகையும்", தெளிவத்தையோசப்பின் "நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்" ஆகிய விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாவல்களே எழுபதுகள், எண்பதுகளின் இனக்கலவரங்களின் கூறுகளை-தமிழ்த் தேசியத்தின் எழுச்சியைப் பிரதிபலித்த சிறப்பினைப் பெறுகின்றன. அ. சிவானந்தனின் " when memory dies" என்ற ஆங்கில நாவலும் ஒரு நூற்றாண்டுகால இலங்கையர் வாழ்வின் பல்வேறுபரிணாமங்களை அசலாக வெளிப்படுத்தியுள்ளது.

எனினும் கடந்த 20 ஆண்டுக்காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் நிகழ்ந்துள்ள பாரதூரமான மாற்றங்கள், அவலங்கள், போராட்டங்கள், ஏக்கங்கள், எழுச்சிகள் என்பன தமிழ்ப் புனைகதையுலகில் சேர்த்தியாகப் பதிவு

செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறுதற்கில்லை. மாற்றங்கள் சமூகத்தைப் புரட்டி எடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவற்றைச் சித்தரிக்கும் மகத்தான படைப்புகள் எழாதது துரதிர்ஸ்டமானதென்றே கூறவேண்டும். இலக்கியத்தின் இத்தகைய தேக்கம் இன்னும் சிறிது காலமாவது நீடிக்கும்போலவே தெரிகிறது.

**கடல் கடந்து போனவர்கள்** நாவல் நண்பர் கரவை மு. தயாளனின் கன்னிப்படைப்பு. மார்க்ஸிய சிந்தனையில் கருத்தூன்றியவராகவும் வடபுலத்தில் சாதிய அடக்குமுறைக்கு எதிராகத் தீவிரமாக இயங்கிய முற்போக்காளராகவும் இயங்கிய நற்குணதயாளன் என்ற இயற்பெயரைக் கொண்ட கரவை மு தயாளனுடனான எனது பரிச்சயம் முப்பது ஆண்டுகளுக்கு மேலானது. சமூக அக்கறையும் ஈடுபாடும் அவரது வாழ்வுக் கண்ணோட்டத்தில் அழுத்தமாகச் சுவறியுள்ளன.

தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சி கருக்கொண்ட எண்பதுகளின் நிகழ்வுகளைப் பின்புலமாகக் கொண்டு **கடல் கடந்து போனவர்கள்** என்ற நாவல் எழுகின்றது. யாழ் மேயர் துரையப்பாவின் மரணத்திலிருந்து திண்ணவேலியில் பதின்மூன்று இராணுவவீரர்கள் மீதான

கெரில்லாத் தாக்குதலுக்கூடாகப் பல அரசியல் நிகழ்வுகள் இந் நாவலில் பேசப்படுகின்றன.

யாழ்ப்பாண சமூகத்திலிருந்து சுயநிர்ணயப் போராட்ட உந்துதலில் இயக்கங்களை நாடி இளைஞர்கள் அணி திரண்டனர். சிங்களக் கொடுங்கோலர்களுக்கு எதிராக தமிழமக்கள் நடத்திய அகிம்சைப் போராட்டங்கள் எள்ளி நகையாடப்பட்டுத் தோல்வியில் முடிந்த நிலையில் ஆயுதப்போராட்டமே ஒரே ஒரு மார்க்கமாகத் தெரிந்தபோது ஆயுதப்பயிற்சிக்காக தமிழ் இளைஞர்கள் கடல் கடந்து போனமை நமது சரித்திரத்தின் ஒரு பகுதி.

இளைஞர்கள் தமது வீடுகளைத் துறந்து – இயக்கங்களில் இணைந்தமை தமிழ் சமூகத்தின் அரசியல் பாதையில் பாரதூரமான மாற்றங்களைக் கொணர்ந்து சேர்த்தது.

இந்த அரசியல் போராட்ட எழுச்சியின் மறுபக்கத்தில் தமிழர்களின் இருப்பு அச்சுறுத்தப்பட்ட சூழலில் இந்த இனசங்காரத்தால் தம் சொந்த மண்ணை விட்டு அகதிகளாக மேற்கு நாடுகள் நோக்கிப் புலம் பெயரும் போக்கும் அரச–ியல் போராட்டத்திற்கு சமாந்தரமாக செயற்பட்டு வந்திருக்கிறது.

நற்குணதயாளனின் இந்த நாவல் கடல்கடந்து போனவர்களின் இரண்டு பாதைகளின்மீதும் பார்வை செலுத்தியிருக்கின்றது. இனத்துவ அரசியல் தமிழப் பிரதேசங்களில் எழுச்சியுறுவதை விபரிக்கும் இந் நாவலில் யாழ் சமூகத்தின் சாதி அரசியலும் பேசப்படுவது குறிப்பிட்டுக்

கூறவேண்டிய அம்சமாகும். சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய சின்னவனும் அவனது மனைவியும் குழந்தையும் குடிசையோடு கொழுத்தப்பட்ட அநியாயத்தை இந்நாவல் பதிவு செய்திருக்கிறது.

தமிழ்ப் பொதுமக்களை இராணுவம் அடித்தும் தாக்கியும் இம்சை செய்யும் அட்டூழியம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் காலகட்டத்துடன் தோற்றம்தரும் இந்நாவலில் உலவும் பாத்திரங்கள் பல்வேறு சமூகத்தளங்களிலிருந்தும் பல்வேறு சிந்தனைப்போக்குகளையும் பிரதிபலிப்பவர்களாக உள்ளனர். மகாலிங்கம் மாஸ்டர், லாவண்யா, தினகரன், சுதந்திரன், சுமணாவதி , சடகோபன், ஆகிய பாத்திரங்களைக்கொண்டு பின்னப்பட்டிருக்கும் இந்நாவல் தமிழர் சரித்திரத்தின் மிக முக்கிய கட்டத்தைப் பேசுவது ஆர்வத்தை ஈர்க்கும் ஒன்றாகும்.

ஒரு எழுத்தாளனுக்குப் பெருஞ்சவாலாக விளங்கும் ஒரு வலைப் பின்னலான நடப்பியல் வாழ்வின் சித்திரிப்பு வெற்றிகரமாக அமைவது என்பது அசாத்தியமான சாதனைதான். நற்குணதயாளன் தன் தூரிகையில் தீட்டமுயன்ற இவ் ஓவியத்தில் கோலமிடவும் ரேகைகள் கீறவும் வண்ணங்கள் வீசவும் தவறிய இடங்களை எதிர்காலப் படைப்புகளில் நிறைவு செய்வார் என்று நினைக்கின்றேன்.

# மதிப்புரை

## புலவர் சிவநாதன்

தம்பி கரவை மு. தயாளன் எழுதியுள்ள இந்நாவலிற்கு மதிப்புரை எழுதப் பணிக்கப்பட்டுள்ளேன்.

ஆன்மீகத்தளத்தில் நின்றுகொண்டு அகிலத்தின் மேன்மை நோக்கிய அரசியற் புரிந்துணர்வோடு மனித நேயத்தின் மகத்துவம் போற்றும் தத்துவத் தெளிவோடு தமிழிலக்கிய மரபுப்பற்றோடு **கலசம்** என்கின்ற இதழின் ஆசிரியனாகவும் தாயகத்தையும் தமிழினத்தையும் நேசிக்கும் பாச உள்ளங்கொண்ட அரங்கப் பேச்சாளனாகவும் எழுத்தாள னாகவும் இயங்கிவரும் தம்பி தயாளனின் ஓர் அரிய முயற்சிக்கு அன்பும் ஆதரவும் அளிக்கும் வாய்ப்புக்கிட்டியமைக்கு இறையருளுக்கு நன்றி கூறி என் பணியைத் தொடர்கிறேன்.

புலன்கள் பொறிகட்கு உட்பட்டுப் பார்த்தவை கேட்டவை அனுபவித்தவை என்ற நிலையில் புறச் சூழல்களால் உந்தப்பட்டு எழுதுவது ஒருவகை அனுபவம்!

அறிவியற் தளத்தில் நின்று கொண்டு செய்திகளைச் சேகரித்து ஏட்டில் விதைப்பது இன்னொருவகை அனுபவம்!

இவற்றிற்கு அப்பால்.....

புலன்கள், பொறிகள் கடந்து, காலதூரங்கடந்து அகதரிசனத்தோடு அக ஓசைகளையும், உணர்வுப் பரி-மாறல்களையும், தன்னகத்தே அனுபவித்து

எண்ணங்களையும் எதிரொலிகளையும், முனகல்களையும், மூச்சுக்களையும் முகங்களாக்கி உயிர் கொடுத்து உலவவிடுவது ஓர் எழுத்து யாகம் என்றால் அது மிகையாகாது!

தியானத்தின் சக்தி, இவ் எழுத்திற்கு வந்துவிடுகின்றது.!

பிரார்த்தனையின் பலம் இப்படைப்பிற்கு இணைந்து விடுகின்றது.

மௌனத்தின் மொழி இதனோடு பிணைந்துவிடுகின்றது.

யோகத்தின் வீரியம் இப்படைப்பின் அடிநாதமாகிவிடுகின்றது.

பொய் புழுகுகட்கு அப்பாற்பட்டு போலித்தனங்கட்கு அப்பாற்பட்டு இப்படைப்புகள் சத்திய வேகத்தோடு சமுதாயத்தை அடையும் தகைமையைப் பெற்றுவிடுகின்றன. இவ்வாறான கலையும் இலக்கியமும் மக்களை இணைக்கும் மாபெரும் சங்கிலியாக வலுப்பெற்றுவிடுகின்றது.

புலம்பெயர் நிலங்களில் வாழ்க்கை நடத்திக்கொண்டு அந்நியப் புலங்களையும் பூகம்பங்களையும் சூழல்களையும் சூறாவளிகளையும் எதிர்கொண்ட நிலையில் எமது தாயக நிகழ்வுகளைப் படைப்புக்களின் கருவாக்கி இலக்கிய வாழ்வினை மேற்கொள்வது சுலபமான காரியமல்ல என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

தம்பி கரவை மு. தயாளன் இதில் வெற்றி பெற்றுள்ளார் என எண்ணவைக்கிறது, அவரது நாவலின் ஓட்டம்.

நாவலின் பாத்திரங்கள் உயிர்பெற்று உள்ளத்தில் இடம்பிடித்து விடுகின்றன: உரையாடல்கள், மண்ணின் வாசத்தோடு வாசகனை வந்தடைகின்றன. ஆசிரியருக்கும்,

பத்திரிகையாளருக்கும் உள்ள இறுக்கமான உறவினை தினகரன், சுதந்திரன் என்ற பாத்திரப்பெயர்கள் பறைசாற்றி நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தானின் சாதிவெறிக்குச் சவுக்கடிபோடுவதுதான் இலக்கியப்படைப்பின் ஆரம்ப இலக்காகியபோதும் படைப்பாளி வர்க்கப்போராட்டவாதியாக மாறிவிடாதது நெஞ்சுக்கு நிம்மதியைத் தருகின்றது.

லாவண்யாவின் தனித்துவப்போக்கு தான் பிறரிற் தங்கி வாழக் கூடாது என்ற பிடிவாதம் இன்றைய பெண்ணிலைவாதச் சிந்தனையாளர்கட்கு நெய்தடவும் கடமையைச் செய்துள்ளது.

இராணுவத்தின் கெடுபிடியும் அரசின் அசுர நடவடிக்கைகளும் அகதிகளின் அவலநிலையும் சிங்களப் பௌத்த இனவெறியின் தாண்டவமும் நாவலின் ஓட்டத்தோடு இழையோடி நிற்பதன் மூலம் இந் நாவலிற்குள் தமிழின விடுதலைக்கான நியாயப்படுத்தல் பயிரிடப்பட்டுள்ளது.

நமது தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றின் மடியில் வேரூன்றியுள்ளது. கடல் கடந்து போனவர்கள் என்ற இந்நாவல். நாவலின் தலைப்பினைப் படித்ததும் எங்கே இது ஓர் புலம்பெயர் தமிழர்பற்றிய கதைப்பின்னலில் எழுந்திருக்கலாம் என்ற எண்ணம் எழத்தான் செய்கிறது.! எனினும் நாவல் நாட்டில் முளைத்துக் கனிதர முயல்கிறது.

பக்கங்களைப் புரட்டியபடியே பாத்திரங்களோடு கைகோர்த்து நடக்கக்கூடியவண்ணம் தனது பேனாவை நகர்த்தியுள்ளார் நாவலின் ஆசிரியர். பாத்திரங்களின் உரையாடல் வழியாகவும் அவற்றைத் தொடர்ந்து வருகின்ற படைப்பாளியின்வரிகள்

மூலமும் தன்னை வெளிப்படுத்தித் தான்வாழும் இனத்தையும் அதனை அழிக்கக் கங்கணம்கட்டியுள்ள சிங்கள பௌத்த இனவாதத்தினை விமர்சிக்கவும் கண்டிக்கவும் ஆசிரியர் தவறவில்லை. இதன்மூலம் தனது படைப்பிற்குள் தன்னையும் தனது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

அவ்வப்போது பொதுவுடமை, சமயம் என்ற களங்களை ஆசிரியர் பொறுப்புணர்வோடு விமர்சித்துச் செல்வது விளங்குகிறது.

இன்றுவரை தாயகத்தில் எமது மக்கள் பட்டுவந்த பட்டுவரும் இன்னல்களும் இழப்புகளும் வார்த்தைகளுக்குள் வசப்படாதவை! வரிகளுக்குள் சிறைப்படாதவை!. சிங்களப் பெரும்பான்மையின் அராஜக நடவடிக்கைகளையெதிர்த்து ஒரு விடுதலைப் பாதையில் அணிவகுக்கவேண்டுமென்ற போராட்டச் சிந்தனை கருக்கொண்டு உருவெடுத்த காலத்தில் கருக்கட்டுகிறது கடல் கடந்து போனவர்கள்.

ஒன்றுபடாத தமிழர்களையும் ஒட்டிக்கொள்ளாத தனிமனிதர்களையும் நாட்டின் நிகழ்வில் போராட்டச் சிந்தனைக்குள் இயல்பாகவே இணைத்துக் கொள்வதை இந்நாவல் கோடிட்டுக் காட்டுகின்றது.

தினகரன் என்ற பாத்திரம் எட்ட நின்று விமர்சிக்கும் பத்திரிகையாளர்களின் பிரதிநிதியாக நடமாடுகிறது.

சுதந்திரன், முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்று முகத்தைப் பொத்திக்கொண்டு வாழும் சுயலச் சந்ததியின் ஒட்டு மொத்தமாகக் காட்டப்படுகின்றான். இந்தச்

சுதந்திரனுக்குக் காதலியாகிறாள் சிங்களக் காரிகை சுமணா! இந்தப் பாத்திரம் சுதந்திரனுக்கு ஆதார சுருதியாக விளங்கி வாசகனின் உள்ளத்தைத் தொட்டு விடுகின்றது. சுமணாவைப் பாவித்துத் தனது விரிந்த பார்வைக்கு விருந்து கொடுத்துள்ளார் நாவலாசிரியர்.

லாவண்யா, சிவலிங்க மாஸ்டர், சடகோபன் எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்குப் புதியவர்களல்ல! யதார்த்தமான பாத்திரங்கள் இவை!

பவளமக்கா என்ற ஊர்க்குருவி எமது தாயக வாழ்வின் தனித்துவத்தை நினைவூட்டுகிறது! சுகமான தலையீடுகள் , கனிவான குறுக்கீடுகள், வேலிக்குள்ளிருந்து வெளிப்படும் அயல்வீட்டுக் கூவல்கள்!

“அவள் வாயில் எழுத முடியாத அளவிற்கு வார்த்தைகள் வருகின்றன” – நாவலாசிரியரின் தமிழிலக்கிய மரபுத்தனம் வெளிப்படுகின்றது.

எதனையும் எழுதலாம், எப்படியும் எழுதலாம் என்று கிறுக்கும் கிறுக்கர்களைத் துரத்தியடிக்கும் துல்லியமான உள்ளம், இங்கே தெரிகின்றது. இதனை வரவேற்காமல் இருக்கமுடியவில்லை.

காலிமுகத்திடலில் ஒருதாசி வருகிறாள். கொழும்பின் நிலைமையைக் கோடிட்டுக் காட்டுவதோடு, தாசிக்குள்ள சுதந்திரம், தனக்கில்லையே என்று ஏங்கும் தினகரனின் வேதனையும் விரக்தியும் குமுறலும் கொதிப்பும் வாசகரின் நெஞ்சுக்கு வலுவேகமாகத் தாவிக் கொள்கின்றன.

பக்கங்களின் எண்ணிக்கை மூலமும் அட்டைப்படத்தின்

அழகின் மூலமும் ஒரு படைப்பிலக்கியத்திற்குப் பட்டயம் வழங்கும் விற்பன்னர்களும், வித்தகர்களும் விமர்சகர்களும் வாழும் லண்டனில் மிகவும் குறுகிய பக்கங்களுக்குள் பலதரப்பட்ட உணர்வுகளையும் உரையாடல்களையும் தாம் படைத்த பாத்திரங்களின் மூலம் தந்து நிற்கின்ற தம்பி கரவை மு. தயாளனை வாழ்த்துகின்றேன்.

உயிரைக் காப்பாற்ற ஒரு பிள்ளையையும் உயிரைக் கொடுக்க மற்றொரு பிள்ளையையும் கடல் கடந்து அனுப்பிவிட்டு தாயகத் தந்தையாகச் சிவலிங்க மாஸ்டரும் வாசகர்களுக்கு விடைதருகின்ற இந் நாவல் வாசிப்பவர்களை ஏமாற்றமாட்டாது என உறுதியாக நம்புகின்றேன்.

**அன்புடன் புலவர் சிவநாதன்**

# ஆய்வுரை

## கடல் கடந்து போனவர்கள்

S.J.Fatimaharan BA, Diploma, BSc, MAQ( in Tamil), MA,
MSc & PhD(Research Student)

கடல் கடந்து போனவர்கள் கடல் கடந்து வந்து இலண்டனில் வாழும் தமிழீழத்து நல்லதோர் எழுத்தாளர் சஞ்சிகையாசிரியர் திரு. கரவை மு. தயாளன் அவர்களின் கற்பனைவளத்தில் உருவான சமகால வாழ்க்கைப் புனைகதை.

சமகாலம் என்று கூறும் பொழுது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக பரிணமித்த 1983ஆம் ஆண்டு காலப்பகுதியை மையமாக கொண்ட மக்களின் வாழ்வியலை இக்கதை பகைப்புலமாக கொண்டுள்ளது.

அக்காலகட்டத்தில் கடல்கடந்து போனவர்கள் உயிரைக் கொடுக்க உயிரைக் காப்பாற்றவென இருவகைப்பிரிவுகளாக காணப்பட்டனர். மகாலிங்கம் மாஸ்ரரின் குடும்பத்தில் இருவகையான கடல்கடந்து போனவர்களும் தோன்றிய வரலாற்றை வரைகிறது இப்புனைகதை.

இதற்கேற்ப பாத்திரவார்ப்புக்கள் செய்கிறார் ஆசிரியர். மகாலிங்கம் மாஸ்ரர் –அவரின் மகள் லாவண்யா இருவருடனும் ஆரம்பமாகும் பாத்திரவார்ப்பு சின்னவ

மகன் தினகரன் – மகாலிங்கம் மாஸ்ரரின் மூத்த மகன் சுதந்திரன் –இளைய மகன் சடகோபன் – சுதந்திரனின் சிங்கள இனக் காதலி மனைவி சுமணா – அவளின் தகப்பன் திலகரத்னா – கதிரவனின் கவிதைச் சிநேகிதி சாந்தா– ஆகிய கதாபாத்திரங்களூடாக –வளர்ந்து நாவலை வளப்படுத்துகின்றது. தேவையற்ற கதாபாத்திரங்களைத் தோற்றுவிக்காது உயிர்த்துடிப்புள்ள கதாபாத்திரங்களை உலாவவிடுவதினால் நாவல் உயிர் ஓட்டம் உள்ளதாக மாறி படித்து முடிக்கும் வரை நூலைக் கீழே வைக்கக்கூடாது என்ற உணர்வுத் தூண்டலைத் தருகிறது. இந்த உணர்வுத் தூண்டலுக்கு, மெருகூட்டக் கூடிய வகையில் ஆசிரியரின் வளமார்ந்த தமிழ் நடையும் மண்சார்ந்த மொழிநடையும் அமைகின்றன.

இந்நாவலின் உயிர்த்துடிப்புக்கு மற்றொரு காரணம் தங்கள் நாளாந்த வாழ்க்கைச் சுதந்திரத்தைக் காப்பாற்ற மக்கள் நடாத்தும் போராட்டங்களின் நாளாந்தக் காட்சிகளின் விபரிப்பாக இந்நாவல் விரிந்து செல்வதேயாகும். சுதந்திரத்தைத் தேடும் உணர்வைக் தினகரன், சடகோபன், சுமணா, லாவண்யா ஆகிய கதாபாத்திங்களூடாக ஆசிரியர் வெளிக்கொணர்ந்தாலும் இவர்கள் சுதந்திரத்தைத் தேடும் தன்மை இவர்களின் தற்சார்புக் கொள்கைளிலும் இலட்சியங்களிலும் தங்கி நின்று இவர்களிடையே முரண்கள் தோன்ற வைத்துக் கதையைச் சுவைபடவும் பொருள் படவும் செய்கிறது.

கதை சொல்லும் உத்தி முறையில் நாவல்

வளர்க்கப்படுவதினால் பாத்திரங்களை விளக்குவதற்கும் தனது கருத்துக்களைப் பாத்திரங்களூடாகக் கலப்பதற்கும் ஆசிரியர்க்கு இலகுவாக உள்ளது. மேலும் ஆசிரியரின் சமுக பொருளாதார அரசியல் ஈடுபாடுகளைப் புனைகதையில் தெளிவாக காணமுடிகிறது. சாதிய வெறிக்கு எதிரான போக்கு – ஆன்மீக பலத்தின் தேவை – மனிதாய சேவையில் இறைவனைக் காண வேண்டுமென்ற கோட்பாடு– தமிழ் மக்களின் ஒன்றிப்பும் ஒற்றுமையும் – தேசவிடுதலையே மனிதனின் ஆன்மீக சமுக அரசியல் பொருளாதார விடுதலைகளின் அடித்தளம் என்ற உறுதி, நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசவிடுதலைப் போராட்டத்தில் அனைவரும் பங்காளிகளாக வேண்டுமென்ற அழைப்பு என்பனவெல்லாம் புனைகதையினுடாக வாசகர் மனதில் பலவடிவங்களில் பதியவைக்கப்படுகின்றது. ஆயினும் ஆசிரியர் கேள்விகளை சந்தேகங்களை எழுப்பி விட்டு அவை குறித்து விளக்கமான பதில்களை விமர்சனங்களை முன்வைக்காது விடும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதற்குக் காரணம் நீண்ட வாதப்பிரதி வாதங்கள் கதையினைக் கட்டுரையாக மாற்றி கதையின் சுவையினைக் குறைத்து வாசகனுக்கு அலுப்புத் தட்ட வைத்து விடும் என்ற ஆசிரியரின் முன் எச்சரிக்கையாக இருக்கலாம். ஆனால் சந்தேகங்களுக்கான தெளிவற்ற பதில்கள் வாசகனுக்கு மயக்க நிலையை தோற்றுவித்து ஆசிரியர் என்ன நோக்கத்திற்காக இந்த நூலை எழுதினாரோ அதற்கு எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதற்கான அபாயமும் உண்டு.

இதனை மையமாகக் கொண்டு ஒரு சில முக்கிய சந்தேகங்கள் கேள்விகளை இவ் ஆய்வுரையில் கவனத்திற்கு எடுத்து என் சார்பான விளக்கமளிப்பது ஆசிரியரின் நூல் நோக்கு மேலும் தெளிவுற்று விரிவுற வழிவகுக்கும் என்பது என் நம்பிக்கை.

சிங்கள மக்களிடையிலும் நல்லவர்கள் உண்டு. தமிழர்களுக்கு உதவுபவர்களும் உண்டு (சுமணா) . தமிழர்களிடை ஆயுதப்போராட்டத்தை விரும்பாதவர்களும் உண்டு (சுதந்திரன்). தமிழர்களும் சிங்களவர்களும் கூடி வாழ்வதை இன்றும் விரும்புகின்றார். ஆனால் சிங்களவர்களிடை உள்ள பேரினவாதிகளும் தமிழரிடை உள்ள பயங்கரவாதிகளுமே இந்த இரு இனங்களிடையே இணைவு ஏற்படாதவாறு போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இந்தக் கருத்துக்கு ஓரளவு சாதகமான முறையில் நாவலின் பாத்திரவார்ப்பு அமைந்து விடுகிறது. இந்தத் தமிழ் சிங்கள இணைவை சிங்கள அரசியல்வாதியும் சுமணாவின் தந்தையுமான திலகரத்னாவே அழிப்பதாகக் காட்டினாலும் கூட அது சிங்கள பேரினவாதம் ஒன்று தலைதூக்கி நிற்கிறது- சாதாரண சிங்கள இளைஞர் யுவதிகளிடையே தமிழர்கள் பால் அன்பு பூணும் மனோபாவம் ஒரு சிலரிடத்தில் என்கிலும் இருக்கத்தான் செய்கிறது என்ற கருத்து ணர்வைதான் தூண்டுகிறது. ஒருவேளை ஆசிரியர் இன்றும் தமிழ் சிங்கள இன இளைஞர் யுவதிகளிடையே சிறிய தொகையினரிடை காதல் திருமணம் நடைபெறுவது யதார்த்தம் தானே என்பதன் பிரதிபலிப்பாக இந்த சுதந்திரன்

சுமணா கதாபாத்திரத்தை வார்த்து இருக்கலாம். உண்மையில் தனிமனித பழக்கங்கங்கள் இணைவுகள் கூடல்கள் பிரிவுகள் நெருக்கமடைவது அந்த இனத்தின் தேசியத் தன்மையில் பெரியஅளவில் மாற்றங்களை ஏற்படுத்தமாட்டாது. ஒரு இனத்தின் தேசியத் தன்மை அந்த இனத்தின் நினைவுகூருதலில் தங்கியுள்ளது. இலங்கைத் தீவில் சிங்களவர்க்கே அந்தத் தீவு சொந்தம் தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவோ அல்லது வந்தேறு குடிகளாகவோ வந்தவர்கள் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நினைவு கூருதல். இந்த தமிழர்களின் தாயக உரிமையை சிங்களவர்கள் ஏற்க மறுப்பதே தமிழீழப் பிரச்சினையாகும். இந்நிலையில் தமிழர்கள் தங்கள் தாயக உரிமையினை மீளவும் நிலைநாட்டுவதற்கான வலிமையை பெறும் வரை எந்தச் சிங்களக் குடிமகனும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வினைத் தர முடியாது. தமிழீழ மக்கள் தங்கள் தேசத்தைத் தங்களைப் பாதுகாக்கக் கூடிய தன்மையை தாங்கள் எய்தும் வரை எந்தத் தமிழீழக் குடிமகனும் சிங்களவர்களுடன் குடும்ப உறவுமுறைகளை உருவாக்கியும் கூட தன்மானத்துடன் வாழ முடியாது. இந்த உண்மையினைப் பேசும் பொழுது வரலாற்று உணர்வின் தந்தையாகக் கருதப்படுகிற டில்தே வெறும் ஆய்வு அறிவு-ின் விமர்சனத்தைத் (critique or pure reason) தாண்டி வரலாற்று அறிவுணர்வுக்கு (Historical reason) வருவது தான் யதார்த்தத்தின் ஆழமான போக்காக இருக்க முடியும் என்கிறார். எனவே நாவல் காட்டும் சிங்கள இதயத்தின் கனிவு

துணிவு என்பன சுமணாவின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்ட தனிமனித அனுபவங்களின் விளைவாக எடுத்து நோக்கப்பட வேண்டுமே தவிர தனிமனித மாற்றங்கள் உறவுகள் அரசியல் விடுதலைக்கு உதவக் கூடும் என்ற தவறான எடைபோடலுக்கு அல்லது ஏக்கத்திற்கு உள்ளாகி விடக் கூடாது. இந்த வகையில் பார்க்கையில் 113ம் பக்கத்திலும் 115ம் பக்கத்திலும் வரும் வசனநடைகளில் ஆசிரியர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்பது என் கருத்து.தனி மனித நிலையில் இருக்கும் தங்களிருவருக்கும் இடையிலுள்ள விளங்கிக் கொள்ளும் புரிந்து கொள்ளும் விட்டுக் கொடுக்கும் மனோபாவம் சமூகநிலையில் ஏன் இன்னும் உருவாகவில்லை – 113 ம் பக்கம். எதிரும் புதிருமாக உள்ள சமூகத்தைச் சேர்ந்த இருவரும் இன்பமாக உரையாடிக் கொண்டிருக்கும் போது அதே சமுகங்களைச் சேர்ந்த மற்றவர்கள் ஏன் அடிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைக் கொஞ்சம் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. – 115ஆம் பக்கம்). ஆயினும் இந்த உரையாடல் நாவலில் இடம்பெறுவதை தவறு என்று நான் கூறமாட்டேன் காரணம் இதே கேள்வியைக் கேட்கின்ற தமிழர்கள் பலர் நம்மிடை உள்ளனர். ஆகவே ஆசிரியரின் இந்த உரையாடல் அத்தகையோர் சிந்தனை கூர்மை பெற உதவக் கூடிய முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதே என் கருத்து.

அடுத்துக் தினகரனின் பாத்திரத்தினுடாக மண்மீட்பு முதன்மைபடுத்தப்பட்டதே சிங்கள தமிழ் இனங்கள்

இணைந்து ஒன்றாக போராடித் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை நிலைநாட்ட முடியாமைக்குக் காரணம் என்ற கருத்து புனைகதையில் ஆராயப்படுகிறது. இந்த ஆய்வுக்கான சில விளக்கங்களையும் ஆய்வுரையில் முன்வைப்பது வாசகரின் தெளிவுக்கு அவசியம். சுயநிர்ணய உரிமை என்பது மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் தன்மையாகும். இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தமிழ் மக்கள் நிர்ணயிப்பதற்கு முதலில் சிங்கள அரசாங்கம் சிங்கள மக்கள் தமிழ் மக்களை மக்கள் என அங்கீகரிக்க வேண்டும். இந்த அங்கீகாரத்திற்குத் தமிழ் மக்கள் உடைய தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற தன்மைகளை சிங்கள அரசும் சிங்கள மக்களும் ஏற்க வேண்டும். ஆனால் நான் முன்னர் கூறியதுபோலச் சிங்கள மக்களைப் பொறுத்தவரை தமிழர்களுடைய அடையாளம் என்பது ஆக்கிரமிப்பாளர்கள் அல்லது வந்தேறுகுடிகள். இந்த அடையாளம் சிங்கள மக்களால் நினைவு கூரப்படும்வரை தமிழர்கள் சிறுபான்மையினர். மக்கள் என்ற தகுதியற்ற சிறுபான்மையினருக்கு சுயநிர்ணய உரிமை என்பதைக் கோரும் உரிமையும் இல்லை. அதாவது தமிழீழ மக்கள் என்ற அடையாளத்தைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்த அவர்களின் தாயக மீட்பு முதன்மைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையான பதில் தினகரனின் கேள்விக்கு பதிலாக பாத்திரவார்ப்பு செய்யப்படுவது அவசியம். தனிமனிதர்களுக்கு ஏற்படும் மனித உரிமை மீறல்களை

மனிதாயக் கொடுமைகளை மட்டும் வைத்து ஒரு இனம் விடுதலை பெற்றுவிட முடியாது. அத்தகைய மனித உரிமை மீறல்கள் அற்ற ஒரு ஆட்சியை ஆளும் அரசு உருவாக்குமாறே உலகு வலியுறுத்துமே தவிர துன்புறும் மக்களைப் பிரிந்து செல்ல அனுமதிக்காது.

நாவலில் சிறுபான்மை பெரும்பான்மைப் பிரச்சினையாகவே தமிழீழ மக்களின் பிரச்சினையை மக்கள் பார்ப்பதாகவே கதை பின்னப்படுகிறது. ஆனால் இலங்கைத் தமிழ் மக்கள் தமிழீழ சிங்கள தேச இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக தங்கள் பிரச்சினையைப் பார்க்கத் தொடங்கிய காலம் 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன் ஆரம்பமாகி விட்டது. எனவே 1983ம் ஆண்டுக் காலப்பகுதியை மையப்படுத்தும் புனைகதை வரலாற்றுப் புனைகதையாகிவிடக் கூடாது.

மேலும் தேசவிடுதலைப் போராட்டத்தில் தேசவிடுதலையை ஏற்பவர்கள் ஏற்காதவர்கள் என்ற நிலை தான் இருக்க முடியுமே தவிர கருத்துக்கு ஆதரவானவர்கள் எதிரானவர்கள் என்ற ஒரு நிலை அரசியல் களத்திலேயே இருக்க முடியுமே தவிர விடுதலைக்களத்தில் இருக்க முடியாது. இத்தகைய பார்வையும் புனைகதையில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்குத் தேவையாக உள்ளது.

ஆயினும் ஆசிரியரின் விடுதலை மீதான இயல்பான பற்று புனைகதையில் உள்ள சில தத்துவநிலைச் சரிவுகளுக்கு முண்டு கொடுத்து படிப்பவர் மனதில் விடுதலையில் எம்மாலியன்ற அளவில் பங்கேற்க

வேண்டுமென்ற அவாவைத் தூண்டிவிடுகிறது. அந்த வகையில் நாவல் அதனது இலக்கு நோக்கிய பயணத்தில் வெற்றி பெறுகிறது.

இத்தகைய ஒரு சமகால நாவலை எழுதி வரலாற்றின் பதிவுகளை மக்கள் மனதில் பதிய வைத்துள்ள ஆசிரியர் கரவை மு. தயாளன் பாராட்டுக்குரியவர் என்பதை விட சமுதாயத்திற்கு தான் செய்ய வேண்டிய பங்கொன்றை செய்திருப்பவர் என்பதே மேல். இன்னும் பல நாவல்கள் இதனை தொடர்ந்து அவர் வரலாற்றையும் நிகழ்காலத்தையும் தொடர்புபடுத்தி எழுதி தமிழர்களின் எதிர்காலத்திற்கு வலுவூட்ட எல்லாம்வல்ல இறைவன் அவரை வழிநடத்திட வேண்டுமெனப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

# என்னுரை.....

வணக்கம்.

கடல் கடந்து போனவர்கள் என்னும் இவ் நவீனத்தைக் கடல் கடந்து வாழும் பிரதேசத்திலிருந்து எழுதியுள்ளேன்.

இந் நவீனம் பாரிசிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தமிழன் என்னும் வாரப்பத்திரிகையில் தொடராக வெளிவந்த ஒன்றாகும்.

இந் நவீனத்தில் உலவவிடப்பட்டுள்ள பாத்திரங்கள் யாவும் வாழ்ந்து கொண்டிருக்கும் பாத்திரங்களே.

நவீனத்துக்காக வார்க்கப்பட்டவைகளுமில்லை. இது புனை கதையுமில்லை!

சம்பவங்களும் அவ்வப்போ நிகழ்ந்தவைகளே!

இது உயிரோட்டமான ஒரு நவீனமே!

எண்பதுகளின் முன்பகுதியில், நடுப்பகுதியில், இறுதிப்பகுதியில் நடந்த சில சம்பவங்கள் கலாபூர்வமாகத் தொகுக்கப்பட்டு நவீனமாக்கப்பட்டுள்ளது.

அழகுணர்வு கருதிச் சிலகற்பனைகளை கதையின் யதாரத்தத்தைக் குலைக்காத வகையில் மிகக் கவனமாகப் பதித்துள்ளேன்.

இக் கதையின் காலகட்டம் மிகமிக முக்கியமானது.

பொதுவுடமைத் தத்துவத்தினைச் சார்ந்த இயக்கங்கள் தங்கள் தவறுகளை உள்வாங்க மறுத்து சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தமிழ்த் தேசியவாதம் மேடைத்தமிழ் அரசியல் வாதிகளிடமிருந்து

இளைஞர்களின் முன்னெடுப்பில் முன்நோக்கி நகரத் தொடங்கிய காலம்.

தமிழர்கள் வாழ்வியலில் இது ஒரு புதிய மாற்றமான சூழ்நிலையாகும். இந்தப் பின்னணியின் ஒரு வெளிப்பாடே எனது இந் நவீனமாகும்.

பலகேள்விகளுக்கு விடைகொடாமல் ஆங்காங்கு விட்டுள்ளேன். இது அக்காலகட்டத்தின் உண்மையான நிலை அதுதான் என்பதைக்காட்டுவதற்காகவே அவ்வா விட்டுள்ளேன். அவற்றுக்கானவிடைகள் இன்று வளர்ச்சியடைந்துள்ள தமிழர் தேசிய வாதமும் அதைத்தொடர்ந்து எழுந்துள்ள தமிழர் தாயக் கோட்பாடுமாகும்.

தமிழ் சிங்களப் பிள்ளைகளின் திருமணங்களினூடாக தமிழர் பிரச்சினை பார்க்கப்படுவதாக இந்நாவல் பரப்புரை செய்யவில்லை.

அதேநேரம் இக்கதை நடந்த காலகட்டத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் திருமணஉறவில் ஈடுபடுவது சகஜமான ஒன்று என்பதையும் அதே நேரம் தமிழர் சிங்களவர்க ளுக்கூடான முரண்பாடுகள் கூர்மையடையும்போது தோற்றுகின்ற திட்டமிடப்பட்ட இனக் கலவரங்களிலிருந்து இக்கலப்புத் திருமணதம்பதிகள் கூடத் தப்ப முடியாது என்பதையும் கோடிட்டுக்காட்ட முனைந்திருக்கின்றேன்.

என்னுடைய ஆளுமையையும் விமர்சனங்களையும் ஒவ்வொரு பாத்திரங்களுக்குள்ளும் சர்வ சாதாரணமாகவே உலவவிட்டுள்ளேன்.

இதற்காகவே பாத்திரங்களைத் தாராளமாக உரையாடவிட்டு இவ் உரையாடலினூடாக நவீனத்தை நகர்த்தியுள்ளேன். இந்நவீனம் அரசியல் நிகழ்வுகளின் பதிவே!

இந் நவீனத்துக்கு அறிமுகவுரையை எழுதிய என் நண்பர் மு. நித்தியானந்தன் அவர்களுக்கும் மதிப்புரையை எழுதிய புலவர் சிவநாதன் அவர்களுக்கும் ஆய்வுரையை எழுதிய திரு பற்றிமாகரன் அவர்களுக்கும் என் இதய நன்றிகள்.

என்னதான் சொன்னாலும் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் எப்படி என்னால் இதனை முடித்திருக்க முடியும். என் இதயத்தின் பெரும்பகுதி அவர்களுக்குத்தானே!

இதன் அட்டைப்படத்தைக் கேட்டவுடன் மறுக்காது வரைந்து தந்த திருமதி ராதா அவர்களுக்கும் அதனைக் கணணியில் ஒழுங்கமைத்த JJ Graphics இனருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்.

நவீனத்தினைத் தட்டச்சில் பொறித்துத்தந்த வைத்தியநாதக் குருக்களுக்கும் இதனைக் குறுகிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுத்தந்த கொழும்பிலுள்ள UK Printers உரிமையாளர் குணாளனுக்கும் அவர்தம் ஊழியர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்.

**கரவை மு. தயாளன்**

[illegible]

[illegible] JJ Graphics [illegible]

[illegible] UK Printers [illegible]

[illegible]

# கடல் கடந்து போனவர்கள்

# ஒன்று

லாவண்யாவை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிவதனால் நீங்கள் ஒன்றும் குறைந்து விடப் போவதுமில்லை. லாவண்யா அழகிமட்டுமல்ல புத்திசாலியும்கூட!
கிராமங்களிலே வேலிகளை ஆக்கிரமித்திருக்கும் கிளுவை மரங்கள் உங்களுக்கு அத்துப்படி என்று நினைக்கின்றேன். அந்த மரங்களின் குருத்திலைகளே அவளின் கண்கள். கிளி மூக்கென்றால் என்ன என்று என்னையே நான் கேட்டதுண்டு. லாவண்யாவைப் பார்த்தபின் விடை தானாக வந்து விட்டது.

லாவண்யாவை வர்ணிப்பதல்ல எனது நோக்கம். அவளை அப்படியே விட்டுவிட்டு அவள் வாழும் கிராமத்துக்கு
வருவோம்.
கருணையூர்தான் அந்தக் கிராமம். பெயரைப் பார்த்து ஏமாந்துவிடாதீர்கள்! அங்கிருக்கும் மனிதர்கள் எல்லாம் கருணையுள்ளம் கொண்டவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். அப்படி நினைத்தால் நீங்கள் ஏமாறப் போவதென்னவோ நிச்சயம். இந்தக் கருணையூரிலிருந்துதான் நான் நேசிக்கும் இந்தத் தமிழ்ச் சமூகத்தின் சகாப்தம் ஆரம்பமாகின்றது. இப்படி நான் சொல்லிவிட்டேன் என்பதற்காக உங்கள் எல்லோருக்கும் இங்கிருந்துதான் சகாப்தம் ஆரம்பமாகின்றது என்பதல்ல. ஒரு நாட்டில் விடுதலைப் போர் நடக்கும்பொழுது ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அவர் வாழும் ஊரிலிருந்தே போரின் சகாப்தம் ஆரம்பமாகும். இதுவே நியதி.

அது வேறு ஒரு அழகான கிராமமாகக் கூட இருக்கலாம். ஆனால் திருப்பங்களும் சம்பவங்களும் வேறுபடக் கூடிய சாத்தியம் இல்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். மறுத்தால் மறுங்கள் எனக்கென்ன. கருணையூரில் கருணையுள்ளம் கொண்டவர்கள் இல்லா விட்டாலும் அழகான ஊர். இந்த ஊரின் அழகே அதன் உயர்ந்து வளர்ந்த பனை மரங்கள்! பனை மரத்தோடு காவோலைகள், காற்றின் அசைவினால்

அசைந்து பனை மரத்தோடு உராயும் போது எழும் ஓசையே இக் கிராமத்தின் இனிய சங்கீதம்.

அழகான சிறிய வீடுகள்,அடக்கமான ஆண்டவன் சந்நிதானங்கள், இவ்வூரின் பெருமைக்குச் சான்றுகள். பாம்பு போல் வளைந்து செல்லும் ஒழுங்கைகள்–வரிச்சுமட்டைக–ளினால் அமைக்கப்பட்ட வேலிகள் – இவையெல்லாம் இவ்வூரின் கலைத்திறனுக்குச் சாட்சிகள். இப்படியான ஊரின் புத்திரியான லாவண்யாவின் அழகை ரசித்த நாம் இன்னும் அவள் யாரென்பதை அறியவில்லை. மகாலிங்கம் மாஸ்டர் என்றழைக்கப்படுகின்ற தமிழாசிரியரின் இரண்டாவது புதல்வி தான் லாவண்யா.

பண்பானமனிதர்–பழகுவதற்கு இனியவர்–சிவத் தொண்டர். இவை லாவண்யாவின் அப்பாவைப் பற்றிய ஊராரின் அபிப்பிராயங்கள்!

கருணையூருக்கும் ஒரு சிறு பட்டணம் உண்டு. இரண்டு தியேட்டர்கள், பத்துப் பதினைந்து கடைகள், ஒரு பெரிய சந்தை, இரண்டு பெற்றோல் நிலையங்கள் இவ்வளவையும் சேர்த்துப் பட்டணம் என்று அக் கிராமத்தவர் அழைப்பார்கள். இப்பட்டணத்தின் நாற்சந்தியில் நின்று கொண்டு கிழக்கே பார்த்து நடக்க நூறு யார் தூரத்தில் ஒரு தியேட்டர் வருகிறது. அந்தத் தியேட்டருக்கு முன்னால் ஒரு வீதி உண்டு. இவ் வீதியால் நடந்து செல்ல,

வடக்குப் பக்கத்தில் ஒரு மண் ஒழுங்கை வருகிறது. இந்த மண் ஒழுங்கையில் நான்காவது வீடுதான் லாவண்யாவின் வீடு. அழகான கல் வீடு. நாலைந்து வாழை மரங்கள், ஒரு பலாமரம், வீட்டு வளவுள் சிரித்துக் கொண்டு நின்றன. வீட்டுக்கு முன்னால் சிறிது தூரம் சதுரப்பட புல் செதுக்கப்பட்டு வெறுந்தரை கம்பீரமாகப் படுத்திருந்தது. இவ்வளவு இனிமையான அந்த வீட்டுள் அன்று சோகம் நிரம்பியி ருந்தது. அரிக்கன் லாம்பு ஒன்று அரைவாசிச் சிம்னி புகை பிடிக்க வலிந்து ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. லாவண்யா ஒரு மூலையில் துவண்டு போயிருந்தாள்.

கண்கள் அழுது வீங்கி இருந்தன. நடந்த சம்பவம் அவள் எதிர்பாராத ஒன்று. இனி என்ன செய்வது? அவளுக்குள் எழுந்து பதில் தெரியாமல் அவளுக்குள்ளே அடங்கிப் போன வினா. அவளுக்கு யார் ஆறுதல் சொல்வது.?

சுயநலம் நிறைந்த அந்தக் கிராமத்தவர்கள் இன்பத்தில் பங்கெடுத்துக் கொள்கிறளவுக்குத் துன்பத்தில் பங்கு கொள்ள மாட்டார்கள். அன்னையைப் பிறக்கும் போதே பறி கொடுத்து விட்டாள். அண்ணன் கொழும்பில் வேலை செய்கிறான். தம்பி சிறியவன். அப்பாதான் அவளுக்கு எல்லாமாக இருந்தார்.

மாலை பாடசாலை முடிந்ததும் வழக்கம் போல் வீடு

நோக்கி வந்து கொண்டிருந்தார். வழியில் இராணுவத்தினர் மறித்தார்கள். சைக்கிளைப் பறித்துப் போட்டு, மிதித்துத் துவைத்தார்கள். அவரைக் கன்னாபின்னா வென்று திட்டினார்கள். தூக்கி ட்ரக்கில் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள்.

ஏன்?

இதற்கு விடை இல்லை. இந்தச் சமூகத்தின் நடைபாதைகளில் பலதரம் இப்படியான வினாக்கள் எழுப்பப்படும். ஆனால் விடை மட்டும் யாருக்கும் தெரியாது. விடை தெரிந்தவர்கள் தெரியாமல் செய்யப்படுவார்கள். இது ஒரு சமூகத்தின் கழுத்தை நெரித்துக் கொள்வதற்கான முன்னேற்பாடாகும். அந்தக் கிராமத்தின் ஒவ்வொருவர் வீட்டிலும் மகாலிங்கம் மாஸ்டர்தான் கதையின் நாயகர்.

காலையில் திருநீற்றுப் பூச்சுடன் பாடசாலைக்குப் புறப்பட்டவர்தான். வழக்கம்போல பாடசாலையிலிருந்து நான்கு மணிக்குப் புறப்பட்டவர் இன்னும் வரவில்லை. ஆறு மணியாகியும் அவர் வரவில்லை என்ற பின்புதான் அவள் பதட்டமடைந்தாள்.

லாவண்யா என்று கூப்பிடும் குரல் கேட்டு, வெளியில் வந்து பார்த்தாள். பக்கத்து வீட்டு வேலியருகில் பவளமக்கா நின்று கொண்டிருந்தாள்.

“லாவண்யா... கொப்பரை ஆமிக்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம்.”

லாவண்யாவுக்கு இருதயமே நின்றுபோய்விடும் போலிருந்தது. அப்போ கலங்கிப்போய் மூலையில் துவண்டவள்தான் இன்னும் எழுந்திருக்கவில்லை.

மகளுக்குக் கூறிவிட்டுப் பாடசாலைக்குப் புறப்பட்ட மகாலிங்கம் மாஸ்டருக்கு மாலையில் நடக்கப் போவது தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.
திரும்பவும் வேலியருகில் சத்தம் கேட்டது. பவளமக்காதான் நின்றிருந்தாள்.
"கொப்பரைக் கொண்டு போகயில்லையாம். தபாற்கந்தோருக்கு முன்னாலை அடிச்சுப் போட்டிட்டுப் போட்டாங்களாம்"

லாவண்யா துடித்துப் பதை பதைத்து ஓடினாள். மகாலிங்கத்தார் அனுங்கியபடி மின்சாரக் கம்பமொன்றோடு சாய்ந்திருந்தார். எல்லோரும் கூடி நின்று வேடிக்கை பார்த்தார்களே ஒழிய யாரும் அவருக்கு உதவுவதாக இல்லை.

அவ் விடத்துக்கு வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்த லாவண்யா நிலைமையைப் பார்த்து ஏங்கிப் போனாள். அங்கு நின்ற சனத்தைப் புழுவைப் பார்ப்பதைப் போல் பார்த்து விட்டுத் தகப்பனைத் தூக்கப்போனாள். அப்போது அவள் எதிர்பாராமல் ஒரு உதவிக் கரம் சனக்கூட்டத்திலிருந்து எழுந்தது.

# இரண்டு

வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற கூட்டத்திலிருந்து அவளுக்கு உதவ வந்தவன் வேறு யாருமல்ல. உங்களுக்கு மிகவும் பரிச்சயமான தினகரன்தான். பத்து வருடங்களுக்கு முன்பு கருணையூரை விட்டுப் பட்டணம் சென்றவன் இன்று வந்திருக்கிறான். வந்த இடத்தில் ஆரம்பமே இப்படியாகி விட்டது.

மகாலிங்கம் மாஸ்டருக்கு அடி விழுந்ததோடு ஆரம்ப மாகவுள்ள புதிய சகாப்தத்தின் நுழைவாயிலுக்கு வந்த தினகரன் இதற்கு முந்திய சகாப்தத்தின் கதாநாயகனாக இருந்தான் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்தத் தினகரன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். மனிதர்களுக்குள்ளேயே ஒரு பிரிவினரை தீண்டத் தகாதவர்களாகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும் ஒதுக்கி வைக்கின்ற பெருமை தமிழ் இனத்

துக்கு மட்டுமே தனித்துவமான ஒன்று. இந்த நிலையை அகற்றும் போராட்ட வியூகத்தில் தன் குடும்பத்தைப் பறி கொடுத்த கதையே ஒரு சோக வரலாறுதான். மிருகங்கள் என்று சபித்த கூட்டத்திலிருந்து உதவிக் கரம் ஒன்று நீண்டதால் ஆச்சரியப்பட்ட லாவண்யா திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு அவனைத் தெரியவில்லை.

ஆனால் ஏதோ ஒரு ஆதர்ச சக்தி அவனின் உத வியை ஏற்க அவளைத் தூண்டியது. அவன் அவரைத் தூக்கித் தன் தோளில் வைத்துக்கொண்டு நடந்தான். அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவன் தினகரனை இனங்கண்டு சின்னவன் மகன் என்று முணுமுணுத்தது தினகரன் காதிலும் விழுந்தது. அவள் வழிகாட்ட அவன் நடந்து கொண்டிருந்தான். பக்குவமாக அவரைப் படுக்கையில் படுத்தினான். வெள்ளைத் துணியும் நிகச்சூட்டில் தண்ணீரும் தர முடியுமா என்று கேட்டான். அவள் பம்பரமாகச் சுழன்று அவன் கேட்டவற்றைக் கொண்டு வந்து கொடுத்தாள். பக்குவமாக அவரின் காயங்களைத் துடைத்து விட்டான்.

“பிளாஸ்டர் இருக்குமா?” அவள் எடுத்துக் கொடுத்தாள். அவன் செய்வதெல்லாவற்றையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஆச்சரியமாகவும் அதே நேரம் ஆறுதலாகவும் இருந்தது. அவன் கதைக்கிற பாங்கு, பழகும் விதம் அவனை ஒரு படித்தவனாக அவளுக்கு இனம் காட்டின.

அவளைப் பொறுத்தவரை அவனின் பூர்வீகம் ஒன்றும் தெரியாது. தெரிந்திருந்தாலும் அல்லது இனிமேல் தெரிந்தாலும் அது ஒன்றும் அவளைப் பாதிக்கப் போவதில்லை.

"ஒரு போர்வை கொண்டு வந்து போர்த்துவீர்களா?" என்று அவன் கேட்க நினைப்புகளிலிருந்து விடுபட்டு அம்பு போல் பாய்ந்து அவன் கேட்டதைக் கொண்டு வந்து போர்த்தி விட்டாள். காரியங்களை முடித்து விட்டு வெளி முற்றத்திற்கு வந்தான்.

சூரியன் தன்பாட்டுக்கு முற்றத்தில் காய்ந்து கொண்டிருந்தான்.

"உள்ளே வந்து கொஞ்சம் இருங்களேன்." என்ற குரல் கேட்டுத் திரும்பினான். லாவண்யாதான் நின்றிருந்தாள்.

மெல்லிய புன்சிரிப்போடு உள்ளே வந்தமர்ந்தான்.

"தேத்தண்ணி போட்டுத் தரவா?" என்று கேட்டாள்.

"கேட்டுத்தான் தருவீங்களோ?" என்று அவன் பதிலுக்குக் கேட்ட போது, 'க்ளுக்' கென்று சிரித்து விட்டுக் குசினிக்குள் ஓடினாள். அவளுக்குள் அவளையுமறியாத ஒரு பரவசம். அவளுக்குள் அவன் ஒரு எழுதாத கவிதையாகிக் கொண்டிருந்தான். தேநீரைப் போட்டு வந்து அவனிடம் கொடுத்துவிட்டு, ஒரு ஓரமாக அவள் அமர்ந்திருந்தாள். இருவரும் எதுவுமே கதைக்கவில்லை.

அவள் நிலத்தில் வெறுங்கையால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். அவன் அவள் கொடுத்த தேநீரைச் சுவைத்துக் கொண்டிருந்தான்.

"அப்ப நான் போட்டு வாறன்" என்று அவன் கூறிய பின்பு தான் அவள் சுயத்துக்கு வந்திருந்தாள். அவளை அறியாமலே அவள் தலையாட்டினாள். ஏதோ கேட்கச் சொல்லி மனம் உந்தியது. கேட்கவில்லை! அதற்குள் அவன் படலையைத் திறந்துகொண்டு வெளியே போய் விட்டான். நன்றி கூடக் கூறவில்லையே என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

லாவண்யாவுக்கு எல்லாமே கனவில் நடந்தவை போல் இருந்தன. தகப்பன் இராணுவத்தால் நையப்பு டைக்கப்பட்டதும் எங்கிருந்தோ உதவிக்கு அவன் வந்ததும் நம்ப முடியாதவைகளாக இருந்தன. அவனுடைய பெயரைக் கூடக் கேட்கவில்லையே என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

யாரென்றே தெரியாத, எங்கிருந்தோ வந்த அவன் எப்படித் தன் மீது இப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினான், என்பது அவளுக்குப் புரியவேயில்லை. அவனை மீண்டும் பார்க்கவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. தகப்பன் முனகுவது கேட்டது. அருகில் போய் அமர்ந்து கொண்டாள். வெளிக்காயம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் ஊமைக்காயம் கூடுதலாக இருந்தது. அவரால் கை கால்களை அசைக்க முடியவில்லை. நெஞ்சுப் பகுதியில் நல்ல நோவிருந்தது. கிராமத்து வைத்தியர் ஒருவர் வந்து பார்த்தார். அவரை அனுப்பி வைத்ததும் அவன் தான். அவனைப் பற்றி அவரிடம் விசாரிக்க நினைத்தவள் பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். அவர் கொடுத்த

தைலத்தை வாங்கி வைத்துக் கொண்டு விடை கொடுத்தாள்.

அன்று ஊரார்கள் சிலர், அவனை நையாண்டியாகப் பேசியதும் காதில் விழுந்தது. அவளைப் பார்த்துச் சிலர் கொடுப்புக்குள் சிரிக்கவும் செய்தனர். இவர்களுடைய கதைகள், நடத்தைகளைப் பார்க்கும்போது அவன் இந்த ஊரவனாக இருக்கவேண்டும் என்று மட்டுமே முடிவு செய்திருந்தாள். இவர்களுடைய சிரிப்புக்கள் நையாண்டிகளை அவள் லட்சியம் செய்யவேயில்லை. அவள் அன்று அநாதரவாக வீதியில் நின்றபோது வேடிக்கை பார்த்த இவர்களை மனிதர்களாகவே அவள் கணக்கெடுக்கவில்லை. தகப்பனுக்கு நடந்த இந்த நிகழ்ச்சி அவள் மனதுள் ஒரு பெரும் புயலையே உருவாக்கிவிட்டிருந்தது. நாட்டிலே தற்போது தீவிர வாதம் ஆரம்பித்திருப்பதை எல்லாம் அவள் பத்திரிகை வாயிலாக அறிந்தது தான். அந்தத் தீவிரவாதத்தின் ஒரு பக்க விளைவில் தன் குடும்பமும் பாதிக்கப்படும் என்று அவள் கனவு கூடக் கண்டதில்லை.

"அண்ணனுக்குக் கடிதம் எழுதினியோ?" என்று மகாலிங்கத்தார் மெதுவாக முனகினார். இது வரைக்கும் அவள் தனக்கொரு அண்ணன் இருப்பதையே மறந்திருந்தாள்.

"இல்லை இனிமேல்தான் எழுதவேணும்" என்று கூறியவள் "அண்டைக்கு என்ன நடந்ததப்பா?" என்று கேட்டாள்.

"எனக்கென்னம்மா தெரியும். வந்தான்கள், பிடிச்சான்கள், அடிச்சான்கள், அதுக்குப் பிறகு எதுவும் தெரியாது."

என்றார்.

லாவண்யாவுக்கு அதைக் கேட்கக் கேட்க அழுகை அழுகையாக வந்தது. விம்மிவிம்மி அழுதாள்.

"உங்களை அடிச்சுப் போட்டிட்டுப் போட்டான்கள். எனக்குத் தெரியவந்து நான் ஓடிவர... ஒருசனம் கூட உதவயில்லை எல்லாம் வேடிக்கை பார்த்ததுகள். இண்டைக்கு வந்து குசலம் விசாரிக்கினம். இனி ஆரும் வந்தால் விடமாட்டன்" என்று பொங்கி வெடித்தாள். அப்போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. விதானையார் வந்து கொண்டிருந்தார். லாவண்யாவுக்குக் கோபம்

உச்சந் தலைக் கேறியது. அண்டைக்கு வேடிக்கை பார்த்தவர்களில் இவரும் ஒருவர். லாவண்யாவின் குணம் தெரிந்து நடக்கப் போவது புரிந்து விட்டது. "கொஞ்சம் அமைதியாய் இரம்மா" என்றார்.

"சும்மா இருங்கப்பா உவங்களையெல்லாம் மனிசரெண்டு மதிச்சா ஆண்டவன் மனிசரைப் படைச்சதுக்கு அர்த்தம் இல்லாமல் போயிடும்" என்றவள் சட்டென்று எழும்பிக் கதவடிக்குப் போனாள்.

"என்னம்மா கொப்பருக்கு இப்ப எப்பிடி?" என்றபடி உள்ளே வந்தார்.. அவ்வளவுதான் லாவண்யா பொரிந்தாள்.

"அப்பருக் கொண்டுமில்லை. அவர் நல்லாய்த்தான் இருக்கிறார். நீங்கள் அவரைப் பார்க்கத் தேவையில்லை. வெளியிலை போங்கோ" என்று நறுக்குத் தெறித்தாற் போல் கூறினாள். இதனை விதானையார் எதிர்பார்க்கவில்லை. பதிலுங் கூறவில்லை. விறுவிறுவென்று போய்விட்டார்.

"லாவண்யா, ஏனம்மா உப்பிடிச் செய்தனீ"
"உவங்களெல்லாம் என்ன பெரியமனுசன். நீங்கள் பேசாமல் படுங்கோ" என்று கூறிவிட்டுச் சமையல் வேலை பார்க்கக் குசினிக்குள் போய்விட்டாள். பம்பரம் போல் சுழன்று குசினி வேலைகளைப் பார்த்தாள். தகப்பனுக்குப் பத்தியச் சாப்பாடு எல்லாம் செய்து வைத்து விட்டு வந்து பார்த்தாள். அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். நேரத்தைப் பார்த்தாள். நான்கு மணியாகி விட்டிருந்தது. அவரை எழுப்பிச் சாப்பாடு கொடுத்தாள்.
"பிள்ளை நீ பொம்பிளை. கண்டபாட்டுக்கு ஆட்களை எடுத்தெறிஞ்சு நடவாதை"
"நீங்கள் பேசாமல் சாப்பிடுங்கோ. இப்ப கதைக்க வேண்டாம்" என்று அவள் கூறிய பாணி அவரை வாய் மூடச் செய்து விட்டது. அவர் சாப்பிட்டு முடிந்ததும் தானும் சிறிது சாப்பிட்டு விட்டுச் சாய்மனக் கதிரையில் படுத்தபடி, கல்கி புத்தகம் எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். அப்படியே தூங்கிப் போய் விட்டாள். தூக்கம் கலைந்து அவள் எழும்பிய போது நேரம் எட்டு மணி. மெதுவாக எழுந்து வீட்டுக்கு வெளியில் வந்தாள். நிலவு சாய்ந்து கொண்டிருந்தது. எவ்வித சலனமுமில்லாமல் நிம்ம தியாகப் பவனி வந்து கொண்டிருக்கும் நிலவைப் பார்க்க அவளுக்குப் பொறாமையாக இருந்தது. அவன் வந்து போய் மூன்று நாட்கள் ஆகிவிட்டது. சுகம் விசாரிக்கவாவது வந்து போவான் என்று நினைத்துக் கொண்டாள். அவன் வராதது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

எங்கேயிருக்கிறான் என்பதைக்கூட அன்று கேட்க மறந்து விட்டாள். நினைவுகள் அவளையு மறியாமல் அவனைச் சுற்றியே ஓடிக் கொண்டிருந்தன.

# மூன்று

படலை திறக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். அவன் தான் வந்து கொண்டிருந்தான். அவளால் அவள் கண்களையே நம்ப முடியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தாள். உண்மையிலே அவன் வந்து கொண்டிருந்தான். லாவண்யாவின் இதயம் டிக்.. டிக்..கென்று அடித்துக் கொண்டது.

"எப்படி அப்பாவுக்கு சுகமா?" என்று கேட்டுக் கொண்டே வந்தவன் மகாலிங்கத்தார் அயர்ந்து தூங்குவதைக் கண்டு தன் குரலைத் தாழ்த்திக் கொண்டான். லாவண்யா கதிரை ஒன்றைக் கொண்டு வந்து முற்றத்திற் போட்டாள். அவன்

அதில் அமர்ந்து கொண்டான். அவளும் அவனுக்கு முன்னால் அமர்ந்து கொண்டாள்.

இருவரும் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தனர்.

"என்ன பேசாமலிருக்கிறியள்?" அவன் மௌனத்தைக் குலைத்தான். அவள் பதில் சொல்வதற்குள் சத்தத்தால் தூக்கம் கலைந்த மகாலிங்கத்தார்,

"என்னம்மா யாரோடை கதைச்சுக் கொண்டிருக்கிறாய்..?" என்று கேட்டார்.

"அண்டைக்கு உங்களை ஆமிக்காரன் அடிச்ச பிறகு இந்த ஊர்ச் சனங்களெல்லாம் வேடிக்கை பார்க்கத் தானாய் வந்து உதவினவர் வந்திருக்கிறாரப்பா"

"அந்தத் தம்பியை உள்ளே கூப்பிடம்மா. அவள் வெளியே போய் அவனைக் கூப்பிட்டாள். அவன் உள்ளுக்கு வரவும் அவனையே கூர்ந்து பார்த்தார்.

"இவரும் இந்த ஊர்தானாமப்பா"

"எனக்கும் நல்லாய்ப் பார்த்த முகமாய்க் கிடக்குது. நீர் ஆற்றை மகன் தம்பி?"

இந்தக்கேள்விக்கு உடனே பதில் கூறாத தினகரன் சிறிது தாமதித்து, "உங்களுக்குச் சின்னவனைத் தெரியுமோ?"என்று கேட்டான்.

இந்தக் கேள்வியால் சலசலத்துப் போன மகாலிங்கத்தார் பல வருடங்களுக்கு முன் சின்னவனின் குடும்பத்துக்கு நடந்த கொடுமையை ஒரு தரம் நினைவில் கொண்டு வந்தார். அந்தச் சின்னவனின் மகனா இவன்?

தனக்குள் தானே கேட்டுக் கொண்ட மகாலிங்கத்தார் மறு வார்த்தை பேசாமல் வாயடைத்துப் போனார்.

எந்தச் சின்னவனது மரணத்துக்கு நேரடியாக இல்லாவிட்டாலும் மறை முகமாகக் காரணமாக இருந்தாரோ, அந்தச் சின்னவனது மகன் இன்று அவருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்திருக்கின்றான்.

மகாலிங்கத்தாரின் உடலும் உள்ளமும் கூசின. தினகரனின் கண்கள் கலங்கியிருந்தன. லாவண்யா இருவரையும் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதுவும் புரியவில்லை. அவர்களின் உரையாடலிலிருந்து ஏதோ தப்பான காரியம் நடந்திருப்பதாக மட்டும் அவளுக்குப் புரிந்தது. அதற்குப் பிறகு அவர்கள் ஏதேதோ எல்லாம் கதைத்தார்கள். லாவண்யா அவனுக்குத் தேனீர் கொண்டு வருவதற்காகக் குசினிக்குள் போய் விட்டாள். ஊரில் ஏற்பட்டுள்ள பலமாற்றங்களைப் பற்றி இரு வரும் கதைத்துக்கொண்டனர். லாவண்யா அவர்களின் உரையாடல்களில் கலந்து . கொள்ளாவிட்டாலும் விடயங்களைக் கேட்டுக் கிரகித்துக் கொண்டாள். அவனோடு ஆறுதலாகக் கதைக்க வேண்டுமென மனதிற்குள் அவள் நினைத்திருந்தாலும் அன்றைய சூழ்நிலை அதற்கு இடம்கொடாதென விளங்கிக் கொண்டதால் மௌனமாகிக் கொண்டாள். ஆனாலும் அவனைப் பற்றிய பல தகவல்களைப் பட்டும் படாமலும் புரிந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினான் தினகரன். ஓலைக் குடிசையின் முன்னால் இருந்தவாறு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன். பத்து வருடங்களுக்கு முன் இதே வளவில்தான் அந்தப் பயங்கர சம்பவம் நடந்தது. தினகரனின் தகப்பன் சின்னவன் படிப்பறிவில்லாதவனாக இருந்தாலும் **நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்** என்று கூறி வாழ்ந்து வந்தவன். ஊரில் இருக்கிற உடையார், விதானையார், கோயில் தர்மகர்த்தா ஆகிய யாரையும் அவன் மதிப்பதேயில்லை. எல்லாரையும் அவன் சாத்தானின் சொந்தக்காரர்கள் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வான். சாதி என்ற பெயரால் தன்னையும் தன் இனத்தவர்களையும் இவர்கள் ஒதுக்கி வைப்பதை அந்தக் கிராமத்திலேயே முதன் முதல் எதிர்த்தவன் அவன்தான். இது அங்கு ஒரு சலசலப்பையே உண்டு பண்ணிவிட்டது. அவனை ஒழித்துவிட அந்த ஊரின் மேல் மட்டங்கள் தீர்மானித்து விட்ட மறுநாளே அந்தக் கொடுமை நிகழ்ந்தது. பட்டப் பகலிலே சின்னவனின் குடிசை கொழுத்தப்பட்டது. குடிசைக்குள் சின்னவன், அவன் மனைவி, கைக் குழந்தை—உதவிக்கு யாருமே வரவில்லை. அந்தச் சம்பவம் நடப்பதற்குச் சற்று முன்பு ஏதோ சாமான் வாங்கத் தினகரனைக் கடைக்கு அனுப்பியிருந்ததால் அவன் தப்பினான்.

கடையால் அவன் திரும்பி வந்தபோது வீடு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்தக் கொடிய

தீயில் குடும்பத்தையே பறி கொடுத்துவிட்டுப் போனவன் இப்போது வந்திருக்கின்றான். வானத்தையே பார்த்துக் கொண்டிருந்த தினகரனுக்குச் சிரிப்பு வந்தது. அன்றைக்கு வானத்தில் போன நிலாதான் இன்றைக்கும் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் சமூகம் தான் எவ்வளவு மாற்றங்களை அடைந்து விட்டது. சமூகத்தில் மனிதனே பிரிவுகளை உண்டு பண்ணுகிறான். பின்பு அந்தப் பிரிவுகளில் மனிதனே விழுந்து அழிந்தும் விடுகின்றான். தினகரன் போக்கோ வித்தியாசமானது. எதிலும் அவன் சுதந்திரமாக இருக்கவே விரும்புகின்றான். சிறு வயதிலே நடந்த சம்பவம் அவன் மனதில் ஆழமாகவே பதிந்து விட்டது.

அன்றிலிருந்து இன்று வரைக்கும் அவன் எங்கு ஒரு அநியாயம் நடந்தாலும் அதில் தானாகவே தலையிடு வது வழக்கமாகிவிட்டது. இதனால் பல தடவை பிரச்சனைகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட போதும் சலித்ததில்லை. பழைய நினைவுகளில் சிக்குப்பட்டு வானத்தையே நோக்கிக் கொண்டிருந்த தினகரன், அவற்றிலிருந்து விடுபட்டுச் சுய நினைவுக்கு வந்த போது நேரம் பத்தாகி விட்டிருந்தது. லாவண்யா வீட்டுக்குப் போனால் என்ன? என்று மனம் கேட்டது. இப்போ மூன்று நான்கு மணி நேரங்களுக்கு முன்தான் அங்கு சென்று வந்திருந்தான். மீண்டும் போவதென்பது அவனுக்கு அநாகரிகமாகப்பட்டது. அத்தோடு சாதிப் பிரச்சினை வேறு.

சாதி வெறி பிடித்தவர்களில் மகாலிங்கம் மாஸ்டரும் ஒருவர் தான் என்பது அவனுக்குத் தெரியாததல்ல. வெகு சுலபமாக அவருடைய சாதிவெறி அடங்கியிருக்கலாமென நினைப்ப தற்கு அவன் உலகம் புரியாதவனுமல்ல. ஆனாலும் அவருடைய கதைகளில் சில மாற்றங்கள் இருப்பதையும் அவன் அவதானிக்காமலில்லை. தன்னுடைய மனம் லாவண்யாவின் பால் ஈர்க்கப்படுவதை அவன் அவ்வளவாக விரும்பாவிட்டாலும் சில விடயங்கள் மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டுத் தான் நடக்கின்றன என்பது உலக நியதிதானே.

இதற்கு எந்த வகையிலும் தினகரன் விலக்கல்லவே.

தினகரன் எழுந்து நடக்கத் தொடங்கினான்.

# நான்கு

லாவண்யா வீட்டுக்கு வந்து கதவைத் தட்டியபோது லாவண்யா முற்றத்தில் எதையோ காயப் போட்டுக் கொண்டிருந்தாள். தினகரனின் வருகையை அவள் மனம் எதிர் பார்த்திருந்த போதும் அவன் இவ்வளவு விரைவாகத் திரும்பவும் வருவானென எதிர்பார்க்க வேயில்லை. ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியில் திளைத்தாள். எதையுமே காட்டிக்கொள்ளமல் அவனை உள்ளே தகப்பனிடம் அழைத்துச் சென்றாள். மகாலிங்கத்தாருக்கும் அவனுடைய வருகை வியப்பாகத்தான் இருந்தது.

"என்ன தம்பி திரும்ப வந்திருக்கிறியள்?" என்று கேட்ட அவர் உடம்பை சிறிது நெளித்துக் கொண்டார்.

"என்ன மாஸ்டர் நோ இன்னும் இருக்குது போல..."

"ஆண்டவன் புண்ணியத்திலை கொஞ்சம் பரவாயில்லை.

நாரியுக்கைதான் கொஞ்சம் பிடிக்குது தம்பி!" என்று கூறிக் கொண்டே நெளிந்தார்.

"கொஞ்ச நாளிலை எல்லாம் சரிவரும் மாஸ்டர்" என்று கூறிவிட்டு லாவண்யாவைப் பார்த்தான் அவளைக் காணவில்லை.

"தம்பி கொழும்பிலை என்ன செய்யிறீர்?" என்று பேச்சை ஆரம்பித்து அவனைப் பற்றிய விபரங்களை அறிய முற்பட்டார் மகாலிங்கத்தார்.

"நான் ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருக்கிறன் மாஸ்டர். இப்பவும் பத்திரிகை அலுவலாய்த்தான் வந்தனான்"

"தம்பி பழசை எல்லாம் நினைவிலை வைத்திருக்கக் கூடாது. இண்டைக்கு நீங்கள் இல்லை எண்டால் என்ரை பிணம் தான் வீட்டுக்கு வந்திருக்கும்"

நீங்கள் என்று மகாலிங்கத்தார் தன்னை அழைப்பதை மனதுக்குள் ரசித்துக்கொண்டான் தினகரன். காலமாற்றங்கள், சூழ்நிலையின் தேவைகள் ஒரு மனிதனை அவனது பாரம்பரிய பழக்க வழக்கங்களில் இருந்து, புதிய உலகத்தின் காலடியில் மண்டியிட வைக்கும் நிலையைப் பத்திரிகையாளனாகிய தினகரனது மனம் புரிந்து கொள்ள வெகு நேரம் தேவையாக இருக்கவில்லை. ஆனாலும் சாதி வெறி இவ்வளவு சீக்கிரம் அவரது மனதிலிருந்து அகன்றிருப்பது அவனுக்கொரு கேள்விக் குறியாகவே இருந்தது. இதற்குள் தேநீருடன் வந்து நின்றாள் லாவண்யா. தேநீரைப் பருகிக்கொண்டே இவரிடம் உதவி

கேட்கலாமா விடலாமா என்று மனதுக்குள் போராடி இறுதியில் கேட்டே விடுவது என்ற முடிவுடன்,
"மாஸ்டர் எனக்கு நீங்கள் உதவ வேண்டுமென்றான்" அவன் என்ன கேட்கப் போகின்றான் என்பதை ஆவலோடு லாவண்யாவும் மகாலிங்கத்தாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.
"உங்களுக்கு நடந்தது முழுவதையும் எனக்கு நீங்கள் ஒன்றும் மறைக்காமல் சொல்ல வேண்டும்" என்று அவன் கேட்டதும் அவர்கள் இருவருக்கும் சப்பென்று போய்விட்டது. அவர்கள் என்ன எதிர்பார்த்தார்களோ தெரியவில்லை ஆனால் அவன் கேட்டது நிச்சயமாக அவர்கள் எதிர்பார்த்ததில்லை. சிறிது நேரம் மயான அமைதி அங்கு நிலவியது. லாவண்யா தகப்பனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.
"சொல்லிறதிலை ஒன்றும் பிரச்சினை இல்லைத் தம்பி. ஆனால் நான் சொல்லப் போய் அதனால் லாவண்யாவுக்கு ஏதும் பிரச்சனை வருமோ எண்டு தான் பயப்படுறன்"
"நீங்கள் எதுக்கும் பயப்படாமல் சொல்லுங்கோ. உங்கட பெயர் எந்தக் காரணம் கொண்டும் பேப்பரிலை வராது மாஸ்டர். நான் இந்தக் கிராமத்துக்குள்ளை நுழைஞ்சு முதல் கண்ட காட்சி....... நீங்கள் ரோட்டிலை கிடந்ததும்.. ... உங்களுக்குப் பக்கத்திலை உங்கள் மகள் ஏங்கிப் போய் நின்றதும்... சுற்றவரச் சனம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றதும் தான். அதனால் இது சம்பந்தமாய் நான் ஒரு கட்டுரை எழுதப்போறன். நீங்கள் பயப்பிடாமல் சொல்லுங்கோ"

என்றான். இப்போ லாவண்யா இவர்களின் உரையாடலில் தலையிட்டாள்.

“அப்பா அவர் என்ன உங்கட பெயர் போடவே போறார். இந்த ஊரிலை எத்தனை பேரின்ரை பிள்ளைகளுக்குப் படிப்பிச்சிருப்பியள். யாராவது உங்களை மனிசராய் மதிச்சினமே. ஆமிக்காரன் அடிச்ச அடி மருந்து போட்டால் சரி. ஆனால் இந்த
ஊர்க்காரன்கள் உங்களுக்கு அடித்த அடியை ஜென்மத்துக்கும் மறக்க ஏலாது. இவங்களைப்பத்திக் கட்டாயம் பத்திரிகையிலை வரவேண்டும்” என்று அவள் கூறிய வேகம் தினகரனையும் திகைப்படைய வைத்து விட்டது.

“அப்பிடி எண்டால் சரி.. ..” என்று கூறத் தொடங்கினார். அதைக் கேட்ட லாவண்யாவின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென்று வழிந்தது. தினகரன் குறிப்பெடுப்பதில் முனைந்தான். ஒரு வயது போன மனிதனிடமுமா இப்படி நடந்து கொண்டார்கள். நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என மனதுக்குள் முணு முணுத்துக் கொண்டான். சொல்லிக் கொண்டே வந்த மகாலிங்கத்தார் மேலும் சொல்ல முடியாமல் நிறுத்திவிட்டு நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். மூவரும் சிறிது நேரம் எதுவுமே கதைக்கவில்லை. லாவண்யா தகப்பன் அருகில் சென்று அவரது தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள். அவளது கையைப் பற்றிக்கொண்ட அவர், “எனக்கு உயிர் போறதைப் பற்றி கவலை இல்லைத் தம்பி. இந்தப்

பிள்ளையைத் தனிய விட்டிட்டு" என்று கூறி விக்கி விக்கி அழுதார். தினகரனுக்குச் சங்கடமாக இருந்தது.

"மாஸ்டர் இண்டைக்குப் போதும் நீங்கள் போய்ப்படுங்கோ" என்று அவரைக் கைத்தாங்கலாக பிடித்துச் சென்று படுக்கையில் படுத்தினான். அவரைப் படுத்திவிட்டு வெளியில் வந்தவனுக்கு மனசு நிரம்பப் பாரமாகிவிட்டிருந்தது. லாவண்யாவைப் பார்த்தான். அவள் எதிலுமே பிடிப்பில்லா தவள் போல் வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"லாவண்யா" என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவனின் குரல் கேட்டு மெதுவாகத் திரும்பினாள். உங்கடை அண்ணாவுக்குத் தெரிவித்தனீங்களோ?

"எழுதியிருக்கிறன், சிலவேளை வந்தாலும் வருவார்"

"உங்கடை அண்ணாவைப் பற்றி உங்களுக்கு நல்ல அபிப் பிராயம் இல்லைப் போல"

"அப்படி என்டில்லை.. அவரின்ரபோக்கு எனக்குப் பிடிக்கிறதில்லை."

"எனக்கு விளங்கேல்லை.."

"அவர் ஒரு சரியான சுயநலவாதி"

"ஏன் அப்படிச் சொல்லிறியள்.?

"அவருக்குக் குடும்பத்திலை அக்கறை இல்லை. சும்மா வரட்டு வேதாந்தம் பேசிக் கொண்டு திரியிறார். ஏன் இப்ப அப்பாவுக்கு விழுந்த அடி அவரை ஒன்றும் செய்யாது. பதிலாய் இதெல்லாம் அப்பா போனபிறப்பிலை செய்த

பாவத்தின் பலன் என்று வேதாந்தம் பேசத் தொடங்கியிடுவார்"
"ஏன் உங்களுக்கு வேதாந்தம் எண்டால் பிடியாதோ?"
"பிடிக்காதெண்டில்லை தேவையில்லாத விடயத்துக்கெல்லாம் வேதாந்தம் கதைக்கிறது எனக்குப் பிடிக்காத ஒன்று.. என்னைப் பொறுத்தவரை செய்யிறதெல்லாத்தையும் செய்து போட்டுக் கடவுள் கடவுள் என்று சாகிறது சுத்தமாய்ப் பிடிக்கிறதேயில்லை"
"உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லையோ?"
"இருக்கு, ஆனால் நம்பிக்கை வேற வெறி வேற. அண்ணன் ஒரு கனவுலகத்தில் வாழுகின்றார். ஒரே ஒரு கடவுளை எல்லாரும் வணங்குற சமுதாயம் உருவாக வேண்டு மென்பது அவர் தத்துவம். அப்படி ஒரு சமுதாயம் உருவாகினால் மொழிப்பிரச்சனை இராதாம். கேட்க நல்லாய்த்தான் இருக்குது. அவர் ஒரு சிங்களப் பொட்டையையும் விரும்புகிறார். இதுக்காகக் கடவுளையும் தன் பக்கத்துக்கு இழுக்கிறார். சரியான சுயநலவாதி"
"ஏன் அது தவறா?"
"அப்படியில்லை குடும்பப் பொறுப்பை ஆண்டவன் பார்ப்பார் என்று தத்துவம் பேசி விட்டுத் தான்தோன்றித்தனமாய் நடக்கிறதுதான் தவறு."
"இந்த இருபதாம் நூற்றாண்டில் வித்தியாசமான பாத்திரமாய் இருக்கும் அவரைப் பார்க்க ஆசையாய் இருக்குது"
"நாளைக்கு வந்தியளெண்டால் சிலவேளை பார்க்கலாம்"
"நாளைக்கு நான் கொழும்புக்குப் போறன். பத்திரிகை

அலுவல்கள் கிடக்குது"

"திரும்ப இங்க வருவியளோ?"

"அலுவல் இருந்தால் வருவன்"

"அப்ப எங்களைப் பார்க்க வரமாட்டியளோ?"

அவள் கேட்ட கேள்வியில் தொக்கி நின்ற ஆதங்கம் தினகரனை வியக்கச் செய்தது.

"விடுமுறை கிடைச்சால் வருவன்" என்றான்.

அவள் சிறிது நேரம் எதுவும் கதைக்கவில்லை.

"எனக்கு உங்களைப்பற்றிச் சரியாகப் புரியவில்லை" என்று மௌனத்தைக் கலைத்தாள்.

"இப்ப புரியாமல் இருக்கிறதுதான் நல்லது போகப்போக விளங்கும்.. .. எனக்கு நேரமாகுது வரப்போறன்" என்றான்.

"எங்கை வரப்போறியள்.." என்று நையாண்டியாகக் கேட்டாள். அவன் அவளின் நையாண்டியை ரசித்துக் கொண்டே புறப்பட்டான். அப்போது பக்கத்து வீட்டு பவளமக்கா பரபரப்போடு வந்து லாவண்யாவைக் கூப்பிட்டாள்.

# ஐந்து

தினகரனை அனுப்பிவிட்டுத் திரும்பிய லாவண்யாவுக்கு பவளமக்காவின் பரபரப்பு சிறிது பதற்றத்தைக் கொடுத்தாலும் அதை மறைத்துக்கொண்டு வேலியோரம் சென்றாள். பவளமக்காவின் செய்திகளில் லாவண்யாவுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லாவிட்டாலும் முற்றாகவே அவற்றை அவள் ஒதுக்குவதில்லை.

பவளமக்கா என்று சொல்லப்படும் பெண் ஒரு சுவாரசியமான பாத்திரம். கணவன் இல்லை என்று அவள் கூறிக் கொண்டாலும் கணவன் இருக்கிறார் என்று

பறைசாற்றிக் கொண்டிருந்தது அவள் கழுத்தில் கிடந்த தாலி. வீட்டில ' அவள் மட்டும் தான். ஊரிலே அவளுக்குப் பவளக் குருவி என்ற பட்டமும் உண்டு. மனதில் வஞ்சகம் இல்லை. தனக்குக் கிடைக்கும் செய்திகளை அப்படி இப்படி தலையும் காலும் வைத்துச் சொல்லி விடுவாள். லாவண்யா அருகில் வந்ததும் அவள் காதுக்குள் அவள் சொன்ன செய்தி லாவண்யாவைத் திகைக்க வைத்துவிட்டது. செய்தி வேறு யாரையும் பற்றியும் இல்லை. அவள் தம்பியைப் பற்றித்தான். நம்புவதா விடுவதா என்ற நிலை. நம்பாமல் ஒதுக்கிப் பேசாமல் விட்டால், நிலைமை உண்மையாக இருப்பின் விபரீதமாகியும் விடலாம். அமைதி யாகத் தானுண்டு தன் பாடென்று இருக்கும், தம்பியா இப்படி... எதுக்கும் பவளமக்கா முன் ஏன் தம்பியை விட்டுக் கொடுப்பான் என்ற நிலையில் மெதுவாகச் சிரித்துச் சமாளித்து, ... "எதுக்கும் கேட்டு வைக்கிறன் அக்கா" என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

ஆனால் மனதை மட்டும் அவ் விடயம் குடைந்து கொண்டிருந்தது. வீட்டுக்குள் சென்று எட்டிப் பார்த்தாள். மகாலிங்கத்தார் தூங்கிக் கொண்டிருந்தார். வாசல் படலைக்குச் சென்று எட்டிப் பார்த்தாள். தம்பி வரக்கூடிய அறிகுறியோ இல்லை. லாவண்யாவின் தம்பி பெயர் சடகோபன். பதினேழு வயது. விடலைப் பருவம். மகாலிங்கத்தாருக்கு லாவண்யாவை விட சடகோபனை யிட்டுத்தான் மனக் கலக்கம். சும்மா ஒரு இடத்தில் நிற்க

மாட்டான். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதிடுகின்ற மனோபாவம் கொண்டவன் தான் அவன். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து படிக்கின்றான். தகப்பனுக்கு நடந்த விடயத்தைக் கூட அவனுக்கு அவள் தெரிவிக்கவில்லை. தெரிய வந்தால் எங்கே அவனின் படிப்புக் குழம்பி விடுமோ என்கிற மனப் பயம் அவளுக்கு. அவனை இன்று காலமை சந்தியிலை கண்டதாகப் பவளமக்கா சொன்னால் எப்படி அவளால் நம்ப முடியும். அப்படி அவன் வந்திருந்தால் ஏன் இன்னும் அவன் வீட்டுக்கு வரவில்லை என்பது அவள் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தது. பவளமக்கா சொன்ன விடயத்தை அப்பாவை எழுப்பிச் சொன்னால் என்ன என்று ஒரு கணம் நினைத்தாள். பிறகு என்ன நினைத்தாளோ அதை மாற்றிக்கொண்டு விட்டாள். கதவு திறந்து சத்தம் கேட்டது. எட்டிப்பார்த்தாள். சடகோபன் தான் வந்துகொண்டிருந்தான். அவளுக்கு இதயமே நின்று விடும்போல இருந்தது. பவளமக்கா சொன்னது உண்மை. இவன் காலையே வந்து விட்டான். ஆனால் வீட்டுக்கு வரவில்லை. ஏன்? அவன் வந்ததும் அவள் எதுவும் கதைக்கவில்லை. அவன் அறைக்குச் சென்று உடுப்பு மாற்றும் வரை பொறுத்திருந்தாள். உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவன் நேராகக் கிணற்றடிக்குச் சென்று விட்டான். அவனைத் தொடர்ந்து கிணற்றடிக்கு அவளும் சென்றாள். அவள் வருவதன் நோக்கம் அவனுக்குப் புரிந்திருந்தும் அதைக் கவனிக்காத மாதிரி தன் அலுவலில் முனைந்திருந்தான். அருகில் சென்ற லாவண்யா தன்

வருகையை உணர்த்த மெல்லச் செருமினாள்.

சடகோபனை வீட்டில் செல்லமாக கோபி என்றே அழைப்பார்கள்.

“கோபி நீ காலைமையே வந்திட்டியாம்...” என்று நேரடியாக விடயத்துக்கு வந்திருந்தாள். இதைக் கொஞ்சம் கூட சடகோபன் எதிர்பார்க்கவில்லை. ஏன் சொல்லாமல் கொள்ளாமல் வந்தாய் என்று மட்டுமே கேட்பாளென்று நினைத்த கோபிக்கு அவளின் கேள்வி திகைப்பை மட்டுமல்ல ஆச்சரியத்தையும் கொடுத்தது. தமக்கையை வியப்போடு பார்த்தான்.

“எனக்கு எப்படித் தெரிஞ்சதெண்டு யோசிக்கிறியா?” என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

“இல்லை நான் சில விசயங்கள் கேள்விப்பட்டனான். எனக்கு ஏன் அறிவிக்கேல்லை. முதலிலை நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு?”

“ஓம் நான் காலமை வந்தனான். வீட்டை வர எனக்கு விருப்பமிருக்கேல்லை. வீட்டிலை நடந்த முக்கியமான விசயத்தைப் பற்றி எனக்கு அறிவிக்கயில்லை. ஒரு மூன்றாம் ஆள் மூலமாக அறியவேண்டி வருகுது. பிறகு என்னண்டு இதை நான் என்ரை வீடெண்டு நினைக்கிறது”

“அப்ப இப்ப ஆற்றை வீடென்று நினைச்சு வந்தனீ” என்று லாவண்யா கேட்கவும் “எனக்கு மனம் கேட்கயில்லை...” என்று சடகோபன் கூறிவிட்டு விக்கி விக்கி அழத்தொடங்கினான்.. அவன் அழ அவனோடை சேர்ந்து அவளும் அழுதாள். கொஞ்ச நேரத்தில் இருவரும்

தங்களைச் சமாளித்துக் கொண்டு கிணற்றடியை விட்டு வீட்டுக்குள் வந்தனர். இப்பவும் மகாலிங்கத்தார் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தார். ஓசைப்படாமல் இருவரும் முற்றத்துக்கு வந்தனர். நிலாவொளி முற்றத்தைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. முற்றத்தில் இருந்த இருவரும் எதுவும் கதைக்கவில்லை.

"அப்பாவுக்கு நடந்ததைச் சொன்னால் உன்ரை படிப்புக் குழம்பியிடும் என்று தான் நான் சொல்லயில்லை"

"சரி. தற்செயலாக அப்பாவுக்கு ஏதும் நடந்திருந்தால்..."

அவனின் இந்தக் கேள்வி அவள் உள்ளத்தைத் தாக்கியிருக்க வேண்டும் கண்கள் கலங்கி விட்டன.

"சரி இனி என்ன நடந்திட்டுது கதையைவிடு. இப்ப அப்பாவுக்கு எப்படி? அண்ணனுக்கெண்டாலும் அறிவிச்சனீங்களோ?"

"அப்பாவுக்கிப்ப பரவாயில்லை. அண்ணைக்கு அறிவிச்சனான் பதிலைக் காணவில்லை"

"சிலவேளை கிடைக்கவில்லையோ என்னவோ. இன்னு மொருக்கால் எழுதிப்போடுங்கோ"

"அவருக்குக் கிடைச்சிருக்கும். அவருக்கு வரவி ருப்பமில்லைப் போல என்று இழுத்தாள்"

"நீங்கள் ஏன் அப்படியெல்லாம் கற்பனை செய்யிறியள். இன்னுமொருக்கால் எழுதிப் போடுங்கோ"

மகாலிங்கத்தாரின் இருமல் சத்தம் கேட்டது. கதையை நிறுத்திவிட்டு இருவரும் உள்ளே எழுந்து சென்றனர்.

# ஆறு

காலை விடிந்து விட்டதற்கு அடையாளமாகக் காகங்கள் கரைந்தன. வயலை நோக்கிப் போகும் வண்டில்களின் கடபுடாச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்திருந்தன. லாவண்யா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். கருக்கல் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பொழுதில் கையில் சூட்கேசுடன் கதவைத் தட்டிக் கொண்டிருந்தான் சுதந்திரன். துடித்துப் பதைத்து எழுந்த லாவண்யா மெதுவாக வாசற்படி கதவை எட்டிப் பார்த்தாள். பிரயாண இம்சையில் தலை கலைந்து தூங்காததால் கண்கள் சிவந்து நெருக்கடியில் மேலங்கி கசங்கி சாட்சாத் பரதேசிபோல நின்ற சுதந்திரனைப் பார்த்தாள்.

கதவடிக்குச் சென்றவள் வாவென்றும் சொல்லவில்லை போவென்றும் சொல்லவில்லை. கதவைத் திறந்து விட்டுப் பேசாமல் வந்து படுத்து விட்டாள். உள்ளே வந்த சுதந்திரன் சூட்கேசை ஒரு கரையில் வைத்துவிட்டுக் கதிரையில் அமர்ந்தான். பிரயாண அலுப்பு உடலை வதைத்தது. தகப்பனை எட்டிப் பார்த்தான். அவர் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தார். கடிகாரத்தைப் பார்த்தான். ஆறு மணி முப்பது நிமிடம். லாவண்யாவைப் பார்த்தான். அவள் தூங்குவது போல் பாசாங்கு செய்வதைப் புரிந்து கொண்டான்.

"லாவண்யா" மெதுவாகக் கூப்பிட்டான். பதிலில்லை. மீண்டும் கூப்பிட்டான். இப்போ மெதுவாக அசைந்து "என்ன?" என்றாள்.

"ஒரு தேத்தண்ணி போட்டுத்தாவன்?" என்று அவன் கேட்ட போது அந்தக் குரலிலிருந்த சோகமும் ஆற்றாமையும் அவள் நெஞ்சைப் பிழிந்தது. அவளுக்கு என்னவோ போலிருந்தது. சடக்கென்று எழும்பி குசினிக்குள் போனாள். அவள் போவதையே கண்கொட்டாமல் பார்த்த சுதந்திரன் 'நல்லாய் வளர்ந்து மெலிஞ்சு போனாள்' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். தேநீரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு ஒரு ஓரமாக இருந்தாள்.

"லாவண்யா" என்றான்.

பதில் சூடாக வந்தது.

"இன்னுமா உன் கோபம் மாறவில்லை?"

"மாறிறதுக்கு இது என்ன ரத்தக் காயமே" பதில் நிரம்பப்

பலமாக வந்தது. அவன் வெலவெலத்துப் போய்விட்டான். இதற்குள் சத்தங் கேட்டு மகாலிங்கத்தார் கண் விழித்தார். கிழக்குப் பக்கம் திரும்பி படுத்திருந்த சடகோபன் இப்போ மேற்குப் பக்கமாகத் திரும்பிப் படுத்தான். கண்ணுக்கு முன்னே சுதந்திரன் இருப்பதைப் பார்த்துக் கலங்கிப் போன மகாலிங்கத்தார் கண்ணைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தார். அவன் தான்! அவருக்கு நா எழவில்லை. அவரின் உணர்ச்சி நிலையைப் புரிந்துகொண்டு "சுதந்திரன் என்னப்பா இப்ப எப்படி?" என்றான்.

"இப்ப பரவாய் இல்லைத் தம்பி. இடைக்கிடை நாரியிலை நோகுது."

"இஞ்சை சரியான பிரச்சனை போல வாற வழியிலை எத்தனை இடத்திலை செக்கிங்"

அவள் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள். நாட்டிலை எவ்வளவோ பிரச்சினைகள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கத் தனக்கும் அவற்றுக்கும் சம்பந்தமில்லாதது போல கதைக்கும் அவனைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாக வந்தது. ஆனால் தகப்பனுக்கு முன்னால் அவனைத் தாக்கி பேச. அவளால் முடியவில்லை. அமைதியாக இருந்தாள். இவர்களுடைய எந்த உரையாடலையும் செவி மடுக்காது பொழுது விடிந்து கொண்டிருந்தது. சத்தங்கேட்டுச் சடகோபனும் எழும்பி விட்டான்.

"என்னண்ணை எப்பிடி?" என்று கேட்டவாறு பக்கத்தில் வந்து இருந்தான். தகப்பனும் பிள்ளைகளும் கதைக்கத்

தொடங்கினர். பிறகு தனக்கு அதில் வேலை இல்லை என்று நினைத்த லாவண்யா முற்றத்தைக் கூட்டுவதற்காக எழும்பிப் போனாள். சிறிதுநேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டு சடகோபன் முகம் கழுவக் கிணற்றடிக்கு எழும்பிப் போனான். சாரத்தைக் கட்டிக் கொண்டு முற்றத்துக்கு வந்தான் சுதந்திரன். ஒருதரம் காணியைச் சுற்றிக் கண்களைச் சுழல விட்டான்.

வீட்டின் ஒரு மூலையில் நின்றிருந்த வேப்ப மரத்தைக் காணவில்லை. வேப்பமரம் நின்ற இடத்தில் நாலைந்து வாழை மரங்கள் குலை தள்ளிக் கொண்டு நின்றன. வடக்குப் பக்கத்தில் இருந்த கிடுகு வேலி மதிலாக மாறியிருந்தது. கிழக்கு மூலையிலிருந்த இரண்டு பப்பாசி மரங்களும் காணாமல் போய் இருந்தன. பப்பாசி மரங்களுக்குப் பதிலாக மதிலோடு மாமரம் நின்று கொண்டிருந்தது. எட்டு வருடங்களுக்குள் எவ்வளவு மாற்றம்! இப்படியே பார்த்தபடி லாவண்யாவுக்கு அருகில் வந்தான்.

“லாவண்யா உன்னோடை கொஞ்சம் கதைக்கவேணும்” என்றான். அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு தன்னுடைய வேலையில் முனைப்பாக இருந்தாள்.

“நீ என்னைத் தவறாக நினைக்கின்றாய். எனக்கெண்டும் சில ஆசைகள் அபிலாசைகள் இருக்கெண்டதை நீ ஏன் ஏற்றுக் கொள்ளாயாம்.?”

“உனக்கெண்டு ஆசையள் இல்லையெண்டு ஆர் சொன்னது.

குடும்பத்தையும் சமூகத்தையும் நடுக் கடலிலை விட்டிட்டு உன்ரை சுயநலத்தை முன்னுக்குக் கொண்டு வந்தால் ஆர்தான் ஏற்பினம்.?"

அவளுடைய இந்தக் குற்றச்சாட்டு சுதந்திரனுக்கு வியப்பைத் தந்தது. தான் எந்த வகையில் சுயநலவாதியாக மாறினான் என்பது அவனுக்குப் புரியவேயில்லை.

"சிங்களப் பெண்ணை விரும்பிறது தப்பா. அவளும் உன்னைப்போல் ஒரு பெண்தானே..."

"தப்புத் தப்புத் தான்... இதற்கு நூற்றெட்டுக் காரணங்கள் சொல்லாதை... எனக்குப் பிடிக்கேல்லையெண்டால் பிடிக்கேல் லைத்தான்"

லாவண்யாவின் இந்தப் பதில் சுதந்திரனைத் திடுக்குறச் செய்தது.

"நான் குடும்பத்தை மறந்ததாய்ச் சொல்லிறாய். நான் என்டைக்கும் அப்பிடி இருந்தவனில்லை. நான் கடிதம் போடாததை வைச்சு அப்பிடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாய். உண்மையிலை எனக்கிருந்த மனப்பயம்தான் காரணம்"

"உப்பிடி மனப்பயம் இருக்கிறவை ஏன் பிழை செய்வான்"

"பிழை...பிழை...பிழையெண்டு சொல்லிறாய் ஏன் காதலிக்கிறது தவறா?"

"எங்கடை சமுதாயத்தோடு ஒத்து வாழ முடியாத இன்னொரு சமூகப் பெண்ணைக் காதலிக்கிறது தவறுதான்"

"அர்த்தமேயில்லாத உன்ரை இந்தத் தீவிரத்தன்மை எந்த

நன்மையையும் தராது லாவண்யா"

"நன்மை தீமை பற்றி எனக்குக் கவலையில்லை. அப்பாவுக்கு நடந்ததைப் பார்...அப்பா என்ன செய்தவர். அப்பாவுக்கு என்ன வயது? என்ன மாதிரி அடிச்சிருக்கிறான்கள்.? உப்பிடியான காட்டுமிராண்டிக் கூட்டத்திலிருந்து வாற பெண் எனக்கு மச்சாளாயும் அப்பாவுக்கு மருமகளாயும் எப்பிடி இருக்கேலும்.?"

அவள் வாயிலிருந்து வெளிவந்த இவ் வார்த்தைகள் அவனை ஈட்டியாய்க் குத்தின.

சிறிது சூழலை மௌனம் கௌவிக்கொண்டது. குழம்பிப்போன அவனை உற்றுப் பார்த்த லாவண்யாவுக்கு என்னவோ போலிருந்தது. மனசுக்கு ரொம்பக் கஸ்டமாக இருந்தாலும், சமாளித்துக்கொண்டு

"சரி அண்ணை பழசை எல்லாம் விடுவம். இனி என்ன நடந்திட்டுது. எப்ப கலியாணம் செய்யப்போறாய்"

எனக் குரலிலிருந்த இறுக்கத்தைத் தளர்த்தி அமைதியாகக் கேட்டாள். திடீரென்று மாறிவிட்ட அவளின் நிலை அவனுக்குப் பயத்தைக் கொடுத்தாலும் வெளிப்படையாகக் கேட்டது தென்பாக இருந்தது.

"கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம். உனக்கு கலியாணம் முடியட்டும். அதுக்குப் பிறகு பார்ப்பம்"

"இந்தா உந்த வரட்டுத் தியாகம் எல்லாம் எனக்குப்பிடிக்காது. சட்டுப்புட்டென்று உன்ரை அலுவலை முடி. என்ரை அலுவலை நான் பார்ப்பன்" இப்படி அவள் சொன்னதும் சுதந்திரனுக்கு வியப்பாக இருந்தது. அவளைப் புரிந்து

கொள்ளவே அவனால் முடியவில்லை. "கடிதத்திலை ஆரோ தினகரனைப் பற்றி எழுதியிருந்தாய்... உன்ரை எழுத்தைப் பார்த்தால் ஏதோ விருப்பம் இருக்கிற மாதிரி தெரியுது"

"சும்மா விசர்க் கதை கதையாதை. ஆருக்கும் ஆரிலையும் விருப்பம் இல்லை. ஏதோ கஸ்டம் வரேக்கை உதவினவர். எண்டபடியாலை எழுதினான்"

"தினகரனின்ரை சாதியும் சரியில்லை. நீ உண்மையிலேயே புத்திசாலி லாவண்யா. ஒரு சாதி குறைஞ்சவனைக் காதலிக்காமல் தப்பிவிட்டாய்" லாவண்யாவுக்கு உடம்பெல்லாம் பத்தி எரிந்தது. வெகுண்டாள்.

"என்ன சொன்னனீ... சாதி குறைவோ... எங்கேயோ சிங்களத்தி உன்ரை சாதியே... உங்கடை சமய சாஸ்திரங்களைத் தூக்கி குப்பையிலை போடு... காலத்துக்கொவ்வாத அவையெல்லாத் தையும் எரிக்கவேணும். மனிசனைத் தொழில் ரீதியாய் பிரிச்சு ஒரு பிரிவினரை அடிமையாகவும் ஒரு பிரிவினரை எஜமானர்களாகவும் மாற்றின உங்கடை சாத்திரங்களைக் கொண்டு போய்க் குப்பையிலை போடு"

லாவண்யாவின் கோபத்தைக் கண்டு சுதந்திரன் வியப்படைந்தது மட்டுமல்ல அவளின் புத்தி சாதுரித்தனமான பேச்சையும் கேட்டு வியப்படைந்தான்.

"அதுக்கேன் உப்பிடிக் கத்திறாய்?"

"நீயும் கதைக்கிறதைச் சரியாய்க் கதை. இப்படி இவர்கள் கதை இழுபட்டுக்கொண்டிருக்கும் போது மகாலிங்கத்தார் அவர்களுக்கருகில் வந்தார்.

"தம்பி எத்தனை நாள் நிற்பாய்?"
"கனநாள் நிற்கேலாதப்பா... லீவு இல்லை" என்று அவன் சொல்லவும்,
"கன நாள் களிச்சு வந்திருக்கிறாய்.. ஒரு பத்து நாள் நிண்டால் என்னவாம்" என்ற குரலில் இழையோடிய பாச ஆதங்கத்தை இருவருமே எதிர்பார்க்காதபடியால் லாவண்யாவை வியப்போடு பார்த்தனர். சற்று நேரத்துக்கு முன் என்னமாய் இருந்தவள்? இப்போ எப்படி மாறி விட்டாள். இதுதான் ரத்த பாசமோ.? அப்போது பக்கத்து வீட்டுப் பவளமக்கா லாவண்யாவைக் கூப்பிட்டாள்.
"லாவண்யா சந்தியிலை ஆமிக்காரன்களடி. போறவாற எல்லாருக்கும் அடிக்கிறான்கள். ஒவ்வொரு வீடாய்ச் செக் பண்ணப் போறான்களாம்" பவளமக்காவின் பணிமுடிந்து போய்விட்டாள்.

# ஏழு

கொழும்புக்கு வந்த தினகரன் நேராகப் பத்திரிகை அலுவலகத்துக்குப் போனான். வாசலடியில் காவல்காரன் நின்று கொண்டிருந்தான். அவன் தினகரனைக் கண்டதும் வணக்கம் சார் என்றான். மெல்லிய புன்சிரிப்பை அவனுக்கு வழங்கிவிட்டு அவசர அவசரமாக அலுவலகத் துக்குள் நுழைந்து இருக்கையில் அமர்ந்தான். மேசையில் ஓர் கடிதம் இருந்தது. ஒரு கிழமை லீவில்தான் போவதாக டைப்பிஸ்ட் நிர்மலா எழுதியிருந்தாள். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சமாளித்துக் கொண்டு ஆசிரியரைச் சந்திக்கப்

போனான். ஆசிரியர் யாருடனோ டெலிபோனில் கதைத்துக் கொண்டிருந்தார். கதவைத் தட்டி விட்டு உள்ளே எட்டிப் பார்த்தான். வந்தமரும்படி சைகை செய்தார். ரெலிபோன் உரையாடல் முடிந்ததும் வழமையான பாணியில் செருமிக் கொண்டு கதிரையில் முதுகைத் தொங்கப் போட்ட வண்ணம் "என்ன தினகரன் போன காரியம் எப்பிடி?"
என்று கேட்டார் கைலாசம்.
தினகரன் அந்தக் கிராமத்துக்குப் போனதையும் அங்கு நடந்தவைகளையும் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான். எல்லா வற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கைலாசம் பதில் ஏதும் கூறாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்.
"உன்னுடைய வேகத்தைப் பார்த்தால் கட்டுரை காரசாரமாய் வரும் போலை கிடக்கு"
"கண்ணாலை கண்ட உண்மை எப்பவும் எழுத்திலை நெருப்பாய்த்தான் இருக்கும்"
"உன்னுடைய வயதிலை உன்னைவிட நெருப்பாய் எழுதினவன் நான்"
"நீங்கள் சொல்லிறது எனக்கு விளங்கவில்லை. உண்மையான பிரச்சனைகளை மக்களுக்குத் தெரியப் படுத்திறது தானே எங்கடை கடமை"
"உண்மைதான் மறுக்கவில்லை. ஆனால் இன்றைய யதார்த்த நிலைமை அப்பிடியில்லையே"
"யதார்த்த நிலைமையை மக்களுக்குத் தெரியப்படுத்தி றதுதானே பத்திரிகையின்ரை கடமை"

"எனக்கு விளங்கும் உனக்கு விளங்கும் இந்தப் பத்திரி கையின்ரை முதலாளிக்கு விளங்கவில்லையே"
"ஏன் அவர் ஏதும் சென்னவரே?"
"அவருக்கு அரசாங்கத்தைப் பகைக்க விருப்பமில்லை. அரசாங்கத்தை எதிர்த்து எந்தச் செய்தியும் வரக்கூடாதாம். இராணுவத்துக்கெதிராய் எந்தச் செய்தியும் போடக் கூடாதாம். நான் என்ன செய்யிறது தினகரன்"
"ஏன் நீங்கள் பத்திரிகையின்ரை ஆசிரியர் தானே!"
தினகரன் இப்படிக் கேட்டதும் கைலாசம் விழுந்து விழுந்து சிரித்தார். அவரது சிரிப்பைக் கேட்ட தினகரனுக்குச் சினமாக இருந்தது.
"ஆசிரியர் தான்! யார் இல்லையெண்டது. இந்த ஆசிரியர் தொழில் கிட்டத்தட்ட ஒரு கிளாக்கின்ரை தொழில் மாதிரித்தான் தம்பி. நான் மூன்று பொம்பிளைப் பிள்ளையளுக்குத் தகப்பன். எனக்குப் பணம் வேணும். வேணுமெண்டால் அவர் சொன்னதைத்தான் செய்ய முடியும். இங்கை பத்திரிகைச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் இதைப் பற்றி எல்லாம் மூச்சும் விடக்கூடாது. உனக்குப் பணம் வேணுமெண்டால் என்னை நீ பகைக்கக் கூடாது. இது பணத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு சங்கிலித் தொடர் தம்பி. வீணாய் ஏன் நேரத்தை வீணாக்கிறாய்.... போய் ஒரு அமைச்சரைப் பேட்டிகாண். அதை ஒரு பக்கம் போட்டு வெளுத்து வாங்குவம்"
அவரைப் பார்க்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அதே நேரம் அவரைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது.

அவருடைய இந்தப் பங்கலோட்டுத்தனமான பேச்சு அவனை வேதனைப்பட வைத்தது. எதுவும் சொல்லாமல் சட் டென்று எழும்பி வெளியே போய்விட்டான். தன்னுடைய இருக்கைக்கு வந்த தினகரனுக்குத் தலை இடித்தது. நேர்மையான பத்திரிகையாளனுக்கு இந்த உலகத்தில் வரும் சோதனைகள் அவனைக் கலங்க வைத்தன. இன்று வேலை செய்யும் மன நிலையில் அவன் இல்லை. தொலைபேசி எடுத்துத் தனக்கு அரை நாள் லீவு வேண்டுமென்று கேட்டான். அவனுடைய மனநிலையைப் புரிந்து கொண்ட கைலாசம், மறுக்காமல் விடுமுறை கொடுத்தார். வெளியில் வந்த தினகரனுக்கு எல்லாமே சூனியமாக இருந்தது. எங்கே போவது? அறைக்குப் போகும் மனநிலையில் அவன் இல்லை. கால்போன போக்கில் கொழும்பு வீதிகளில் நடந்தான். அவனை அறியாமலே அவனது கால்கள் அவனைக் காலி முகக் கடற்கரைக்குக் கொண்டு சென்று விட்டன. ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு வானத்தைப் பார்த்தான். அவன் தனியே இருப்பதைப் பார்த்த ஒரு பெண் அவனுக்கு அருகில் வந்தாள்.

“ஹலோ” என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தாள். காய்ந்து வெடித்துப்போன சொண்டிற்கு வலுக் கட்டாயமாகச் சாயம் தடவியிருந்தாள். கறுப்புமில்லைச் சிவப்புமில்லை என்றிருந்த சொக்குப் பிரதேசத்தில் பவுடர் அப்பியிருந்தாள். சுமாரான தேகம். சுண்டியிழுக்கக் கூடிய சில வளைவுகள். என்னதான் நவீன அழகு சாதனங்களைப் பயன்

படுத்தியிருந்தாலும் இவள் அவள் தான் என்பதை அவளின் தோற்றம் பறை சாற்றிக் கொண்டிருந்தது. அவள் நின்ற நிலையும் கறுப்புக் கண்ணாடியைத் தூக்கி அவனைப் பார்த்த பார்வையும் தினகரனுக்கு அருவருப்பைக் கொடுத்தன. அவளைப் பாராமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன். அவள் விட்டபாடில்லை.

அவளுக்குத் தேவை காசு. எப்படியாவது அவனை மடக்கிவிட வேண்டுமென்று நினைத்து அவன் தோளில் தட்டி "வாறியா?" என்று பச்சையாகக் கேட்டாள். தினகரனுக்கு அவள் மேல் கோபம் வந்தாலும் எவ்வளவு சுதந்திரமாகத் தன் தொழிலைச் செய்கின்றாள். இவளுக்கிருக்கிற அளவுக்குக்கூடச் சுதந்திரம் தன் தொழிலுக்கில்லையே என்பதை நினைக்கும்போது தினகரனுக்குத் தன் மேலேயே வெறுப்பு வந்தது. அவன் யோசிப்பதைப் பார்த்துப் பணப் பிரச்சனை என்று நினைத்தாளோ என்னவோ "பராவாயில்லை பத்து ரூபாய் கொடு" என்றாள்.

இனிமேலும் இங்கிருப்பது ஆபாசம் என உள்மனம் உணர்த்தி யதால் கையைத் தட்டி விட்டு நடந்தான். "சரியான ஒரு..." அவள் வாயில் எழுத முடியாத அளவிற்கு வார்த்தைகள் வருகின்றன.

தினகரன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. நடந்து கொண்டேயிருந்தான். மனம் மட்டும் எங்கோ அலைந்து கொண்டிருந்தது. நேரம் ஐந்து மணியாகி இருந்தது. இப்போதும் அறைக்குப்போக விருப்பமில்லை. படம்

பார்த்தால் என்ன? மனசு கேட்டது. உடனே கால்கள் தியேட்டரை நோக்கி நடக்கத் தொடங்கின. தியேட்டரில் கமலகாசன் நடித்த படம் போய்க் கொண்டிருந்தது. ரிக்கற் எடுத்துக்கொண்டு உள்ளே போனான். அவ்வளவு சனமில்லை. படம் ஆரம்பமாகி விட்டது.

"சும்மா இரப்பா..."

"நீர் கொஞ்சம் தள்ளி இரும்... அங்க முன்னாலை ஆள் இருக்குது"

"இருந்துட்டுப் போகட்டன். அந்தாள் படம் பார்க்குது. இங்கை ஏன் பார்க்கப் போகுது"

"தியேட்டரிலை வேண்டாமப்பா"

சட்டென்று தினகரன் திரும்பினான்.

"கொஞ்சம் படம் பார்க்க விடுறியளா?" என்று கேட்டான் தினகரன்.

"படம் முன்னாலை தானே போகுது. நீர் ஏன் பின்னாலை பார்க்கிறீர்"

"இஞ்சைவாறது படம் பார்க்கத்தான். உதையெல்லாம் வீட்டிலை நாலு சுவருக்குள் வையுங்கோ"

"நாங்கள் வீட்டிலயும் வைப்பம். றோட்டிலையும் வைப்பம். நாலு சுவருக்குள்ளையும் வைப்பம். நாலுசுவர் இல்லாமலும் வைப்பம். இது எங்கடை சுதந்திரம். நீர் உம்மடை வேலையைப் பாரும்" எதிர் வார்த்தைகள் சூடாகவும் கரடு முரடாகவும் வந்த போது, தினகரன் சற்று உணர்ச்சி வசப்பட்டாலும் அந்த மனிதன் பாவித்த சுதந்திரம் என்ற

சொல் அவனைப் பெட்டிப் பாம்பாக அடக்கி விட்டது. இவர்களுக்குள்ள சுதந்திரம் கூடத் தனக்கில்லையே என்று அவனின் மனம் வேதனைப்பட்டது.

# எட்டு

பவளமக்கா அந்தச் செய்தியைக் கூறியவுடன் லாவண்யாவுக்கு கையும் ஓடவில்லைக் காலும் ஓடவில்லை. ஓடிவந்து தகப்பனுக்கும் தமையனுக்கும் விடயத்தைக் கூறினாள். மகாலிங்கத்தாருக்குத் திக்கென்றது. இந்த நேரம் பார்த்துச் சடகோபனும் வீட்டில் நிற்கிறானே! இக்கட்டான சூழ்நிலை வந்தால் சடகோபனையும் கொண்டு போய்விடுவார்கள். லாவண்யாவைக் கண்டால் அந்தப் பிணந்தின்னிக் கழுகுகள் விடமாட்டுதுகள். சுதந்திரனைக் கொண்டு போய் உரிச்சுப் போடுவாங்கள் என மனதுக்குள்

புலம்பினார். சுதந்திரனுக்கு இந்த நிலமை புதிது. ஏதோ நடக்கப்போகிறது என்பது மட்டும் விளங்கியது. சடகோபன் பதட்டப்பட ஆரம்பித்திருந்தான். திரும்பவும் வேலியருகே பவளமக்கா. லாவண்யா ஓடினாள்.

"ஒவ்வொரு வீடாய் உள்ளட்டு ஆண் பெண் என்றில்லாமல்... எல்லாரையும் அந்திரான் முருகன் கோவிலடிக்கு கொண்டு போறாங்களாம். லாவண்யாவின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கி இருந்தது. அவள் தன்னைக் காப்பாற்றுவதை விடச் சுதந்திரனையும் சடகோபனையும் எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமெனத் துடித்தாள். சுதந்திரனுக்கு இவர்களின் பதட்டம் பயத்தை உருவாக்க, மனதிற்குள் முருகனை நினைத்தான். முருகன் எப்படியும் தன்னைக் காப்பாற்றி விடுவான் என்றே நினைத்தான். இப்போதும் எவ்வளவு சுயநலம்! முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்று நினைத்தானேயொழிய இந்தச் சமூகத்தைக் காப்பாற்றுவான் என்று நினைக்கவேயில்லை. மகாலிங்கத்தார் தன்னால் முடிந்த மட்டும் யோசித்தார். வழி தென்படவில்லை. லாவண்யாவின் மூளையில் ஒரு மின்னல்.

"மூன்று பேரும் கிணத்துக்குள்ளை இறங்கியிருப்பம்" என்றாள். "சுணங்காமல் போங்கோ நான் சமாளிக்கிறன். என்ன நடந்தாலும் வெளியிலை வராதையுங்கோ"

"அப்பா நீங்களும் வாங்கோவன்" என்று சடகோபன் கேட்டான். "இல்லைத்தம்பி ஒருவரும் இல்லையெண்டால் அவங்களுக்கு ஐமிச்சமாய்ப் போயிடும் என்னைப்பற்றி யோசிக்காமல் நீங்கள் போங்கோ"

என்று அவசரப்படுத்தினார். அரை மனதோடு மூவரும் ஓடினர். இவர்கள் போய் ஐந்து நிமிடத்துக்குள் பூட்ஸ் கால்களின் சத்தம் சமீபத்தில் கேட்டது. மகாலிங்கத்தார் முற்றத்திலேயே இருந்தார். அவர்களைக் கண்டதும் பதற்றப்படாமல் மெதுவாக எழும்பினார். வந்தவர்களில் ஒருவன் என்ன நினைத்தானோ தெரியாது திடீரென்று பாய்ந்து அவரின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு எழும்ப வேண்டாம் என்றான்.

அவர் இருந்து விட்டார். வீட்டுக்குள் நுழைந்து அக்கு வேறு ஆணி வேறாய்த் தேடினார்கள். எதுவுமே அகப்படவில்லை. ஒரு போட்டோ அகப்பட்டது. அதில் அவர்களின் குடும்பமே இருந்தது. ஒவ்வொருவராகக் காட்டி எங்கே என்று கேட்டான். லாவண்யாவும் சுதந்திரனும் கொழும்பில் வேலை செய்வதாகக் கூறினார். சடகோபன் யாழ்ப்பாணத்தில் தங்கிப் படிக்கிறான் என்றும் கூறினார்.

சடகோபன் விடயம் சற்றுச் சிக்கலாகியது. அவர்களுக்கு நம்ப முடியவில்லை. மகாலிங்கத்தாரின் பிடரி-யில் அடி விழுந்தது. "அடுத்த முறை வரேக்கை மகனைத் தரோணும் விளங்குதா?" என்று கூறிவிட்டுத் திரும்பினார்கள். இரை கிடைக்கவில்லையே என்ற கோபம் ஒருவனுக்கு! பூட்ஸ் காலால் ஒரு மிதி மிதித்தான். தூரத்தில் போய் விழுந்தார். இடுப்பு விண்ணென்று வலித்தது. மெல்ல மெல்ல எழும்பி அவர்கள் போய்விட்டதை உறுதி செய்து கொண்டு கிணற்றுப் பக்கம் சென்று பிள்ளைகளைக் கூப்பிட்டார்.

நனைந்த நிலையில் நடுங்கிக் கொண்டு, மூவரும் வெளியில் வந்தனர். சுதந்திரனுக்கு இது முதல் அனுபவம். லாவண்யாவிற்கும், சடகோபனுக்கும் இது முதல் அனுபவமாக இருந்தாலும் இந்தச் சூழ்நிலை பழக்கப்பட்டுப்போன ஒன்று. சுதந்திரனால் இந்த அனுபவத்தைச் சீரணிக்க முடியவில்லை. நிரம்ப மனம் உடைந்து போய் இருந்தான். உடுப்புக்களை மாற்றி விட்டு மூவரும் முற்றத்துக்கு வந்தனர். லாவண்யாவின் மனம் குமுறிக் கொண்டிருந்தது. இது இனி அடிக்கடி நடக்கப்போகுது. இப்படி எத்தனை நாளைக்குக் கிணத்துக்குள்ளை ஒளிக்கிறது. மகாலிங்கத்தார் தேநீர் போட்டுக் கொண்டு வந்திருந்தார். விறைப்புத் தீர மூவரும் சுடச்சுடக் குடித்தனர்.

"இப்பிடி நெடுக நடக்குமோ?" சுதந்திரன் கேட்டான்.

"எங்கடை வீட்டுக்கு இதுதான் முதல்தடவை. ஆனால் பல வீடுகளிலை பல தடவை நடந்திட்டுது" என்று முறாய்ப்பாய்ப் பதில் சொன்னான் சடகோபன். ஏதோ வெளிநாட்டிலிருந்து வந்தவன் போல் கேட்கின்றானே? எல்லாம் தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறானோ? அல்லது கொழும்பில் இருக்கும் தமிழர்களின் நிலை இது தானோ? என்று தனக்குள் முணு முணுத்துக்கொண்டாள் லாவண்யா. மூவரும் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. மௌனத்தைக் கிழித்துக்கொண்டு பவளமக்காவின் குரல் கேட்டது. லாவண்யா எழுந்து போனாள்.

"உந்த மனிசி என்ன நியூஸ் பேப்பரோ?" என்று சினத்துடன்

கேட்டான் சுதந்திரன்.

"அவ இல்லையெண்டால் நீ இப்ப ஆமிக்காரனின்ரை றக்கிலைதான் இருப்பாய்" என்று சடகோபன் சீறி விழுந்தான்.

"ஏன்ராப்பா சும்மா ஏறிப்பாயிறாய்"

"பின்ன என்ன அண்ணை விசர்த்தனமான கேள்வியெல்லாம் கேட்கிறாய்?"

"நல்லமனிசி தம்பி. எப்பிடியோ எல்லாச் செய்திகளையும் மோப்பம் பிடிச்சிடும்" என்றார் மகாலிங்கத்தார். இதற்குள் லாவண்யா திரும்பிவந்தாள்.

"என்னவாம் பிள்ளை?"

"கனகசபை மாஸ்டரின்ரை கார்த்திகாவைப் பிடிச்சுப் போட்டாங்களாம்" சடகோபன் ஏங்கிப்போய் விட்டான். அவனது மனம் பதட்டப்பட்டது.

"இது என்ன கரைச்சல். அவர் பாவம். நல்ல மனிசன். அவர் பெட்டையும் நல்லவள்தான்" என்று இழுத்தார் மகாலிங்கத்தார்.

"இந்தப் பெடியன்களுக்குத் தேவையில்லாத வேலை. உவங்களாலைதான் இவ்வளவு பிரச்சனையும்"

கிடக்கிற கம்பால் அவனுக்குச் சாத்தவேண்டும் போலிருந்தது லாவண்யாவிற்கு. அடக்கிக்கொண்டாள்.

"கொழும்பிலை இருந்து வாற மணியோடரிலைதான் அடுப்பெரியுது. அதுக்குள்ளை விடுதலையாம். என்ன மண்ணாங்கட்டி விடுதலை. ஏதோ இவைதான் கடவுள் எண்ட நினைப்பு" சுதந்திரன் தொடர்ந்தும் வாயில் வந்தபடி

கதைத்துக் கொண்டு போனான். சடகோபன் கையிலிருந்த டம்ளரை கோபத்தோடு எறிந்தான். அது சுவரில் பட்டு, எகிறிக் குதித்து 'டணார் என்ற சத்தத்தை எழுப்பியது. திடீரென்று மௌனம் சூழ் நிலையைக் கௌவிக் கொண்டது. சூழ்நிலை இறுகிப் போனதை உணர்ந்த மகாலிங்கத்தார், கதையை மாற்றி,

"ஊர் வம்பு உனக்கேன் தம்பி.........உன்ரை கலியாண விசயத்துக்கு வருவம். உன்ர நிலை இப்ப என்ன?" தகப்பன் நேரடியாகவே களத்துக்கு இறங்கி விட்டதை உணர்ந்தான் சுதந்திரன்.

"இப்ப கலியாணம் அவசரமில்லை. லாவண்யாவிற்கு முதல் முடியட்டன்" என்ற சுதந்திரனை நன்றியோடு பார்த்த அவர் என்ன இருந்தாலும் அவனுக்குப் பொறுப்பிருக்குது என்று மனதுக்குள் கூறிக்கொண்டார்.

"இஞ்சை எனக்காக ஒருவரும் அடைகாக்க வேண்டாம். அவரவருக்குப் புடிச்சதைச் செய்யலாம்" என்றாள்.

அவளின் வார்த்தைகள் வெடிகுண்டு போல் இருந்தன.

சுதந்திரனுக்குப் பிடிக்கவில்லை. அவன் எழும்பிப் போய் விட்டான்.

"ஏன் பிள்ளை உப்பிடிக் கதைக்கிறாய்?" என்று மகாலிங்கத்தார் கூற அவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவளும் எழும்பிப் போய்விட்டாள். இருவரும் போவதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவாறு மகாலிங்கத்தார் எழும்பி வேலிக்கரைக் கறையான் தட்டச் சென்றார். சடகோபன் மட்டும் அசையாமல் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான்.

# ஒன்பது

மனதுக்குள் திடமான ஒரு முடிவை ஏற்படுத்திக்கொண்ட தினகரனுக்குத் தன்னுடைய முடிவை லாவண்யாவுக்குக் கூற வேண்டும் போல் மனசு துறு துறுத்தது. வெளியில் வந்து புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தான். வெறிபிடித்த பைத்தியக்காரன்போல் புகையிரதங்கள் போவதும் வருவதுமாக இருந்தன. பல கனவுகளையும் பல துன்பங்களையும் பல இன்பங்களையும் சுமந்த மனிதர்களை எவ்வித அலுப்பும் சலிப்புமில்லாமல் ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தன புகையிரதங்கள். யாழ்ப்பாணம்

போகும் புகையிரதத்தில் வந்து ஏறினான் தினகரன். தினகரனது மனது எதிர் காலத்தை நோக்கி வட்டமிட ஆரம்பித்தது. சுதந்திரம்—சொந்தம் என்ற இரு சொற்களும் அவனுள் பரதநாட்டியம் ஆடிக் கொண்டிருந்தன.

தன்னுடைய எழுத்து வன்மையால் இந்த உலகில் பலவற்றைச் சாதிக்க விரும்பினான். அதற்கு அவனுக்குத் தேவை சுதந்திரம். அந்தக் களத்தைத்தானே உருவாக்க விரும்பினான்.

சமூகத்திற்குத் தன் எழுத்துச் சக்தியை வழங்க திட்டமிட்ட தினகரன் இந்தச் சமூக அமைப்பை மறந்து விட்டான். தான் வாழ்கின்ற இச் சமூகம் ஒரு பயங்கரமான பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டதென்ற உண்மையை அவன் உணரவில்லை. சகல முற்போக்குக் குணாம்சங்கள் முறியடிக்கப்பட்டுப் பிற்போக்கு அம்சங்கள் முன்னணிக்கு வந்து முற்போக்கு குணாம்சங்களின் அர்த்தமான அறை கூவல்களை தங்களின் கவசங்களாகப் பிற்போக்காளர்கள் பாவிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்ற வரலாற்று விபத்தைத் தினகரன் உணரவில்லை. அதேநேரம் முற்போக்குக் குணாம்சம் கொண்டவர்கள் சமூக பாரம்பரியங்களைப் புரிந்து கொள்ளாது வெறுமனே வெளிநாட்டு தத்துவங்களைக் கடன்வாங்கி தங்கள் தனித்துவங்களை இழந்து பொம்மைகளாய் மாறிவிட்டமையும் வரலாற்றில் நாம் குறித்து வைக்கவேண்டிய ஒன்றுதான்.

புகையிரதம் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது. தன்னுடைய இந்தத் திட்டத்திற்கு லாவண்யா என்ன சொல்லுவாள்? லாவண்யா என்னோடு ஒத்துழைப்பாளா? இப்படிப் பல வினாக்களை அவன் மனசு எழுப்பிக் கொண்டிருந்தது. வங்கியிலிருக்கும் பணத்தை மனதுக்குள் கூட்டிப் பார்த்தான். இருபதினாயிரம் தேறும் போலிருந்தது. புகையிரத யன்னலூடாக வெளியே பார்த்தான். மரங்கள் புகையிரதத்துக்கு எதிரத்திசையில் ஓடிக்கொண்டிருந்தன. பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. முன்னால் இருந்த மனிதரைப் பார்த்தான். தாடி வளர்த்திருந்தார்.

ஏதோ ஒரு சோகத்தில் அவர் இருப்பதாக அவனுக்குப்பட்டது. அவரும் தனக்குள் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார். தாடி வளர்த்தவருக்குப் பக்கத்தில் ஒரு இளம் பெண்ணிருந்தாள். சுமாரான அழகு. நீண்ட கூந்தல். கண்ணாடி போட்டிருந்தாள். அவளுக்குச் சோகம் இருந்ததோ என்னவோ உஷாராக இருந்தாள். கையில் பிரபல எழுத்தாளரின் நாவல் இருந்தது. அதைச் சிறிது படிப்பதும் பிறகு வெளியில் பார்ப்பதுமாக இருந்தாள். அவனுக்கு முன்னால் இருந்த தாடி வளர்த்த மனிதனுக்கு அவனுடன் கதைக்கவேண்டும் போல் இருந்திருக்க வேண்டும்.
அவனைத் தட்டி
"தம்பி யாழ்ப்பாணமோ?" என்றார்.
"ஓம் கொடிகாமம்..." என்று அவன் கூறவும்

"தம்பி யாழ்ப்பாணத்திலை சரியான பிரச்சினை போலை"

தினகரனுக்குக் கதைக்க விருப்பமில்லை.

"இருக்கும்" என்று மொட்டையாகக் கூறினான்.

அத்தோடு அவர் கதையை விட்டுவிட்டார். புகையிரதம் ஒரு குலுக்கு குலுக்கி நின்றது. எட்டிப் பார்த்தான். கொடிகாமம் என்ற பெயர்ப் பலகை சிரித்துக் கொண்டு நின்றது. பெட்டியைத் தூக்கிக் கொண்டு இறங்கினான். இறங்கும் போது அவளைப் பார்த்தான். அவள் நாவலில் மூழ்கியிருந்தாள். நாவலின் பெயர் மௌனப் புயல். நிலையத்தை விட்டு வெளியில் போகும் போது அசையும் புகையிரதத்தை மீண்டு மொருமுறை பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மனம் ஒரு குரங்கு என்ற பாட்டு நிலையத்திற்கு முன்னாலுள்ள தேநீர்க் கடையிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. நிலையத்தை விட்டு வெளியில் வந்தான். வெளியில் புகை வண்டியின் வருகைக்காகப் பஸ் வண்டிகள் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருந்தன. தூங்கிக்கொண்டிருந்த பஸ் டிரைவரும் கொண்டக்ரரும் சனசந்தடி கேட்டு எழுந்து தயாரானார்கள். தினகரன் போய் பருத்தித்துறை போகும் பஸ்ஸில் ஏறிக்கொண்டான். இ. போ. ச வண்டி தனக்கேயுரித்தான சத்தங்களை எழுப்பிக் கொண்டு புறப்பட்டது. தினகரன் கடைசிச் சீற்றில் போய் இருந்து கொண்டான். எல்லார். வாயிலும் நாட்டுப் பிரச்சினைதான். சிலர் அரசுக்குச் சார்பாகவும் சிலர் பொடியங்களுக்குச் சார்பாகவும் கதைத்தார்கள். தினகரன் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டு . அவதானித்துக் கொண்டு வந்தான். பத்திரிகைக்காரனாச்சே.!
கொண்டக்டர் கருணையூர், கருணையூர் என்று கத்தினான். சிந்தனையில் இருந்த தினகரன் திடுக்கிட்டுப்போய் பஸ் நின்றதும் இறங்கிக் கொண்டான். நேரே லாவண்யா வீட்டுக்குத் தான் போனான். நேரம் அப்போது நாலு மணி முப்பது நிமிடம். கதவைத் தட்டினான். சுதந்திரன் தான் கதவைத் திறந்தான்.

சுதந்திரனுக்குத் தினகரனைத் தெரியவில்லை!
தினகரனுக்குச் சுதந்திரனை தெரியவில்லை!
சுதந்திரன் அவனைக் கேள்விக் குறியோடு பார்த்தான்.
"நான் தான் தினகரன். மாஸ்டர் இருக்கிறாரோ?" என்று கேட்டான். "ஓம் வாரும்" என்று அழைத்து வந்து அமரச் சொன்னான் சுதந்திரன். தினகரனை இருக்கச் சொல்லி விட்டுக் கிணற்றடியில் நிற்கும் தகப்பனுக்குக் குரல் கொடுத்தான்.
"அப்பாவும் லாவண்யாவும் கிணற்றடியிலை நிற்கினம். நான் லாவண்யாவின்ரை மூத்த அண்ணன். உங்களைப்பற்றிச் சொன்னவை. சமயத்திலை உதவியிருக்கிறியள்"
"இதெல்லாம் ஒரு உதவியோ? ஒரு மனுசனுக்குச் செய்யிறதைத்தானே செய்திருக்கிறன்"
இப்படி இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது மகாலிங்கத்தாரும் லாவண்யாவும் வந்து விட்டனர். லாவண்யா எதிர் பார்க்கவில்லை. மகாலிங்கத்தார் குசலம் விசாரித்தார். இடையில் குறுக்கிட்ட சுதந்திரன்,

"நான் இண்டைக்கு மெயிலிலை பயணம் குறை நினையாதையும் ஆயத்தப்படுத்தப்போறன்" தினகரன் ஒரு புன்சிரிப்போடு விடை கொடுத்தான்.

"என்ன திடீரென்று வந்திருக்கிறியள்" லாவண்யா கேட்டாள்.

"அதெல்லாம் பெரிய கதை ஆறுதலாய்ச் சொல்லிறன்" என்று கூறிவிட்டு "மாஸ்ரர் இப்ப எப்படி சுகந்தானே" என்று கேட்டான். தினகரனைத் தகப்பனோடு விட்டுவிட்டு லாவண்யா எழும்பிக் குசினுக்குள் போனாள்.

"தம்பி வரேக்கை வழியிலை சரியான செக்கிங்கோ?"

"செக்கிங் வழமைதானே மாஸ்டர்." என்று கூறிக் கொண்டிருக்கும்போது,

தேனீரைக் கொண்டு வந்து வைத்தாள் லாவண்யா.

இதற்குள் தனது பெட்டியோடு வந்த சுதந்திரன்

"அப்ப தினகரன், நான் போட்டு வாறன். முடிந்தால் கொழும்பிலை சந்திப்பம்" என்றான். பின்பு லாவண்யாவையும் தகப்பனையும் பார்த்துக் கூறிவிட்டு வெளிக் கதவை நோக்கி நடந்தான். கதவடியில் சடகோபன் சைக்கிளையும் வைத்துக் கொண்டு நின்றிருந்தான். வாசல் மட்டும் போன மகாலிங்கத்தார் சுதந்திரனைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சி விட்டு "மறக்காமல் ஒவ்வொரு கிழமையும் கடிதம் போடுமோனை" என்று விடைகொடுத்தார்.

# பத்து

லாவண்யா ஒரு புன் சிரிப்புடன் தினகரனுக்கு முன் வந்தமர்ந்தாள். இருவரும் கதைக்கவில்லை.

“என்ன திடீரென்று வந்திருக்கிறியள் ஏதும் அவசர அலுவலாய் வந்தனீங்களே” என்று மௌனத்தைக் கலைத்தாள். “அலுவலெண்டில்லை... கிட்டதட்ட நிரந்தரமாய் வந்திட்டன்”

“என்ன புதிர் போடுறியள்”

“புதிர் இல்லை லாவண்யா” என்று நடந்தவைகளைக் கூறினான். அவனை அவள் வியப்போடு பார்த்தாள்.

இவ்வளவு தன்னம்பிக்கையும் தன்மானமும் கொண்டவரா இவர், என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

"சரி.. இப்ப என்ன செய்யிறதாய் உத்தேசம்?"

" என்ன செய்யலாமெண்டு நினைக்கிறாய்?"

அவன் தன்னை இப்படி ஒருமையில் அழைத்தமை தனக்குள் ஒரு வித இனம் புரியாத கிளுகிளுப்பை உண்டு பண்ணுவதை அவள் உணர்ந்தாள். ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தாள். சிறிதுநேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. தன்னையும் ஒரு பொருட்டாகக் கருதி ஆலோசனை கேட்கிறானே என்பது அவளுக்கு வியப்பைக் கொடுத்திருந்தது. என்ன சொல்வதென்றும் அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் எழுந்தமானத்தில் "உங்களிட்டைப் பணமிருக்கா?" என்று கேட்டாள். அவளுடைய இந்தக் கேள்வி அவனுக்கு வியப்பைக் கொடுத்தது.

"பெரிய அளவிலை இல்லை. கூட்டிக் கழிச்சால் ஒரு இருபது தேறும்"

"அவ்வளவு காணும்"

"எதுக்கு?"

"ஒரு பத்திரிகை தொடங்கத்தான்"

தினகரன் பதில் ஏதும் கூறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். எவ்வளவு சுலபமாக முடிவெடுக்கிறாள்!

"நீங்கள் அப்பிடி முடிவெடுத்தால் நானும் ஒத்துழைப் புத்தருவன்." இது தினகரனை இன்னும் உற்சாகப்ப டுத்தியது. அப்போது அங்கே வந்த மகாலிங்கம் மாஸ்டர் தினகரனுக்குப் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

"என்ன தம்பி எப்பிடி இப்ப சொல்லுங்கோ?"
"மாஸ்டர் எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்"
"சொல்லுங்கோ தம்பி உமக்கில்லாததா?"
"எனக்கொரு வீடு பார்க்கவேணும்"
"ஏன் கொழும்பு..."
இதற்குள் லாவண்யா முந்திக்கொண்டு முழுவிடயத்தையும் தகப்பனுக்கு விளக்கினாள்.
அவர் மேற்கொண்டு ஏதும் கேட்காமல் சிந்தனையில் ஆழ்ந்தார். தினகரன் தாழ்ந்த சாதிக்காரன் என்பது ஊரிலை எல்லாருக்கும் தெரியும். இந்நிலையில் யார் வீடு கொடுப்பினம். அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. பிறகு என்ன நினைத்தாரோ? எப்பிடி முடிவெடுத்தாரோ தெரியாது.
"தம்பி வேறை வீடு பார்க்கத் தேவையில்லை. எங்கடை வீட்டிலை இரும்" தினகரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவன் இதை எதிர்பார்க்கவேயில்லை. லாவண்யாவுக்கு யாரோ தன் மீது பாலபிஷேகம் செய்வது போல் இருந்தது.
"அப்பிடியெண்டால் என்னட்டை வாடகை வாங்கவேணும்"
இருபக்க சம்மதத்துடன் தினகரனுக்கு முன்னறை ஒதுக்கப் பட்டது. இப்படி இவர்கள் தீர்மானம் செய்து கொண்டிருக்கும்போது சடகோபன் வீட்டுக்குள் நுழைந்தான். சடகோபனும் தினகரனும் ஒருவரையொருவர் வியப்போடு பார்த்தனர். அறிமுகமில்லாத இருவருக்குமிடையில் லாவண்யா வந்தாள்.
"இவன் என் தம்பி, பெயர் சடகோபன். சடகோபன் இவர் தான்

தினகரன்" அவள் தினகரன் என்று கூறியதும் தன் மனக் கற்பனையில் அவனைப் பற்றி ஏற்கனவே அவள் கூறியிருந்தவைகளை மனதிற்குள் கொண்டு வந்து பார்த்துக்கொண்டான்.

"என்னமாதிரி யாழ்ப்பாணம் போகயில்லையோ?" என்று பேச்சை ஆரம்பித்தான் தினகரன்.

"இன்னும் இல்லை. அங்கை ஒரே பிரச்சனையாகக் கிடக்குது. அப்பாவும் அக்காவும் பயப்பிடுகினம்"

"அதுவும் சரிதான் என்னத்துக்கு அவசரப்பட்டு வம்பை விலைக்கு வாங்குவான்"

"நீங்கள் ஏதோ பத்திரிகையிலை வேலை செய்யிறதாய் அக்கா சொன்னவ"

"ஓம், ஆனால் இப்ப இல்லை. அந்த வேலையை விட்டிட்டன்"

"ஏன்?"

"என்ரை எண்ணங்களுக்கு அங்கை சுதந்திரமில்லை. சும்மா எண்ணங்களையும் சுதந்திரங்களையும் அடகு வைச்சு என்னாலை வாழேலாது. அதனாலை அதை உதறிவிட்டன்...."

"நான் ஒரு சொந்தமாய் ஒரு பத்திரிகை தொடங்கினால் என்னவெண்டு அக்கா கேட்கிறா. அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறன்"

அப்போது தேத்தண்ணியோடு வந்த லாவண்யா,

"தம்பி இவர் இனிமேல் எங்கடை வீட்டிலை முன்னறையிலை தான் இருக்கப் போகிறார்"

என்று அவள் கூறும் போது அவளின் முகத்தின் ஒவ்வொரு அங்கமும் மகிழ்ச்சியால் துள்ளிச் சிரித்ததைக் கவனிக்க சடகோபன் தவறவில்லை. அவள் கூறிவிட்டுப் பின் கொல்லைக்குப் போய்விட்டாள்.

"அக்கா சொன்ன ஐடியா நல்லம். நீங்கள் செய்யுங்கோ நானும் ஒத்துழைப்புத்தாறன்" என்றான் சடகோபன். தினகரனுக்குத் தான் ஏதோ வானத்தில் பறப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

கொல்லைக்குப் போன லாவண்யா அங்கே தகப்பன் மாட்டுச் சாணத்தைக் கூட்டி அள்ளிக்கொண்டு நிற்பதைக் கண்டாள். அவருக்கு ஒத்தாசை செய்ய அருகில் போனாள். அவள் அருகில்போக வெள்ளைப்பசு காலைத் தூக்கியடித்தது. அதை மெதுவாகத் தடவி விட்டவாறே தகப்பனோடு சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தாள்.

"பிள்ளை..."

"என்னப்பா ... ?"

"அந்தத் தம்பி, தினகரனை எங்கடை வீட்டிலை இருக்கச் சம்மதிச்சிட்டம். ஊரிலை நாலு கதை கதைப்பினம். நீ கவனமாய் இரு. எனக்கு உன்னிலையும் அந்தத் தம்பியிலையும் அசைக்க முடியாத நம்பிக்கையிருக்குது"

"அப்ப ஏன் ஊருக்குப் பயப்படிறியள். ஆபத்து வரேக்கை ஊரா வரப்போகுது. ஊர் வேடிக்கை தான் பார்க்கும். ஊரை விட்டுத் தள்ளுங்கோ அப்பா" என்றவள் இரண்டு கைகளிலும் வைக்கோலைப் பிடித்துக்கொண்டு சாணகத்தை அள்ளிப்

பெட்டியிலை போட்டாள். "அப்பா, தினகரன் பத்திரிகை விடப்போகிறாராம். அதுக்கு நாங்கள் கொஞ்சக் காசு கொடுத்து உதவுவமே"

"எனக்கும் உதவ விருப்பம் தான். ஆனால் உனக்கெண்டு கொஞ்சக் காசு சேர்த்து வைத்திருக்கிறன். அதை இப்பிடிச் சிரைச்சிட்டனெண்டால் உனக்கென்னம்மா நான் செய்யிறது"

"அவரிட்டை ஒரு இருபதினாயிரம் இருக்காம். நாங்கள் ஒரு ஐயாயிரம் குடுப்பம்"

"சரி... நீ தீர்மானிச்சட்டாய் போல இருக்குது"

"அதுக்கென்ன குடுப்பம்"

"நான் சொல்லிறதைவிட நீங்களே அவரிட்டைச் சொல்லுங்கோ"

"அதுக்கென்ன வேலையை முடிச்சிட்டுப் போய்க் கதைப்பம்"

பின்பு இருவரும் எதுவும் கதைக்காமல் வேலையிலீடுபட்டனர். இவர்கள் இப்படியிருக்கச் -சடகோபனோடு கதைத்துக் கொண்டிருந்த தினகரனுக்குச் சடகோபனை மிகவும் பிடித்திருந்தது.

"நீங்கள் நினைக்கிற மாதிரி நியாயமாக நேர்மையாகப் பத்திரிகை விடலாமெண்டு நினைக்கிறியளோ" என்றான் சடகோபன்.

"முடிஞ்ச வரைக்கும் அப்பிடிவிடப் பார்க்கவேணும். அது தான் பத்திரிகா தர்மம். இல்லையெண்டால் அர்த்தமில்லை"

"என்ன இரண்டு பேரும் கதையிலை வெளுத்து வாங்கிறியள்"

என்று கூறிக்கொண்டே லாவண்யா அவர்களுக்கிடையில் வந்து புகுந்தாள்.

"சடகோபனுக்கும் பத்திரிகைத் தொழிலிலை நல்ல ஆர்வம் இருக்கு" என்று தினகரன் சொல்ல

"ஏன் அவன் சொல்லயில்லையே. நல்லாக் கதையும் எழுதிறவன்"

"என்ன கதை எழுதுறவரோ. எனக்குச் சொல்லவேயில்லை"

"இரண்டொரு கதை பத்திரிகையிலும் வந்திருக்கு. ஏதோ தர்மதாசன் என்ற பெயரிலை எழுதுறவன்"

"அருமையான புனைபெயர்"

"ஆனால் இவன் கதை எழுதிறது, எங்களுக்கு விருப்பமில்லை"

"ஏன்?"

"இப்ப படிக்கிற வயது. ஏன் குழப்புவான்"

"கதை எழுதிறதாலை படிப்புக் குழம்புமெண்டு யார் சொன்னது"

"ஏன் ஆரும் சொல்லவேணும். சும்மா எந்த நேரமும் அதே தியானமாய் இருந்தால் எப்படிப் படிக்கிறது"

இதையெல்லாம் அமைதியாய் குனிந்த தலை நிமிராமல் அடக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சடகோபன்.

அவர்களுக்கருகில் வந்த மகாலிங்கத்தார் வெத்திலையை எடுத்து அதற்குள் சிறிது பாக்கு வைத்து நுனி இலையில் சிறிது சுண்ணாம்பு பூசிவிட்டு, அப்படியே நாலாக மடித்து வாய்க்குள் வைத்த அந்தக் கம்பீரத்தை அணு அணுவாக

ரசித்தான் தினகரன்.

"தம்பி தினகரன் ஏதோ பத்திரிகை தொடங்கப் போறதாக மகள் சொன்னாள்"

"ஓம் மாஸ்டர் எனக்குப் பிடிச்ச துறை அதாலை தொடங்கினால் நல்லாச் செய்யலாமெண்ட நம்பிக்கை இருக்கு"

"நம்பிக்கை தான் தம்பி எல்லாத்துக்கும் அடிப்படை உம்முடைய இந்த முயற்சிக்கு நானும் ஒரு ஐயாயிரம் தாறன் தம்பி"

தினகரன் ஸ்தம்பித்துப் போய் நின்றான்.

# பதினொன்று

ஒரு நாட்டின் தலை நகரத்துக்குத் தனி மவுசு உண்டு. அதிகார பரவலாக்கம் செய்யப்படாத நாடாக இருந்தால் தலை நகரம் மிகுந்த நெருக்கடி மிகுந்த பிரதேசமாக இருக்கும். கொழும்பும் அப்படித்தான். பிரதான காரியாலயங்கள்! பிரதான தொழில் நிலையங்கள் நகரத்தின் பெரும் பகுதியை வளைத்துப் பிடித்திருந்தன. இதனால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிழைப்புத் தேடித் தலை நகரத்தை நோக்கி படையெடுத்தனர் மக்கள். பல இன மக்களும், பலவித மொழி பேசுபவர்களும் தங்கள் தங்கள் கலாசாரா உடைகளுடன் உலாவுகின்ற பிரதேசம் தான்

கொழும்பு. பல இன மக்கள் உலாவிக் கொண்டிருந்தாலும் கூடுதலாகப் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களே கண்களில்பட்டனர். புத்தரைக் கடவுளாகக் கொண்ட இம் மக்கள் புதுமையான உடைகளுடன் உலவிக் கொண்டிருந்தனர். வியாபாரிகளின் கூவல்களும், தனியார் பஸ்களுக்கு ஆட்சேர்ப்புச் சத்தங்களும் இயல்பான கலகலப்பையே உண்டு பண்ணியிருந்தன. இந்தக் காலிவீதியின் முகம் காலிமுகத்திடல் எனப்படும். இந்தக் காலிமுகத் திடலிலிருந்து புறப்பட்டு முக்கால் மணித்தியால பயண முடிவில் வருவது தான் இரத்மலானை. இந்த இரத்மலானை நகரிலிருந்து காலி வீதியில் செல்ல வருகின்ற நான்காவது வீடுதான் சுமணாவதியின் வீடு.

சுமாரான அழகு கொண்ட வீடு. ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்தினுடைய கலாச்சார வடிவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் வீடு அமைந்திருந்தது. திடீரென்று உங்கள் முன்னே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுமணாவதி என்ற பெயர் சம்பந்தமான செய்தியால் நீங்கள் ஆச்சரியமடைந்திருக்கலாம். இவள் சுதந்திரனின் காதலி. சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவள். சிங்கள சமூகத்தின் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவள்.

சுமணாவதிக்கு அன்று விடுமுறை. கதிரையொன்றில் இருந்து கதைப் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தாள். ஒரே காரியாலயத்தில் சுமணாவதியும் சுதந்திரனும் வேலை

செய்கின்றனர். சுதந்திரனுடைய அழகும், அவனது அடக்கமான சுபாவமும் அவளைக் கவர்ந்ததில் ஆச்சரியமேதுமில்லை. சுமணாவதியின் கலகலப்பான பழகும் தன்மையும், எந்நேரமும் சிரித்த முகமும் சுதந்திரனுக்கு ஒரு உத்வேகததை கொடுத்ததில் யாரும் வியப்புக் கொள்ள முடியாது. ஆனால் இவர்களோடு விதியும் தன் பந்தத்தை உருவாக்குகிறது என்பதைத் தெரியாமல் இருந்தார்களே என்பதை நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது.

சுமணா உலக நடப்புக்களோடு தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டவள். சுமணாவின் தகப்பன் அப்பகுதி அரசியல் அமைப்பாளர் பதவி வகுத்து வருபவர். ஓரளவுக்குப் பிரமுகர். இதனால் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் சுமணாவிற்கு ஈடுபாடுண்டு. தமிழர் சம்பந்தமான அரசியல் விடயங்களில் அடிக்கடி சுமணாவுக்கும் சுமணாவின் தகப்பன் திலகரத்னாவுக்கும் இடையில் விவாதம் நடக்கும். திலகரத்னாவின் ஆளும் கட்சி எடுக்கும் முடிவுகளை எல்லாம் சுமணா விமர்சிப்பாள். ஆட்சிக்கு வருபவர்களின் தவறான அணுகு முறைகள் தான் இந்தப் பிரச்சனைக்குக் காரணம் என்பது சுமணாவின் விவாதம். திலகரத்னாவைப் பொறுத்தவரை தலைவர்கள் சொல்வது வேதவாக்கு. ஒரு சமயம் அரசாங்கம் தமிழர்களுக்கெதிரான மசோதாவைக் கொண்டு வந்தபோது சுமணாவின் வீட்டில் ஒரு யுத்தமே நிகழ்ந்தது. அந்த மசோதாவுக்கெதிராக கொழும்பில் வெளிவரும் முற்போக்குப்

பத்திரிகையொன்றுக்கு நீண்டதொரு கட்டுரை எழுதினாள் சுமணா. அந்தக் கட்டுரை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதுவும் ஆளுங்கட்சியின் பிரதேச அமைப்பாளரின் மகள் அரசுக்கெதிராகக் கட்டுரை வரைந்தமை நிரம்பச் சிக்கலையே உருவாக்கியது. தலைமைப் பீடத்தால் அழைக்கப்பட்ட திலகரத்னா கடுமையாகக் கண்டிக்கப்பட்டார். தமிழர் சிங்களவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினைகளை ஆதியோடந்தமாக அறிந்து வைத்திருந்தாள் சுமணா. எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணகர்த்தாக்கள் தமிழ் அரசியல் வாதிகளும் சிங்கள அரசியல் வாதிகளும் தான் என்பதில் அசையாத நம்பிக்கை அவளுக்கு. தங்கள் சுயலாபங்களுக்குக்காக மொழி என்ற போர்வையில் மக்களைப் பகடைக் காய்களாகப் பாவித்தார்கள் என்பது இவர்கள் வாதம். முற்று முழுதாக எதையும் புரிந்து கொள்ளாமல் அரசியல் வாதிகளின் பம்மாத்து வார்த்தைகளில் மயங்கித் தமிழர்களைப் பரமவைரிகளாக எண்ணும் தகப்பனை அவளால் திருத்தவே முடியவில்லை.

இப்படியான மன நிலையையும் அறிவுத் தரத்தையும் கொண்ட சுமணாவுக்குச் சுதந்திரன் என்ற தமிழன் மேல் காதல் வந்தது விபத்தல்ல நிகழ்ச்சிதான். இதைத் திலகரத்னா அறிந்து கொண்டால் உண்டாகப் போகும் பிரளயத்தையும் அவள் புரியாதவளில்லை. சுமணா உண்மையிலேயே ஓர் அப்பட்டமான யதார்த்தவாதிதான். தமிழைப் படித்தாள்! ஒரு

தமிழனை விடத் தமிழில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற வெறியுடன் படித்தாள் சுமணா.

பதினொரு மணியாகியிருந்தது. கதைப் புத்தகத்தை வைத்து விட்டுச் சோம்பல் முறித்தபடி வெளியில் வந்தாள். திலகரத்னா வெளியில் இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். அவருக்கருகில் போய் இருந்தாள். பழைய பத்திரிகையொன்றை வைத்துக்கொண்டு வாசிப்பதும் பின்பு குறிப்பெடுப்பதுமாக இருந்த அவரை வியப்போடு பார்த்தாள். கிட்டத்தட்ட ஏழுவருடங்களுக்கு முந்திய ஒரு சிங்களப்பத்திரிகை அது. பத்திரிகையைத் தானும் நோட்டம் விட்டாள். யாழ்ப்பாணத்தில் துரையப்பா மரணம் என்ற தலைப்புச் செய்தி இருந்தது. யாழ் மேயர் கோவிலுக்கு வழிபாட்டுக்காகச் சென்ற பொழுது, மறைந்து நின்று விடுதலைப் போராளிகள் சுட்டதாக இருந்தது.

“ஏனப்பா பழைய பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறியள்” என்று சாவதானமாகச் சிங்களத்தில் கேட்டாள்.

நாளைக்கு ஒரு கூட்டம் இருப்பதாகவும் அதில் பேசுவதற்காகத் தான் குறிப்பெடுப்பதாகவும் கூறினார்.

“துரையப்பாவின் சாவுக்கும் உங்கடை பேச்சுக்கும் என்ன சம்பந்தம்” என்று அவள் எதுவும் புரியாதது போல் கேட்டாள்.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு விறுக்கென்று எழும்பிப்போய்விட்டார்.

சுமணா மனதுக்குள் சிரித்துக்கொண்டாள். அவள்

சுதந்திரனைக் காதலிக்க ஆரம்பித்தபின் தமிழர் போராட்டம் பற்றி மிக விரிவாகவே அறிந்து வைத்திருந்தாள்.
போராட்டம் குழு நிலையில் ஆரம்பித்த காலத்தில் களையெடுப்பும் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

துரையப்பா அரசோடு சேர்ந்து விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முற்பட்டார் என்றும் அதற்காகவே அவர் சுடப்பட்டார் என்றும் சுமணா சில புத்தகங்களில் வாசித்திருந்தாள். இதற்கு அவள் உடன்பாடுடையவளாக இல்லாவிட்டாலும் தார்மீக ரீதியாகத் தவிர்க்கமுடியாமல் கொள்கையளவில் மனதுக்குள் அங்கீகரித்திருந்தாள்.
தகப்பன் போனவேகம் அவ்வளவு யதார்த்தமாக இருக்கவில்லை. இதனால் அவள் சற்றுக் குழப்பமடைய ஆரம்பித்திருந்தாள்.
மனது குழம்பிப்போயிருந்தது. பேசாமல் அறைக்குள்போய் கட்டிலில் விழுந்து படுத்து விட்டாள். சமையலறைக் குள்ளிருந்த சுமணாவின் தாய் வேலைகளை முடித்துவிட்டு அறைக்குள் வந்தாள். சுமணா படுத்திருப்பது வியப்பைக் கொடுத்தது. ஒரு நாளும் சுமணா பகலில் படுத்தது கிடையாது. காய்ச்சலாக இருக்குமோ? என்ற ஐயத்தில் தொட்டுப் பார்த்தாள். அப்பிடியில்லை. ஏதும் அலுப்பாக இருக்கும் என்று நினைத்து தன்னுடைய மற்ற வேலைகளைப் பார்க்கப் போய்விட்டாள். வெளியில் போயிருந்த

திலகரத்னா திரும்பி வந்தபோது முகத்தில் இறுக்கம் தெரிந்தது. சுமணா இன்னும் படுக்கையில்தான் இருந்தாள். அறைக்குள் எட்டிப் பார்த்த திலகரத்னா எழும்பட்டும், என்று வாய்க்குள் முணு முணுத்தபடி வெளியில் வந்து இருந்தார். நேரம் ஆறுமணி. படுக்கையை விட்டு எழும்பிய சுமணா முகம் கழுவிச் சோம்பலை முறித்துக் கொண்டு குசினிக்குள் போய் தாயிடம் தேநீர் கேட்டு வாங்கினாள்.

"சுமணா இஞ்சை வா" என்று திலகரத்னா ஆவேசத்துடன் கூப்பிட்டார். தகப்பன் கூப்பிட்டதும் அருகில் சென்று இருந்தாள். சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. குசினிக்குள் சுமணாவின் அம்மா சமைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு லொக்கு பண்டா தனது பழுதான ரக்டரைத் திருத்திக் கொண்டிருக்கும் கறார் புறார் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. மகளைச் சிறிது நேரம் வாஞ்சையோடு பார்த்துக் கொண்டிருந்த திலகரத்னா, தொண்டையைச் செருமிக் கொண்டு,

"சுமணா நான் கேள்விப்பட்டது உண்மையா?" என்று கேட்டார்.

"என்னப்பா கேள்விப்பட்டனீங்கள்?"

"உனக்கும் உன்னோடை வேலை செய்யிற தமிழ்ப் பொடியனுக்கும் இடையிலை..." இந்த விசாரணையை அவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அது இவ்வளவு சீக்கிரமாக வந்தது வியப்பைக் கொடுத்தது.

"உண்மை தானப்பா..." வெள்ளம் தலைக்கு மேல் வந்தபின்

அணைகட்டுவது முட்டாள்தனம் என்பதால் துணிந்தது அவள் மனம். ஒரு மனிதனைத் துணிவு ஆக்கிரமிக்கும் போது உண்மையைத் தவிர வேறு எதுவுமே வாயிலிருந்து வராது. ஏனென்றால் பொய் கூறிக் காப்பாற்ற வேண்டிய உயிரைத் துணிவு வரும்போது துச்சமென மதிப்பதால் தான். இந்த நிலையில்தான் சுமணா இருந்தாள்.

துணிந்து கூறி விட்டாள்.

“அவர் நல்லவரப்பா. அவரைத்தான் கலியாணம் கட்டப்போறன்” என்றாள்.

“எனக்கு அவன் நல்லவனோ கெட்டவனோ என்பது பற்றிக் கவலையில்லை ஆனால் தமிழன். ஒரு தமிழனைக் கட்டக் கடைசி வரைக்கும் விடமாட்டன் “

“ஏனப்பா...அவர் படிச்சவர். நல்ல வேலை பார்க்கிறார்”

“ஆனால் எங்கடை இனம் இல்லையே”

“ஏனப்பா அவற்றை உடம்பிலை பச்சை இரத்தமா ஓடுது”

“உப்பிடியெல்லாம் வாதஞ் செய்ய நல்லாய்த் தான் இருக்கும். வாழ்க்கைக்கு ஒத்து வராது”

“அதெப்படிச் சொல்லுவியள். நீங்கள் செய்து வையுங்கோ நாங்கள் வாழ்ந்து காட்டிறம்”

“எண்டைக்கும தமிழருக்கும் சிங்களவருக்கும் உறவு சரிப்பட்டு வராதம்மா”

“நீங்கள் என்ன சொன்னாலும் நான் அவரைத்தான் கட்டுவன்”

இதற்கு மேல் திலகரத்னாவால் பொறுக்க முடியவில்லை. அவரது ஐந்து விரல்களும் சுமணாவின் கன்னத்தில்

பதிந்தன. சுமணா சுருண்டு விழுந்தாள். திலகரத்னா வெளிய-ில் போய் விட்டார்.

சத்தம் கேட்டு வெளியில் வந்த சுமணாவின் அம்மா பதை பதைத்துப் போய் விட்டாள். சுமணாவை அணைத்து வந்து கட்டிலில் கிடத்தினாள். சுமணாவின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. தீர்மானம் எடுக்க முடியாமல் தத்தளித்தாள். மனதின் எங்கோ ஒரு மூலையில் ஏதோ தென்படுவது புரிந்த போதிலும் அதை அவளால் அணுக முடியவேயில்லை. சிந்தித்தே இருந்தவள் தூங்கிப் போனாள்

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட சுதந்திரன் கொழும்பு வந்திறங்கும் மட்டும் யாழ்ப்பாணச் சம்பவங்கள் பற்றி அவனுக்குத் தெரியாது. வந்திறங்கியவுடன் பத்திரிகைகள் பரபரப்பாக விற்பனையாவது அவனைப் பரபரப்படைய வைத்தாலும் பிரயாண அலுப்பில் எதையும் கவனியாமல் புறப்பட்டுவிட்டான். அறைக்கு வந்தவன் எல்லாவற்றையும் கட்டிலில் போட்டுவிட்டு அலுப்புத் தீரக்குளித்தான். வானொலியில் கோவிந்தராஜனுடைய பக்திப் பாடல் போய்க் கொண்டிருந்தது. குளித்து முடிந்து வெளியில் வந்து அறையின் மூலையில் இருந்த முருகனைக் கும்பிட்டான். கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தான். சுமணா நின்றிருந்தாள். சுமணாவைக் கண்டதும் அலுப்பெல்லாம் போய்விட்ட மாதிரி இருந்தது.
“வா சுமணா வந்திரு” என்று அழைத்து வந்து இருத்தி

விட்டு, யன்னலைச் சிறிது திறந்துவிட்டான். மெல்லிய இளந்தென்றல் மெதுவாக உள்ளே வந்தது.

“எப்பிடி ஊர்ப் புதினங்கள்?” சுமணா கேட்டாள்.

“ஊர்ப் புதினத்திற்கென்ன. ஒரே பிரச்சினைதான். வீட்டிலையும் பிரச்சினை” என்றான் சலிப்பாக. சலிப்படைந்து நிற்கும் அவனுக்குத் தன்னுடைய பிரச்சனையைக் கூறுவது மேலும் அவனைக் குழப்பத்திலாழ்த்தும் என்றெண்ணி,

“அப்பா பாடு எப்படி? இப்ப சுகமாயிட்டாரா?” என்று கேட்டாள். “சுகமாயிட்டார். ஆனால் அவருக்கு நல்லாய் அடிச்சுப் போட்டான்கள்” என்றான் மனவருத்தத்துடன். இதற்கு சுமணா பதில் ஏதும் சொல்லவில்லை.

“நேற்று நீங்கள் யாழ்ப்பாணத்தாலை வெளிக்கிட்டாப்போலை நடந்தது தெரியுமே” என்றாள்.

“ஏன் என்ன?”

“யாழ்ப்பாணத்திலை நாலு பொலிஸ்காரரைப் பயங்கரவாதிகள் சுட்டுப் போட்டாங்கள்”

“சுமணா...தமிழ்ப் பொடியங்களைப் பயங்கரவாதிகள் என்று நீரும் சொல்லாதையும். எனக்கொரு மாதிரிக் கிடக்குது” என்று கூறிய சுதந்திரனை சுமணா வியப்போடு பார்த்தாள். சிறிது நேரம் பேசாமலிருந்த அவன்,

“பொலிஸ்காரர் சரியாய் நடந்தால் ஏன் சுடுகினம்?” என்றான்.

“சரியில்லாத எல்லாரையும் உங்கடை பொடியள் சுட்டுச் சாக்காட்ட யார் அதிகாரம் கொடுத்தது”

“அதிகாரம் சரியாக இல்லாவிட்டால் றோட்டிலை போறவையும்

அதிகாரத்தை கையிலை எடுத்துச் சன்னதமாடிறது தவிர்க்க முடியாதது தானே"

சுமணா திகைத்துப் போய் விட்டாள். சுதந்திரனால் இப்படியும் கதைக்க முடியுமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

"சுதா... எதிர்க் கருத்துக் கொண்டவர்களைக் கொலை செய்யிறது எங்கடை கொள்கையின்ரை பலவீனத்தைத்தான் காட்டுமேயொழிய பலத்தையல்ல"

"எதிர்கருத்துக் கொண்டவங்களைக் கொலை செய்வது கூடாதுதான். ஆனால் தனிப்பட்ட சமூகத்திற்கு கொடுமை செய்யிறவையைக் கொல்லலாம் தானே"

சுமணா சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. இந்த விடயத்தை அவள் தொடர்ந்து கதைக்க விரும்பவில்லை.

"எனக்கும் வீட்டிலை பிரச்சினை" என்று குண்டைத் தூக்கித் தொம்மென்று போட்டாள்.

சுதந்திரன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.

"எங்கடை அப்பா ஒரு மாதிரியான ஆள். அரசியல் செல்வாக்கும் இருக்கு. பலவந்தமாய் எனக்குக் கலியாணம் செய்து வைச்சாலும் வைச்சிடுவார். அதாலை நான் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கிறன். அவளை ஏறிட்டுப் பார்த்தான் சுதந்திரன். நாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்யிறதைத் தவிர வேறு வழியில்லை"

என்ன துணிச்சல்! சுதந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. காதலிக்கும் போது உண்டான தைரியம் இப்போது வர மறுத்தது.

"எனக்கும் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு" என்றான்.

"ஓ.கே... நாங்கள் காரியாலயத்தில் சந்திப்பம்" என்று புறப்பட்டு விட்டாள். சுதந்திரனது மனம் தளம்பிக் கொண்டிருந்தது. மண்டையைப் பிய்த்துக்கொண்டு ஓடவேண்டும் போல் இருந்தது. உடுப்பை மாற்றிக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டான். வேலைத் தலத்தில் அவனால் வேலையில் மனதைச் செலுத்த முடியவில்லை. சுமணாவைத் திரும்பிப் பார்த்தான். அவள் எவ்வித சலனமுமில்லாமல் வேலையில் மூழ்கியிருந்தாள்.

எந்தக் காரணத்தையும் கொண்டு சுமணாவை இழக்க அவன் விரும்பவில்லை. சுமணா கூறிய காரணமும் இலேசில் தட்டிக் கழிக்கக் கூடிய ஒன்றல்ல. உண்மையிலே சுமணாவின் தகப்பன் பொல்லாதவர் தான். அதுவும் பெரிய அரசியல் செல்வாக்குள்ள அவரால் இப்படியான விசயங்களை வெகு சுலபமாகச் சாதிக்க முடியும். சுமணாவே துணிந்து விட்டாள். பிறகென்ன?

# பன்னிரண்டு

சுதந்திரன் குழம்பிப் போய் இருந்தான். தன்னால் முடிந்தளவுக்குச் சிந்தித்தான். முடிவு சுமணாவுக்குச் சாதகமாகவே வந்தது கொண்டிருந்தது. அவன் துணிந்து விட்டான். தன்னுடைய முடிவை அவளுக்குத் தெரிவிக்க எண்ணிக் கொண்டிருந்த போது காரியாலய விலாசத்திற்கு வந்த கடிதம் ஒன்றைப் பீயோன் அவன் மேசையில் வைத்துவிட்டுச் சென்றான். கடிதத்தை அவசரமாக உடைத்து வாசித்தான்.

***அன்புள்ள தம்பிக்கு.***

*நீ போன பின் இவ்விடம் நிலமை மோசமாக உள்ளது. வீதியில் போபவர்கள் வருபவர்களையெல்லாம் கைது செய்கிறார்கள். தம்பி சடகோபனை இங்கு வைத்திருப்பது நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போல் உள்ளது. அவனை இன்று உங்கு அனுப்பி வைக்கிறேன். அவனை ஏதும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க முயற்சி செய்.*

*இப்படிக்கு*

*அப்பா*

கடிதத்தை வாசித்து முடித்ததும் முகத்தை இருகைகளாலும் மூடிக் கொண்டு பேசமாமலிருந்தான். மனது குழம்பியிருந்தது. இப்போ தான் மனதுக்குள் அல்லாடிக் கொண்டிருந்த பிரச்சனைக்கு முடிவெடுத்தவன் அதற்குள் மற்றப் பிரச்சனை வந்தபோது என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. தனது மேசைக்கு எதிரே வேலையில் மூழ்கியிருந்த சுமணாவை நிமிர்ந்து பார்த்தான். கடிதம் அவன் உடைத்ததையும் வாசித்ததையும் அதனால் முகத்தில் மாற்றம் ஏற்பட்டதையும் ஏற்கனவே அவதானித்திருந்த சுமணா அவன் பார்த்ததும் என்னவென்று கேட்டாள். அவளை வெளியில் வரும்படி சைகை செய்து விட்டு அவனும் எழும்பி வெளியே போனான். இருவருமாகக் கன்ரீனுக்குப் போனார்கள்.

“ஆர் கடிதம் எழுதினது?”

சுமணா மௌனத்தை உடைத்தாள்.

“அப்பா..” பெருமூச்சோடு சொன்னான்.

“என்னவாம்?”

அவன் பதில் கூறாமல் கடிதத்தை அவளிடம் கொடுத்தான். கடிதத்தை வாங்கிப் படித்த சுமணா, இதுக்கேன் கவலை. அப்பா சரியாகத்தானே செய்திருக்கிறார்.

"நீங்கள் ஏன் யோசிக்கிறியள். ஆரையும் பிடிச்சு வெளிநாட்டுக்கு அனுப்புவம்... அவளின் உறுதியான ஆதரவு நிறைந்த முடிவு அவனுக்கு இதயத்தில் ஒரு நிறைவைக் கொடுத்தது. சிறிது நேரம் இருவரும் அமைதியாக இருந்தனர். இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், அவசரமானதும் அவசியமானதுமான தன்னுடைய பிரச்சனைக்கு எவ்வித முடிவும் சொல்லாமல் இருக்கிறானே என்று வருத்தத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சுமணா நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்" மௌனத்தைக் கிழித்துக்கொண்டு அவன் கூறிய அந்த வசனம் அவளது இதயத்தை ஊடுருவியது.

"என்ன?" என்று வியப்போடு கேட்டாள்.

"ஓம் சுமணா வாறது வரட்டும். என்னாலை உன்னை இழக்க முடியாது" இப்படிக் கூறும் போது அவன் கண்கள் கலங்கி விட்டன. சுமணாவுக்கு தலை கால் புரியாத சந்தோஷம். அவனையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஏய்... சுமணா இது...?" சுதந்திரன் அவளைத்தட்டினான். இருவரும் சேர்ந்து பல திட்டங்கள் போட்டார்கள். பலருக்குச் சொல்லாமல் தங்களுடைய நெருங்கிய நண்பர்களுக்கு மாத்திரம் சொல்வதென்று தீர்மானித்தனர். அடுத்த

வெள்ளிக்கிழமையென்று நாளும் நிச்சயிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் இப்படி முடிவெடுத்துக் கொண்டிருக்கும் போது விதி வேறு முடிவை எடுத்து விட்டதென்பது யாருக்குப் புரியும்? பெரியதொரு பிரச்சனைக்கு முடிவெடுத்த திருப்தியில் கந்தோரை விட்டு வெளியில் வந்தான் சுதந்திரன். மனசு சந்தோஷத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. சிவன் கோவிலுக்குப் போனால் என்ன என்று மனம் கேட்டது. புறப்பட்டான். கந்தோருக்கு முன்னால் உள்ள பஸ் நிலையத்தில் 105 ஆம் இலக்க பஸ்ஸில் ஏறிக் கோவிலின் முன்னால் அவன் இறங்கிய போது நேரம் சரியாக ஐந்து மணி. முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பட்ட அந்தக் கோவில் அவன் வழக்கமாக வந்து போவதுதான் ஆனால் இன்றைக்கு என்னவோ புதிதாக அவனுக்குப்பட்டது. உள்ளே நுழைந்தவன் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாக மனமுருக வழிபட்டான்.

அவனுடைய குரல் ஆண்டவனுக்குக் கேட்டதோ என்னவோ கேட்க வேண்டும் என்ற நோக்கில் மனதாரக் கும்பிட்டான். கோவில் வழிபாட்டை முடித்துக் கொண்டு அறைக்கு வர நேரம் ஏழரை மணியாகி விட்டது. மனச் சந்தோஷத்தில் கட்டிலில் தொப்பென்று விழுந்தான். கண்கள் கூரையைப் பார்த்துக் கொண்டிருக்க நெஞ்சம் இனிய கற்பனையில் ஆழ்ந்திருந்தது. அவன் கட்டிலில் படுத்து பத்து நிமிடம் தான் இருக்கும், கதவு படபட வென்று தட்டப்பட்டது, கோபத்தோடு போய் கதவைத் திறந்தான்.

வெளியில் பொலிசார் நின்றிருந்தனர். அவன் என்னவென்று விசாரிக்க முன்பே அவனை வளைத்துப் பிடித்துக் குப்புறப் படுத்திக் கைகளைப் பின்னுக்கு வைத்துக் கட்டினர். அறையின் மூலை முடுக்கெல்லாம் அக்குவேறு ஆணி வேறாகச் சோதிக்கப்பட்டது. யாரோ ஒரு பொலிஸ்காரன் சுவாமிப் படத்தை எறியப் போனபோது, ஏய் அது சுவாமிப்படம் என்று கத்தினான் சுதந்திரன். சுதந்திரன் கத்தி வாய் மூட முன்னம் அருகில் நின்ற பொலிஸ்காரன் பூட்ஸ் காலால் அவன் வாயில் மிதித்தான். சுதந்திரன் சுருண்டான். சுதந்திரனைத் தள்ளிக்கொண்டு ஜீப்பில் ஏற்றினர். 'தெமில் பண்டி' என்று சிங்களத்தில் திட்டினார்கள். கொட்டியாகே யாலுவா (புலியின் நண்பன்) என்றான் ஒருவன். காதுக்குள் நாராசமாக விழுந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு பேசாமலிருந்தான் சுதந்திரன். பத்து நிமிடம் ஓடியபின் ஜீப் நின்றது. ஜீப்பில் இருந்து அவனை ஒரு மிருகத்தை இழுப்பது போல் இழுத்து வந்து ஸ்ரேசனுக்குள் தள்ளினர். அங்கிருந்த பொலிஸ்காரரும் அவனைத் தட்டிப் பதம் பார்த்துக் கொண்டனர். சுதந்திரனுக்கு மூட்டெல்லாம் வலித்தது. கடைவாயில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அந்த ஸ்ரேசனின் இன்ஸ்பெக்டர் வந்தான். இளம் வயது. உஷாரான தோற்றம். முகத்தில் கண்டிப்பு இயற்கையாகவே அமைந்திருந்தது. ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரிடம் நல்லபெயர் சம்பா திப்பதற்காகச் சுதந்திரனைப் பாய்ந்து மிதித்தான். சுதந்திரன் சுருண்டு சுவரோடு மோதி நிலத்தில் தொப்பென்று விழுந்தான்.

பொய் மூக்கு உடைந்து இரத்தம் வழிந்தது. இரத்தம் வழிந்து வாய் நோக்கி வந்து கொண்டிருந்தது. கையால் துடைக்க முடியாது. கைகளில் விலங்கு பூட்டப் பட்டிருந்தது. சுதந்திரனுக்கு எரிச்சலாக இருந்தது. இன்ஸ்பெக்டர் சுதந்திரனையே பார்த்துக் கொண்டிருந்தான். என்ன நினைத்தானோ தெரியாது. விலங்கைக் கழற்றும்படி சொன்னான். விலங்கு கழற்றப்பட்டது, சுதந்திரனுக்கு வியப்பாக இருந்தது. சுதந்திரனின் முதுகில் தட்டி அரவணைத்துக் கதிரையில் இருத்தினான். சுதந்திரனுக்கு இப்போது தைரியம் வந்திருந்தது.

“என்னை எதற்குக் கைது செய்தீர்கள்” என்று கேட்டான்.

“உம்மைப் பற்றி எங்களுக்கு ஒரு தகவல் வந்ததாலைதான் கைது செய்த நாங்கள். உமக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கிறதாகத் தகவல் வந்தது.”

சுதந்திரனுக்குச் சிரிப்புத் தான் வந்தது.

“சும்மா ஒரு ஆள் வந்து சொன்னால் நீங்கள் ஆரையும் பிடிச்சு அடிப்பியளோ” ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினான் சுதந்திரன்.

“ஓ.கே எனக்கு விளங்குது. நாங்கள் என்ன செய்யிறது. எப்படி நாங்கள் கண்டு பிடிக்கிறது.? அந்த முயற்சியிலை, உம்மைப்போலை அப்பாவிகளும் பாதிக்கப்படுகினம்தான்...” என்று கூறிய அவனைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சுதந்திரன்.

அந்தப் பொலிஸ் அதிகாரிக்குச் சுதந்திரனது குற்றமில்லாத்தன்மை நன்கு புரிந்தது.

“நான் உங்களை விடுதலை செய்யிறன். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னை நாடலாம். என் பெயர் சில்வா”

“தாங்ஸ் சில்வா”

“அதேபோல உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் என்னை நாடலாம்” என்று கூறி விட்டு வெளியே வந்தான். கால்கள் இரண்டும் வலித்தன. என்ன மாதிரி அடித்தார்கள். வழியில் வந்த ராக்ஸியை மறித்து வீட்டு விலாசத்தைக் கூறிவிட்டு பின் சீற்றில் சரிந்தான் சுதந்திரன்.

# பதின்மூன்று

மகாலிங்கம் மாஸ்டரின் வீட்டில் தினகரனுக்கு முன்னறை ஒதுக்கப்பட்டமை ஒரு துணிச்சலான முயற்சியாக வேபட்டது. அந்தக் கிராமத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தினகரனுக்கு உயர் சமூகத்தைச் சேர்ந்த மகாலிங்கம் மாஸ்டரின் வீட்டில் இருப்பிடம் என்றால் யார்தான் சகித்துக் கொள்வார்கள். ஆனால் தனக்குத் துன்பம் ஏற்பட்டபோது வேடிக்கை பார்த்த உயர் சாதியினரை விட எதையும் பொருட்படுத்தாமல் உதவி செய்த தினகரன் தான் உண்மையான உயர் சாதிக்காரன் என அவர் முடிவு

செய்ததும் நியாயமானதே! ஊருக்குள் பரவலாகச் சலசலப்பு எழத்தான் செய்தது. பலர் மகாலிங்கம் மாஸ்டரைச் சபித்தார்கள். லாவண்யாவின் நடத்தையிலேயே களங்கம் சுமத்திக் கதைத்தார்கள். ஆனால் மகாலிங்கம் மாஸ்டரோ லாவண்யாவோ முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை. அவர்கள் மேல் சுமத்தப்பட்ட எல்லா அவச் சொற்களையும் எவ்விதமான கசப்புமின்றி விழுங்கிக் கொண்டனர்.

லாவண்யாவும், தினகரனும் முற்றத்தில் அமர்ந்திருந்தனர். நல்ல நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

"நீங்கள் ஒரு கம்னியூஸ்டாய் இருந்தனிங்களே?" லாவண்யாவின் இந்த எதிர்பாராத கேள்வியில் திடுக்கிட்ட தினகரன் அவளைப் பார்த்துப் புன்னகைத்துக் "கம்னியூஸ்ட் அல்ல ஆதரவாளன்" என்றான்.

"உங்களுக்கும் அந்தக் கொள்கைகள் பிடிக்குமோ?"

"எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது"

"கம்னியூஸ்டுக்களின் தவறான அணுகுமுறைதான் இன்றைய பிரச்சனைகளுக்குக் காரணம். தமிழர் இன்றைக்கு ஆயுதம் ஏந்திப் போராடும் அளவுக்கு வந்ததுக்கு பிற்போக்கு அரசியல் வாதிகளைவிட முற்போக்கு அரசியல் வாதிகள் தான் காரணம்" இப்படி தினகரன் சொன்னதும் லாவண்யா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இல்லை, நீங்கள் நம்பிற கொள்கையை நீங்களே விமர்சிக்கிறியள்"

புத்திக்கூர்மையும் அரசியல் அறிவும் உள்ள ஒரு பெண்ணுக்கு முன்னால் தான் இருப்பதை இப்போது உணரத்தொடங்கினான் தினகரன். சிறிது நேரம் இருவரும் பேசாமலிருந்தனர்.

லாவண்யாவே பேச ஆரம்பித்தாள்.

"ஏன் ஆயுதமேந்திப் போராடுறது தவறே. பாம்பு கடிக்க வரேக்கை பாம்பைக் கம்பால் அடிக்கலாமேயொழிய தூக்கி கொஞ்சேலாது"

"லாவண்யா... தர்க்கரீதியாகப் பல உதாரணங்களைத் தூக்கிப் போடலாம். ஆனால் உண்மையை மறைக்கேலாது. தமிழருடைய சுயநிர்ணய உரிமைதான் முதற் கட்டம். இந்த சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராகக் கோரிக்கை வைத்திருந்தால் போர் இரு இனம் கலந்த போராக வெடித்திருக்கும். பதிலாக நிலத்துக்கான கோரிக்கை முதலிலை வைக்கப்பட்டதாலை இரு இனம் கலந்த போரக இல்லாமல் இரு இனங்களுக்கிடையேயான போராக போராட்டம் உருவெடுத்திட்டுது. இதனால் எல்லாவற்றிற்கும் காரணமான பொது எதிரி எங்கோ இருந்து உல்லாசமாக பொழுதைப் போக்குகின்றான். இந்தப் பொது எதிரியைத் தப்பவிட்டது இரு இனத்துக்குமே ஆபத்தானது என்பதை யாருமே உணராதது தவறே"

"நீங்களும் உங்கடை முற்போக்கு வாதிகளும்! சொற் சிலம்பம் தான் ஆடுவியள்" இந்த வாதத்தைத் தொடரத் தினகரன் விரும்பவில்லை. கதையை மாற்றினான்.

"சரி லாவண்யா உந்தக் கதையைப் பிறகு கதைப்பம். இப்ப

பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம்"
தினகரன் இரண்டு மூன்று பெயர்களைச் சொன்னான். லாவண்யாவுக்கு அவை பிடிக்கவில்லை. இப்படி இவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது; சடகோபன் வந்திருந்தான்.
"என்ன? ஆழமாய் யோசிக்கிறியள்.?" என்று கேட்டான்.
"பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம் சடகோபன்?"
"மணியோசை என்று வைப்பம்"
சடகோபன் சென்ன இந்தப் பெயர் இருவருக்கும் பிடித்துப்போயிற்று. தூரத்தில் ஏதோ அலுவலாக நின்ற மகாலிங்கம் மாஸ்டரும் "உது நல்ல பெயர் தம்பி" என்றார். பிறகென்ன பத்திரிகையின் பெயர் சூட்டு விழா வெற்றிகரமாக நடந்தது. சிறிது நேரம் மூவரும் இருந்து ஊர் விடயங்களைக் கதைத்த பின்னர் நேரம் ஒரு மணியாகிவிட்டது. அமைதியோடு படுக்கைக்குச் சென்றனர். தன்னுடைய அறையில் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் நிரைப் படுத்திவிட்டு அமைதியோடு படுக்கைக்குச் சென்றான் தினகரன்.

காலை கதவு தட்டிச் சத்தம் கேட்டு நேரத்தைப் பார்த்தவன் அதிக நேரம் தூங்கி விட்டதால் வெட்கத்தோடு கதவைத் திறந்தான். லாவண்யா நின்றிருந்தாள்.
"இப்பொழுது நேரம் பத்து மணி" என்றாள்.
"தெரியும்" என்று கூறிய வண்ணம் கிணற்றடியை நோக்கிப் போனான். குளித்து உடையணிந்து தினகரன் வர லாவண்யா

கோப்பியுடன் வரவும் சரியாக இருந்தது. கோப்பியை வாங்கிக் குடித்து விட்டு வேகமாக வெளியே புறப்பட்டான்.

விந்தையான மனிதன் என்று மனதுக்குள் முணு முணுத்துக் கொண்டாள். சோம்பலை முறித்துக் கொண்டு வந்த சடகோபன் லாவண்யாவைப் பார்த்து "அக்கா கோப்பி தா" என்று கேட்டான்.

அவள் அவனை முகம் கழுவ அனுப்பி விட்டு மீண்டும் குசினுக்குள் போய்விட்டாள். கடைத் தெருவுக்குள் வந்த தினகரன் அச்சகம் ஒன்றைத் தேடிப் போனான். தமிழ்ப் பூங்கா என்று பெரிய எழுத்தில் பலகை மாட்டப்பட்ட அச்சகம், அதனுள் நுழைந்ததும் ஒரு வயது போனவர் அவன் அருகில் வந்து வணக்கம் என்றார். தினகரனும் பதிலுக்கு வணக்கம் கூறினான்.

"என் பெயர் தினகரன்..." என்று அவன் கூறு முன்பே "தெரியும்" என்றார்.

"என்னைத் தெரியுமா உங்களுக்கு" என்று வியப்போடு கேட்டான் தினகரன்.

"உன்ரை சரித்திரமே எனக்குத் தெரியும்" என்று அவர் சொன்னதும் இந்த அச்சகம் சரிவராது போலை என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான். பழுத்த கிழவரான அவர் பத்திரிகை விடுவதிலுள்ள சகல விதமான கஷ்ட நஷ்டங்களையும் எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதிலுள்ள உண்மைகள் பத்திரிகையாளனான அவனுக்கும் புரியாமலில்லை! ஆனால் லாப நோக்கில் விடப்படும் பத்திரிகைக்கும்

இலட்சியத்தோடு விடப்படும் பத்திரிகைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அவருக்கு எடுத்துரைத்தான். இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைத்தவர்கள் பாதையில் வரும் துன்பங்களையும் இன்பங்களாகக் கருதவேண்டும் என்று கூறினான். அவனை அன்போடு பார்த்துப் புன்னகைத்தார் அவர். தன்னால் முடிந்தளவுக்கு உதவிகளை செய்வதாகக் கூறி அவனை வாழ்த்தி அனுப்பினார். அச்சக உரிமையாளரின் உதவிக்கரம் நீண்டமை அவனுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. மணியோசை பற்றிய நினைவுகளுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் தினகரன். நேரம் நாலாகி விட்டிருந்தது. இன்னும் சாப்பிடவில்லை. லாவண்யா காத்துக் கொண்டிருந்தாள். மகாலிங்கம் மாஸ்டர் பாடசாலையால் வந்திருக்கவில்லை. அவள் விறுவிறுவென்று வீட்டுக்குள் நுழைந்தாள். அவன் அவளைப் பார்த்துச் சிரித்து விட்டு அறைக்குள் நுழைந்து விட்டான்.

அவனுடைய சிந்தனைகள் முழுக்க மணியோசையில் இருந்ததால் லாவண்யாவின் முகத்தில் ஒடிய சோகத்தைக் கவனிக்கவில்லை.

அவன் கிணற்றடிக்குப் போகும் போது "சாப்பிட்டீர்களா?" என்று ஆற்றாமையால் கேட்டாள்.

"இல்லை லாவண்யா, பத்திரிகை அலுவலிலை மறந்திட்டன். என்று கூறிக்கொண்டு கிணற்றடிக்குப் போய்விட்டான்.

"நீ சாப்பிட்டியா?" என்று கேட்பானென்று எதிர்பார்த்திருந்த லாவண்யாவுக்கு அவன் அப்படிக் கேளாதது நிரம்ப

வேதனையைக் கொடுத்தது. சாப்பாட்டை மேசையில் வைத்து விட்டுக் காவலிருந்தாள். மேசைக்கு வந்த தினகரன் "நீ சாப்பிட்டியா லாவண்யா?" என்று கேட்டான். அப்படி அவன் கேட்டவுடன் அவள் உடல் முழுவதும் குளிர்ந்து விட்டது. இவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பாடசாலையிலிருந்து அவசர அவசரமாக வந்த மகாலிங்கம் மாஸ்டர், வந்ததும் வராததுமாக

"எங்க பிள்ளை சடகோபன்?" என்று அவசரமாகக் கேட்டார்.

"கடைக்குப் போட்டான்"

"தம்பி தினகரன் நீர் எனக்கொரு உதவி செய்யவேணும். நாளைக்கே சடகோபனைக் கொழும்புக்குக் கூட்டிப் போய் ஆரையும் பிடிச்சு வெளிநாட்டுக்குச் சடகோபனை அனுப்பிற அலுவலைப் பாக்கச்சொல்லியிட்டு வரவேணும்" என்றார். தினகரன் அவரை ஏன் என்று கூடக் கேட்கவில்லை.

"அதுக்கென்ன" என்று தெரிவித்தான். தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே "என்னுடைய கனவுகள் எல்லாம் நிறைவேறும் பொழுது வந்துவிட்டது லாவண்யா" என்றான்.

"அப்பிடி என்ன கனவுகள்?" என்று கேட்டாள். அப்போ சடகோபன் வேர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள் ஓடி வந்தான்.

# பதினான்கு

சடகோபன் வேகமாக வந்ததைப் பார்த்து இருவரும் பயந்து விட்டனர். சடகோபன் வியர்வையால் நனைந்திருந்தான்.

"என்ன நடந்தது?"

ஒரே நேரத்தில் இருவரும் கேட்டனர். சடகோபனது கண்கள் கலங்கியிருந்தன. "ஆமிக்காரன் கலைக்கிறான்" என்று சிறிது நேரம் பொறுத்து,

"கன பெடியளை சந்தியிலை வைச்சுப் பிடிச்சுக்கொண்டு போறான்கள்."

"இரண்டு பொலிஸ்காரரை இயக்கப்பொடியள் முடிச்சுப் போட்டான்கள். நான் வளவுக்குள்ளாலை ஓடிவாறன். என்ன நடக்கப்போகுதோ தெரியாது" விக்கி விக்கிச் சொன்னான் சடகோபன். இதற்குள் வெளியே போயிருந்த மகாலிங்கத்தாரும் வந்தார். மகாலிங்கத்தாரும் பதட்ட நிலையில் இருந்தார். மற்ற மூவரும் பதட்டமடைந்த நிலையில் தினகரன் பதட்டமடையவில்லை. ஆயுதப்போர் என்று பிரகடனப்படுத்திய பின் இவைகளை எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

"சடகோபன் தரவளிப் பெடியளைத்தான் பிடிக்கிறான்கள்" மகாலிங்கத்தாரின் முகம் இறுகிக் கறுத்திருந்தது.

"தம்பி தினகரன் நான் முதல் கேட்ட விடயத்தை மறக்காமல் இந்தக் கிழமையே செய்யும். இல்லையெண்டால் சடகோபனை ஆருமே பார்க்க முடியாது, தம்பி." என்று குரல் தழுதழுத்தபடி சொன்னார். மனதுக்கு என்னவோ போலிருந்தது. நாளைக்கே அவனைக் கொழும்பு கூட்டிப் போவதாக தினகரன் உறுதியளித்தான். **விடுதலைப் போராட்டத்தை நூறுவீதம் ஆதரித்துத் தட்டிக் கொடுக்கும் இவர்கள், தங்கள் பிள்ளைகளைத் தப்ப வைப்பதற்காகப் பிரயத்தனப்படுவதை மாத்திரம் தினகரனால் ஜீரணிக்க முடியவில்லை.** சுதந்திரனுக்குத் தந்தியடிக்க மகாலிங்கத்தார் வெளியே போனார். முன்பெல்லாம் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் கிணத்துக்கை ஒழி என்று ஆரவாரப்படுகிற அய்யா, இப்போ சர்வசாதாரணமாக வெளியில் போவது அவளுக்கு வியப்பைக் கொடுத்தது. இதைப்பற்றித் தினகரனுக்குக் கூறத் திரும்பியவள் தினகரனைக் காணாது

உள்ளே திரும்பிப் பார்த்தாள். தினகரன் சாப்பாட்டு மேசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவள் மனதுக்குள் சிரித்துக் கொண்டு, அவனருகே சென்று பரிமாறினாள்.

"ஏதோ கனவு காண்பதாய்ச் சொன்னியள். பிறகு விட்டிட்டியள்"

"இந்தச் சமுதாயத்திற்கு என்னை அர்ப்பணிக்கவேணும். என்னுடைய உடலின் ஒவ்வொரு அணுவும் இந்தச் சமூகத்தின் விடுதலைக்காகத் துடிக்கவேணும். இயல்பாக எனக்கு வந்த எழுத்துத் திறமை, இந்தச் சமூகத்தின் விடுதலைக்காகப் பயன்படவேணும்" இப்படி அவன் கூறும் போது அவன் முகத்தில் தோன்றிய ஒளி எவ்வளவு பிரகாசமானதாக இருந்தது!

"எந்தச் சமூகத்தைப்பற்றிக் கதைக்கிறியள். ஒருக்கால் போராட்டமே பிழை என்கிறியள். பிறகு இந்தச் சமூகத்தின் விடுதலைக்காக வாழ்வையே அர்ப்பணிக்கவேண்டும் என்கிறியள் எனக்கு விளங்கவேயில்லை." என்றாள் லாவண்யா.

"நீ என்னைப் பிழையாய் விளங்கிவிட்டாய். தமிழ் மக்கள் இந்த அடக்கு முறையிலிருந்து வெளியிலை வரவேண்டு மென்பதிலை எனக்கு எந்த மறுப்புமில்லை. ஆனால் அதற்கு இண்டைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிற பாதையிலைதான் உடன்பாடில்லை."என்றான் தினகரன். மெதுவாகக் கதையை மாற்றி,

"லாவண்யா என்னுடைய இந்தப் பத்திரிகை முற்று முழுதாக மற்றப் பத்திரிகைகளிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேணும்"

என்றான் தினகரன்.
"அப்படியென்றால்... சாதாரண ஏழை பாமர மக்களின் விடுதலைக்காகப் பத்திரிகை குரல் எழுப்பவேணும். இன்றைய நிலையில் உது சாத்தியப்படுமா?"
"சாத்தியப்பட வைக்கிறது தான் என் இலட்சியம்"
"இன்னும் கொஞ்சம் சோறு போடவா?"
"வேண்டாம் காணும்" என்று கூறிக் கொண்டே கை கழுவ எழும்பிப் போனான். அவன் வரும்வரை காத்திருந்த லாவண்யா,
"உங்கடை லட்சியத்துக்கு என்ரை உதவி எப்ப தேவைப்பட்டாலும் கேளுங்கோ" என்றாள்.
"நிச்சயமாய் உன்ரை உதவியில்லாமல் என்ன நடக்கும்?" அவன் இப்படிக் கூறியது அவளுக்குப் பெருமையைக் கொடுத்தது.

தினகரன் அறைக்குப்போய் கடிதம் எழுத ஆரம்பித்தான். பத்துக்கடிதம் எழுதியிருப்பான். யாரோ கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தான். மகாலிங்கம் மாஸ்டர் வெளியில் நின்றிருந்தார். "தம்பி... இண்டைக்கு வெளியிலே போகாதையும். நிலமை சரியில்லை. எங்கடை இயக்கப்பெடியள் எங்கேயோ கண்ணிவெடி வைச்சு 5 ஆமிக்காரன்கள் சரியாம்"
தினகரனுக்குத் திகைப்பாக இருந்தது. ஆயதப் போர் திசைமாறிப் போவது போலிருந்தது. பின் விளைவு எவ்வளவு

பாதகமாக இருக்கப் போகிறது. "கொஞ்சம் கூட அறிவில்லாத பொடியன்கள்" மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அதே வேகத்தோட அறைக்குள் நுழைந்தவன் மணியோசைக்கான முதற் தலையங்கத்தை எழுதினான். ***இன விடுதலையா? இன அழிப்பா?*** இது தான் அந்தத் தலையங்கம். அதை உடனே லாவண்யாவைக் கூப்பிட்டுக் காட்ட விரும்பினான். அறைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். லாவண்யா முற்றத்தில் காய்ந்த மிளகாய்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். லாவண்யா என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவனுடைய அழைப்பில் தன் வலுவிழந்த, லாவண்யா மெல்ல எழுந்து வந்தாள். தலையங்கத்தை அவளிடம் காட்டினான். அவளுக்கு அது பிடிக்கவே இல்லை.

"இது என்ன குழந்தைத்தனமான தலைப்பு?" என்று நேரே கேட்டு விட்டாள். தினகரனுக்குச் சப்பென்று போய்விட்டது. ஆயினும் தன்னைச் சமாளித்துக்கொண்டு

"ஆமிக்காரனைக் கொல்லுறது பிழை. இதாலை எதையும் சாதிக்கேலாது" என்றான்.

"சும்மா விசர்க் கதை கதையாதையுங்கோ. உங்கடை கொம்னியூசத்திலை அரசு என்றால் என்ன? அரசியல்வாதியளா அரசு? அரசு என்ற இயந்திரத்தைக் கட்டிக்காக்கிறது ஆர்? அரசியல்வாதியளோ அல்லது படையளோ?"

தத்துவரீதியாகத் தாக்கப்பட்ட தினகரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இவ்வளவு நாளும் குட்டக் குட்ட குனிந்த அரசியல்வாதிதான் எல்லாம் என்றிருந்த

பொடியன்கள் இப்பத்தான் சரியான எதிரியைக் கண்டு பிடிச்சு வெளிக்கிட்டிருக்கிறான்கள்" தொடர்ந்து லாவண்யா கூறக் கூற இமைவெட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் தினகரன்.

"தமிழரின்ரை சுய நிர்ணய உரிமைக்காகப் போராடலாம். ஆனால் நிலத்துக்காகப் போராடிறது தவறு" என்றான் தினகரன்.

"எனக்கு விளங்கேல்லை. சுயநிர்ணய உரிமையையும் நிலத்துக்கான போராட்டத்தையும் ஏன் வேறுபடுத்திறியள். சுயநிர்ணய உரிமை என்பதே நிலத்திலிருந்து தானே ஆரம்பிக்கிறது. ஒரு இனத்துக்கான பாரம்பரிய பிரதேசம், கலை, கலாச்சாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாத்திரம் தானே சுயநிர்ணய உரிமையைப் பற்றியே கதைக்கலாம். ஏன் எழுந்தமானமாகக் கதைக்கிறியள்" பாய்ந்து விழுந்தாள் லாவண்யா. "நீங்கள் இந்த விசயத்தைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்கவேணும். இந்தச் சமுதாய அமைப்பைக் கவனிச்சியளென்டால் தெளிவாய் விளங்கும். எங்கடை சமூக அமைப்பு, ஐரோப்பியர் வரமுந்தி, வந்தபின்பு, போனபின்பு ஆகிய மூன்று கட்டங்களைக் கண்டிருக்குது. ஐரோப்பியர் வரமுந்தி நிலப் பிரபுக்களின் ஆட்சியும் அந்தநேரம் விடுதலைப் போராட்டங்கள் வர்க்கங்களுக் இடையிலும் விவசாயிகளுக்கிடையிலும் விவசாயிகள் மட்டத்திலிருந்து உருவாகின. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் முற்று முழுதாக ஒரு தொழிற்புரட்சி உருவாகி நிலப் பிரபுக்களைவிட வலிமை வாய்ந்த முதலாளிவர்க்கம்

உருவானது. விவசாயிகளின் மட்டத்திலிருந்து போராட்ட வடிவம் சற்று நகர்ந்து தொழிற்சாலைப் பாட்டாளிகள் மட்டத்தில் உருவாக ஆரம்பித்தது. ஐரோப்பியர்கள் போன பின்பு நாட்டில் வேரூன்றிய தொழிற்சாலைப் பொருளாதாரமும் முதலாளி வர்க்கமும் உள்ளூர்வாசிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதோடு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்க தலைமைப் பீடங்களை அதிகார பீடங்களாக்கித் தங்கள் வசப்படுத்தினார்கள். தங்களைக் காப்பாற்ற எளிதில் எரியக் கூடிய மொழிரீதியான உணர்வுகளை மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டனர். இந்த உணர்வு அலை வளர நாளிலும் பொழுதிலும் நீர் ஊற்றினர். இந்த நிலை அகற்றும் போராட்டம் இப்ப ஆரம்பமாகி இருக்குது" என்று பெரியதொரு விளக்கம் கூறி முடித்தாள் லாவண்யா.

தினகரன் எதிர்பார்க்கவேயில்லை. ஒரு மேடைச்சொற்பொழிவே ஆற்றிவிட்டாள். இவ்வளவு உலக அறிவு லாவண்யாவுக்கு உண்டா? அவனால் நம்ப முடியவில்லை! அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் போய்விட்டாள். இனி லாவண்யா விடயத்தில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று மனதுக்குள் ஒரு எச்சரிக்கை உணர்வை வளர்த்துக் கொண்டான்.

# பதினைந்து

டாக்சியில் இறங்கி அறைக்குள் வந்து கட்டிலில் பொத்தென்று விழுந்தான் சுதந்திரன். கதவைக் கூடச் சாத்தவில்லை. உறங்கிப் போனான். இதற்குள் சுதந்திரன் கைதான விடயம் அவன் நண்பனுக்குத் தெரியவர அவன் மூலமாக அது சுமணாவதியின் காதை அடைந்தது. சுமணா கலங்கி விட்டாள். உடனே போய்ச் சுதந்திரனைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள். எதிர்பாராதவிதமாக அவளின் தகப்பன் திலகரத்னா அவளைப் போகக்கூடாது என்றார். அவள் எங்கே போகப் போகிறாள் என்பது இவருக்கு

எப்படித் தெரியும்? அப்படியானால் சுதந்திரன் கைதான விடயம் இவருக்கு எப்படித் தெரியும்? அப்படியானால் சுதந்திரன் கைதான விடயம் இவருக்கு ஏற்கனவே தெரியுமா? சுமணா மனதுக்குள் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தாள். ஆயினும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்.
“அவரைப் பொலிஸ் பிடிச்சதாம். நான் போய்ப் பார்க்க வேணும்” “எனக்குத் தெரியும்.. நான் தான் அவனைப் பிடிச்சுக் குடுத்தனான்” என்று சிரித்துக் கொண்டே கூறினார் திலகரத்னா.

சுமணாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கையில் ஒரு கத்தியிருந்தால் தகப்பனை கத்தியால் குத்திக் கொன்றிருப்பாள். அவளுக்கு எங்கிருந்து தான் தைரியம் வந்ததோ தெரியாது. தகப்பனையும் மதியாது விடுவிடென்று வெளியில் நடந்தாள்.
“இப்ப போனால் இனி வீட்டுக்குள்ளை இனி வரக்கூடாது” என்று ஆத்திரத்தில் கத்தினார் திலகரத்னா.
“வரமாட்டன்” என்று ஆக்ரோசமாக அவளும் கத்தி விட்டுப் போய்விட்டாள். பஸ் பிடிச்சு சுதந்திரன் அறையை அடைவதற்குள் அவள் இதயமே நின்று விடும் போலிருந்தது. சுதந்திரனின் அறையை அடைந்ததும் அதிர்ந்து போய்விட்டாள். கதவு ஒவென்று திறந்திருந்தது. எட்டிப் பார்த்தாள். சுதந்திரன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். அவனைக் குழப்பாது மெதுவாகச் சென்று ஸ்டவ்வைப் பற்றவைத்து தேநீர் தயாரித்தாள். அவன் மெதுவாக

அசைவது புரிந்தது. அவனருகில் சென்று தொட்டுப் பார்த்தாள். உடம்பு அனலாகக் கொதித்து கொண்டிருந்தது. அவனது தலையை மெதுவாகத் தூக்கி மடியில் வைத்து ஆதரவாகத் தடவினாள். ஸ்பரிச உணர்வினால் கண் விழித்த அவன் தான் சுமணாவின் மடியில் படுத்திருப்பதையும் அவள் ஆதரவாகத் தன்னைத் தடவுவதையும் பார்த்துக் கண் கலங்கினான். சுமணா என்று அனுங்கினான். வெளியில் காயங்கள் தெரியாவிட்டாலும் உட்காயங்கள் பலமாக இருந்தன. கன்னம் அதைத்துப் போய் இருந்தது. சொண்டில் ஒரு வெடிப்பிருந்தது. உடுப்புக்களெல்லாம் கசங்கியிருந்தன. மெதுவாக அவனைப் படுத்திவிட்டுத் தேநீர் போட்டாள். தேநீரைத் தயாரித்து நன்கு ஆறச் செய்து அவனை மெதுவாக நிமிர்த்திப் பருக்கி விட்டாள். இவ்வளவும் அவள் செய்து கொண்டிருக்கும் போது மனம் இன்னொரு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இன்று திரும்ப வீட்டுக்குப் போவதா? விடுவதா? சுதந்திரனை இந்நிலையில் விட்டுப் போகவும் முடியாது, போனால் வீட்டில் சுமுகமான வரவேற்பும் கிடைக்கப் போவதில்லை. வருவது வரட்டும். இங்கேயே தங்கிவிடுவோம் என்று அவள் முடிவெடுக்கும் போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. நேரத்தைப் பார்த்தாள். 9 மணி. இந்த நேரத்தில் யாராக இருக்கும்? கதவைத் திறந்த போது கீழ் அறையில் இருக்கும் சிதம்பரப்பிள்ளை நின்றிருந்தார். சுமணா கதவைத் திறந்தது அவருக்கு வியப்பாக இருந்தது. சமாளித்துக் கொண்டு, "தம்பிக்கு ஒரு தந்தி வந்திருக்குது" என்று கொடுத்து விட்டுப்

போய்விட்டார். அவசர அவசரமாகத் தந்தியைப் பிரித்தாள். உள்ளே சடகோபன் மெயிலில் வருவதாக சுதந்திரனின் தந்தை அறிவித்திருந்தார். கட்டிலிலிருந்தபடியே "என்ன சுமணா தந்தி?" என்றான். தந்தியை அவன் கையில் கொடுத்துவிட்டு, அறையில் அங்குமிங்குமாக இருந்த உடுப்புக்களையெல்லாம் அலுமாரியில் மடித்து வைத்தாள். இப்போது அறை களை கட்டிவிட்டது. ஏதோ புதுக்குடித்தனம் வந்த பெண் போல் எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தாள். அடுத்து சமைக்க வேண்டும். வேலைகளைச் செய்துகொண்டே தம்பியை நான் போய்க் கூட்டிக் கொண்டு வாறன் என்றாள். அவன் எதுவும் சொல்லவில்லை. என்ன முறையில் சமைப்பது? ஏதோ உனக்குத்தெரிந்ததைச் செய் என்று மனம் கூறியது. அரிசி இருந்தது. கத்தரிக்காய் இருந்தது, மீன் இருந்தது. பிறகென்ன களத்தில் இறங்கி விட்டாள். அவள் கை வண்ணம் களை கட்டியது. சிறிது நேரத்தில் சமையல் முடிந்தது. சுதந்திரனுக்கு அருகில் வந்தாள். அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனை உசுப்பினாள். அவன் மெதுவாகக் கண் விழித்தான். சுமணா அருகில் நிற்பதைப்பார்த்து

"இன்னும் போகவில்லையா?" என்று கேட்டான்.

"எங்கை போறது.?" அவள் திருப்பிக் கேட்டாள்.

"வீட்டைதான்"

"இனிமேல் போகப் போறதில்லை" என்று திடமாகக் கூறினாள். அவளது உறுதி சுதந்திரனுக்குப் பயத்தைக் கொடுத்தது. மெதுவாகக் கையை ஊன்றி எழும்பியிருந்தான். அறையைப்

பார்த்த அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"கொஞ்சம் எழும்புங்கோ முகத்தைக் கழுவிப் போட்டுச் சாப்பிடுவம்" என்றாள். அவனைத் தாங்கிக் குளியல் அறைக்குக் கொண்டு சென்று முகத்தைக் கழுவி மீண்டும் கட்டிலில் கொண்டு வந்து இருத்தினாள். சாப்பாட்டைப் போட்டு வந்து அவன் முன் வைத்து விட்டு அவனைப் பார்த்தாள். அவனின் புன்னகைக்கான காரணம் அவளுக்கு விளங்கியபோதும் விளங்காதது மாதிரி சாப்பாட்டை அவனுக்கு ஊட்டத் தொடங்கினாள். அவன் கண்கள் கண்ணீர் உகுத்தன.

"ஏய் என்ன இது?" என்று கூறியவாறு அவன் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"தம்பி நாளைக்கு வாறான், என்ன செய்யிறது. கீழ் அறை ஐயாவைக் கேட்பமே" என்றாள் சுமணா. இந்த யோசனை சுதந்திரனுக்கும் சரியாகப்பட்டது. இருவரும் சாப்பிட்டு விட்டுப் படுப்பதற்குத் தயாரானார்கள். சுதந்திரனைப் படுக்க வைத்துப் போர்வையால் போர்த்தினாள். தான் ஒரு பெட்சீட்டை நிலத்தில் விரித்துவிட்டு அதில் படுத்தாள். படுத்ததும் நித்திரை அவளை அணைத்துக் கொண்டது. மறு நாள் காலையில் முதலில் விழித்துக் கொண்ட அவள், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சுதந்திரனையும் எழுப்பித் தேநீர் வைத்து இருவரும் பருகினர்கள். அவள் எடுத்த முடிவை எதிர்க்கவும் முடியாமல் ஆதரிக்கவும் முடியாமல் மனதுக்குள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான் சுதந்திரன்.

"நான் போய்ச் சடகோபனைக் கூட்டி வாறன்" என்றாள். அவள் போகும்பொழுது,
"கீழ் அறை அண்ணையை ஒருக்கா வரச் சொல்லும்" தலையாட்டி விட்டுப் புறப்பட்ட அவள், போகும் வழியில் அவன் சொன்னதையும் செய்து விட்டு மணிக்கூட்டைப் பார்த்தபடி புகையிரத நிலையத்தை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அவள் புகையிரத நிலையத்தை அடையவும் புகையிரதம் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. சடகோபனை நேரில் பார்த்ததில்லை. படத்தில் பார்த்திருக்கிறாள். அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பெட்டியாகத் தேடிக் கொண்டு போகக் கடைசிப் பெட்டியை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தான் அவன். அவனை அடையாளம் கண்டு கொண்ட சுமணா அவனை நோக்கிச் சென்றாள். சடகோபனோடு தினகரனும் வந்திருந்ததால் சற்றுத் தயங்கிய சுமணா வந்த காரியத்தை முடிப்பதற்காகத் தயக்கத்தை விட்டுச் சடகோபனைப்
பார்த்து "நீங்கள் சுதந்திரனின் தம்பி தானே" என்று கேட்டாள்.
"ஓம்" என்று கூறிய அவன்
"நீங்கள்..." என்று இழுத்தான். கண நேரத்துக்குள் யாரென்பதைத் தினகரன் ஊகித்துக் கண்டு பிடித்து விட்டான். மூவருமாக அறையை வந்தடைய பதினைந்து நிமிடங்கள் எடுத்தது. இருவரையும் அறையில் விட்டு விட்டு அவசர அவசரமாக சுதந்திரனிடம் சொல்லி விட்டு கந்தோருக்குப் புறப்பட்டாள்.
சுதந்திரன் தனக்கு நடந்த விடயங்களையும் சுமணா எடுத்த

தீர்மானத் தையும் அவர்களிருவருக்கும் கூறினான். இவற்றைக் கேட்ட சடகோபனுக்கும் தினகரனுக்கும் வியப்பாகவும் திகைப்பாகவும் இருந்தது.

கந்தோர் முழுவதும் சுதந்திரனைப் பற்றித்தான் கதை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கதைத்தார்கள். ஒரு சிலர் சுதந்திரனை அப்பாவியாகவும் ஒரு சிலர் பயங்கரவாதிகளின் நண்பனாகவும் சோடித்துக் கதைத்தனர். சுமணாவைக் கண்டதும் கதையை விடுவதும் பின்னர் தொடர்வதுமாக இருந்தார்கள். சுமணா எதுவும் கதைக்கவில்லை. தன்னுடைய வேலைகளை முடித்து விட்டு பத்தாவது மேசையிலிருக்கும் சுகந்தசில்வாவை அணுகினாள். சுகந்தசில்வா எழுதுவினைஞர் சங்கத் தலைவர். சுதந்திரனும் அந்தச் சங்கத்தின் அங்கத்துவன். அவள் தனக்கு முன்னால் வந்து நின்றவுடன், என்ன கேட்கப் போகிறாள் என்பது விளங்கினாலும் விளங்காதது போல் "என்னம்மா எப்பிடிச் சுகம்?" என்றார்.

"சுதந்திரனுக்கு நடந்தது உங்களுக்குத் தெரியும். இண்டைக்கு கூட்டம் கூடி. இதுக்கொரு முடிவு எடுக்கவேணும்"

"இதிலை பெரிய சங்கடம் இருக்குது சுமணா"

"என்ன சார் சங்கடம். சுதந்திரன் எங்கடை சக உத்தியோகத்தர். அதுவும் அரச ஊழியர். சங்க உறுப்பி னருக்கு அநியாயம் நடக்கேக்கை அதைத் தட்டிக் கேட்கச் சங்கத்தாலை முடியாதென்டால் பிறகென்னத்துக்குச் சங்கம்.

அவளின் இந்த ஆக்ரோசமான வாதம் அவரைத் திக்கு முக்காட வைத்துவிட்டது”

“சரியம்மா... உனக்குக் கூட்டம் தானே வேணும். அதிலை என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதை நீ ஏற்க வேண்டும் என்ன?”

சுமணாவும் தலையாட்டி விட்டுப் போய் இருக்கையில் அமர்ந்தாள். சுமணா போன பின் சுகந்தசில்வா சங்கக் கூட்டம் கந்தோர் முடிந்தபின் நடக்க இருப்பதாக அறிவிக்கும் அலுவலில் முனைந்தார். நாலு மணிக்குக் கந்தோர் முடிகிறது. நாலரை மணிக்குக் கூட்டம். கந்தோரின் கூட்ட மண்டபத்தில் எல்லோரும் இருந்தனர். சுகந்தசில்வா எழுந்து பிரச்சினையைக் கூறினார். இப்படித்தான் கூறினார்.

“எங்களுடைய சக உத்தியோகத்தரும் சங்க அங்கத்த வருமான சுதந்திரனுக்கு நடந்த சம்பவம் உங்களுக்கெல்லாம் தெரியும். இதை ஆட்சேபித்து அரசுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்ற தீர்மானத்தை சுமணா கொண்டு வந்துள்ளார். இது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம்”

சுகந்தசில்வா அமர்ந்து விட்டார். மூலையிலிருந்து ஒரு குரல் வந்தது. “இது அரசியல் பிரச்சிரனை. இங்கை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை”

“இங்கை நடக்கிறது இலக்கியக் கூட்டம் இல்லை, தொழிற் சங்கக் கூட்டம். தொழிற்சங்கங்களை அரசியலிலிருந்து பிரிப்பது முட்டாள் தனம்” என்று கத்தினாள் சுமணா.

"சுதந்திரன் அப்பாவி அவரைப் பொலிஸ் பிடித்தது அநியாயம். பயங்கரவாதச் செயல் யாழ்ப்பாணத்திலை நடக்கலாம். எவரையும் விசாரிக்க பொலிசுக்கு அதிகாரம் இருக்கு ஆனால் அடிக்க அவங்களுக்கு அதிகாரம் இல்லை. இது சம்பந்தமாக எங்கடை சங்கம் நடவடிக்கை எடுக்கவேணும். இல்லையெண்டால் நாளைக்கு எங்களுக்கும் இது நடக்கலாம்"

ஒரு நல்ல மனிதன் குரல் எழுப்பினான். சுமணா நன்றியோடு அவனைப் பார்த்தாள்.

"கொழும்பிலை இருந்தாலும் யாழ்பாணத்திலை இருந்தாலும் சுதந்திரன் தமிழன்தான். தமிழர் இப்ப பயங்கரவாத நடவடிக்கையிலை ஈடுபட்டிருக்கினம். சுதந்திரன் உதவி செய்திருக்கலாம் அல்லது செய்யாமலிருக்கலாம். நாங்கள் இதிலை தலையிடாமல் இருக்கிறது தான் நல்லது. இந்தச் சங்கம் நாட்டின் தொழிற் பிரச்சினையை கவனிக்கத்தானேயொழிய நாட்டின் ஐக்கியத்தைக் குலைக்கும் பயங்கரவாத அரசியலிலை தலையிட அல்ல"

"முழுத்தமிழர்களையும் பயங்கரவாதிகளாக நினைக்கிறது முட்டாள் தனம்"

இப்படி மாறி மாறிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சுமணா விரக்தியில் பேசாமலிருந்தாள். சுகந்தசில்வா எழும்பினார்.

"எல்லாரும் இப்படிக் கதைப்பதால் பிரச்சினை தீராது. இந்தப் பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விடலாமென்று பார்க்கிறன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று

நினைக்கிறவை கையை உயர்த்துங்கோ" என்றார். மூன்றே மூன்று கைகள் எழும்பின. அதிலே வியப்பு என்னவென்றால் அங்கிருந்த தமிழ் உறுப்பினர்கள் கூடச் சுதந்திரனுக்கு ஆதரவாக கை உயர்த்தவில்லை. துவேசம் பிடிச்ச சனியன்கள் என்று பலமாகத் திட்டிவிட்டுக் கூட்டத்தை விட்டு வேகமாக வெளியேறினாள்.

முதுகெலும்பில்லாத தமிழர் மத்தியிலும், துவேசம் பிடிச்ச சிங்களவர் மத்தியிலும், அவள் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? பஸ் நிலையத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். "சுமணா" என்றொரு குரல் கேட்டுத் திரும்பினாள். தகப்பன் திலகரத்னா நின்றிருந்தார். அவளுக்குப் பதட்டமாக இருந்தது. அருகில் வந்து "ஏன் வீட்டை வரேல்லை?" என்று கேட்டார்.

"வர விருப்பமில்லை"

"அப்ப இனி வரமாட்டியோ"

"அப்படித்தான்"

"அப்பிடியெண்டால் அந்தப் பயங்கரவாதியோடைதான் இருக்கிறியோ?"

"பயங்கரவாதியல்ல பயங்கரவாதியாக்கப்பட்ட ஒரு அப்பாவி"

"தேவையில்லாமல் பாழுங் கிணற்றிலை விழுகிறாய். என்னைப் பகைச்சுக்கொண்டு உன்னாலை வாழமுடியுமா?"

"முயற்சிக்கிறேன்" என்று கூறிக் கொண்டு விறு விறுவென்று நடக்க ஆரம்பித்தாள். அவள் போவதையே

பார்த்துக்கொண்டு நின்ற திலகரத்னாவிற்கு உலகமே தன்னை எதிர்ப்பது போன்ற மாயை ஏற்பட்டது. வேகமாகத் திரும்பி நடந்தார். அறைக்கு வந்த சுமணா சோர்வோடு தொப்பென்று கதிரையில் விழுந்தாள். சத்தம் கேட்டு விழித்த சுதந்திரன் சுமணாவைப் பார்த்தான். சுமணாவின் சோர்வு நிலை அவனுக்குத் திகைப்பைக் கொடுத்தது. என்ன? என்று கேட்பதைப் போல் அவளைப் பார்த்தான்.

"வாறன் முகம் கழுவிப்போட்டு எல்லாம் ஆறுதலாச் சொல்லிறன்"

"உங்களுக்கிப்ப எப்பிடி" என்றவாறு குளியலறைக்குள் போனாள். சுதந்திரன் அவளை வியப்போடு பார்த்தான்.

தினகரனும் சடகோபனும் அவனது பதட்டத்தைப் பார்த்துச் சங்கடப்பட்டனர்.

எல்லோருக்கும் தேநீர் போட்டுவந்து கொடுத்தாள். தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது நடந்த விடயத்தைக் கூறினாள். தமிழ் அங்கத்தவர்களின் விடயத்தைக் கூறியபோது தினகரனுக்கு வெட்கமாக இருந்தது. பின்பு சடகோபனைப்பற்றிக் கதைத்தார்கள். தினகரன்தான் அவசரமாகப் போகவேண்டுமென்று கூறி அன்றே அங்கிருந்து புறப்படுவதாகக் கூறினான். சடகோபனைதான் தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக ஜெர்மனிக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினாள். தினகரன் அவளை நன்றியோடு பார்த்தான்.

# பதினாறு

சடகோபனைக் கொழும்பில் விட்டு விட்டு உடனேயே திரும்பிவிட்டான் தினகரன். வீட்டுக்கு வந்த அவன் பத்திரிகை அலுவலாக யாழ்ப்பாணம் போக வெளிக்கிட்டுக் கொண்டிருக்கும் போது மகாலிங்கம் மாஸ்டர் வந்து "யாழ்ப்பாண நிலமை சரியில்லைத் தம்பி" என்று மறித்தார். "இல்லை மாஸ்டர் நான் எப்பிடியும் போகவேணும். நான் எப்பிடியும் சமாளித்து வந்துவிடுவன்" இப்படி அவன் கூறியபின் அவர் எதுவும் கதைக்கவில்லை. தினகரனும் புறப்பட்டு விட்டான். அன்று யாழ்ப்பாண நகரமே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரே கண்ணி வெடியில்

பதின்மூன்று இராணுவத்தினர் விழுங்கப்பட்டிருந்தனர். ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு முதன் முதலில் பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலி கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி இது.

நிகழ்ச்சி நடந்து அரைமணி நேரத்தில் எல்லா இராணுவ நிலையத்திலிருந்தும் புற்றீசல்கள் போல் இராணுவம் வெறி கொண்டு புறப்பட்டிருந்தது. வெறி நாய்கள் போல் அலைந்து கொண்டிருந்தனர். கண்ணில் காண்பவர்களையெல்லாம் சுட்டுத்தள்ளினர். யாருக்கும் எதுவும் புரியவில்லை. வீடுகளுக்குள் நுழைந்து இருப்பவர்களையெல்லாம் இழுத்துப் போட்டுச் சுட்டனர்.

சிறுவர், பெரியவர், ஆண், பெண் என்ற பேதமில்லை. அங்கு. யார் உயிருடன் இருந்தார்களோ அவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. பல வீடுகள் போட்டிபோட்டு எரிந்து கொண்டிருந்தன. பல உயிர்கள் ஏன் ஏது என்று கேட்க முன் பரலோகம் சென்று விட்டனர்.

மகாலிங்கத்தாரின் எச்சரிக்கையையும் மீறி ஏதோ அலுவலாக யாழ்ப்பாணம் வந்த தினகரன் இந்த நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டான். தினகரன் தலை தெறிக்க ஓடினான். அன்றைக்கு யாராவது ஓட்டப் போட்டி வைத்திருந்தால் அவன் தான் முதலாவது. ஓடும் போது முன்னம் வருவது மதிலானாலும் வேலியானாலும் பாய்ந்து பாய்ந்து ஓடினான். சிலவேளை பறவை போல பறந்தான். பறக்கும் போது

சிலசமயம் விழுந்தான். விழுந்தால் நோக வேண்டும் ஆனால் இன்று அவனுக்கு நோகவில்லை. நோகுதென்று படுத்தால் உயிர் போய்விடுமே.! எழும்பி எழும்பி ஓடினான். முன்னால் ஒரு வீடு தெரிந்தது. வீட்டு வாசலை நோக்கி ஓடினான் கதவு பூட்டியிருந்தது. தட்டு தட்டென்று தட்டினான். யாரும் திறக்கவில்லை. மரண பயம் அவனைத் துரத்தியது. மீண்டும் பாய்ச்சல் யாருடைய வீட்டுக் கதவும் அவனுக்காகத் திறக்கவில்லை. யார்தான் கதவைத் திறப்பார்கள். எல்லாரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருக்கும்போது இவனுக்காகக் கதவைத் திறந்து இவன் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலை யாருக்குத்தான் வரும்? இனி ஓட முடியாத நிலை! தினகரனுக்கு மூச்சிரைத்தது. இதயம் படபட வென்று அடித்தது. ஆபத்பாந்தன் போல் முன்னால் ஒரு புளிய மரம். மளமளவென்று ஏறிவிட்டான். என்ன துணிவு! என்ன லாவகம்! என்ன வேகம்! மேலே ஏறி ஒரு கிளையில் அமர்ந்த பின்பு தான் இதயம் மெதுவாக அடிக்க ஆரம்பித்தது. தினகரன் ஓடத் தொடங்கிய போது காலை பத்து மணி. இப்போது நேரம் ஐந்து மணி. எவ்வளவு நேரம் ஓடியிருக்கிறான். இருள் பரவிக்கொண்டிருந்தது. பசியில் சிறு குடலை பெருங்குடல் தின்று கொண்டிருந்தது. புளிய மரத்தில் இருந்தவாறு வீதியைப் பார்த்தான். இராணுவ வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. மனிதத் தலைகளையே காணோம். நேரம் ஏழு மணியாகியதும் மரத்தை விட்டு இறங்கினான். சுற்று முற்றும் பார்த்து விட்டுப் புளியமரம் இருந்த காணிக்கு அடுத்த காணிக்குள்

சென்று அங்கிருக்கும் வீட்டைச் சற்று உற்றுப் பார்த்தான். வீட்டுள் விளக்கெரிந்து கொண்டிருந்தது. யன்னலூடாகப் பார்த்தான். ஆள் நடமாட்டம் தெரிந்தது. துணிந்து கதவைத் தட்டினான். அவன் கதவைத் தட்டியதும் வீட்டினுள் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்தது. என்ன எச்சரிக்கை! தினகரன் மீண்டும் தட்டினான். நான் ஆமியில்லை. என்று மெதுவாகத் தமிழில் அறுத்து உறுத்துக் கூறினான். சிறிது நேரம் எவ்வித சப்தமும் இல்லை. மீண்டும் அதே வசனத்தைக்கூற கதவுக்கு சற்றுத் தள்ளியுள்ள யன்னலூடாக ஒரு கிழம் எட்டிப் பார்த்தது.

தன்னுடைய நிலையை எட்டிப் பார்த்த முதியவருக்கு விளக்கினான். அந்த முதியவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லைச் சடுதியாகக் கதவைத் திறந்து அவனை உள்ளே எடுத்து விட்டார். அவன் உள்ளே வந்ததும் சிறிது நேரத்தில் ஒரு இளம் பெண் தேநீர் கொண்டு வந்து அவன் முன் வைத்தாள்.

அவளை எங்கோ சந்தித்ததாகப்பட்டது தினகரனுக்கு.

# பதினேழு

அவளைப் பார்த்த நேரம் தொடக்கம் குழம்பிக் கொண்டிருந்த தினகரனுக்கு அடையாளம் மெதுவாகப் புரிந்தது. அன்று புகையிரதத்தில் அவன் வரும்போது சந்தித்த அதே முகம். அவனது மனம் வர்ணித்த அதே முகம். சாந்தம் தவழ்ந்த முகம். பத்தொன்பது வயது இருக்கலாம். பருவவயது. தினகரன் சந்திக்கின்ற இரண்டாவது பெண் இவள். லாவண்யாவின் முகத்திலோடும் வேக ரேகைகள் இவள் முகத்திலில்லை. பதிலாக உறுதி நிறைந்த சாந்தரேகைகள் ஓடிக் கொண்டிருந்தன. அவளை ஒரு •தரம் நிமிர்ந்து பார்த்துவிட்டு,

"பேத்தியின் பெயர் என்ன?"

"சாந்தரூபி, சாந்தா" என்று கூப்பிடுவம். இந்தப் பெயரும் அவனுக்குப் பரிச்சயமான பெயர் போல் இருந்தது. ஓரமாக ஒதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருந்தாள் சாந்தா.

"சாந்தா இப்படி இருக்கலாமே!"

முற்றிலும் புதிய ஒருவன் இன்னும் அறிமுகமாகி ஒரு மணி நேரமும் ஆகவில்லை, அவளைச் சாந்தா என்று கூப்பிட்டு விட்டான். சாந்தாவுக்குச் சங்கடமாக இருந்தது. அமைதியாக அருகில் வந்து இருந்தாள். அப்போ இரண்டு மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டன. படீடென்று விளக்கை அணைத்தனர். வீட்டுக்கு முன் வீதியால் யாரோ ஓடுவது போன்ற சத்தம் கேட்டது.

"ஆரையோ கலைக்கிறாங்கள் போலக்கிடக்கு" கிழவன் மெதுவாக முணு முணுத்தார்.

"வெறி பிடிச்சுத் திரியிறான்கள்" சாந்தா கூறினாள்.

தினகரன் எதையுமே கவனிக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். யாருக்குமே நித்திரை வரவில்லை. சாப்பிட்டுக் கை கழுவி விட்டு அதே இடத்தில் வந்தமர்ந்தான் தினகரன்.

"தம்பி எந்த ஊர்?"

"நான் கருணையூர் கிராமத்தைச் சேர்ந்தவன். கொழும்பிலை ஒரு பத்திரிகைக் காரியாலயத்திலை வேலை செய்தனான்" என்று கூறிவிட்டு சாந்தாவைப்பார்த்து "நீங்கள் கவிதை எழுதிறனீங்களோ?" என்று கேட்டான்.

அவள் ஓமென்று மெதுவாகத் தலையசைத்தாள். உங்கடை

கவிதைகளை நான் பார்த்திருக்கிறன். சாந்தா மெதுவாகப் புன்னகைத்தாள். கிழவனார் தொடர்ந்து கதைக்கவில்லை. அவருக்குத் தூக்கம் வர ஆரம்பித்து விட்டது, இருந்த இடத்திலேயே கொட்டாவி விட்டபடி தூங்கிவிட்டார். சாந்தாவுக்குத் தூக்கம் வரவில்லை. நிலத்தைப் பார்த்தபடி எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பலமாக யோசிக்கிறியள்" தினகரன் மௌனத்தை குழப்பிக் கேட்டான். அவள் பதிலேதும் கூறவில்லை. ஒரு புன்சிரிப்பு மட்டும் உதிர்த்தாள்.

"பத்திரிகையிலை ஆசிரியராக இருக்கிறியளா?"

"இருந்தனான் இப்ப இல்லை"

"ஏன்?"

"ஒரு தன்மானப் பிரச்சனையிலை வேலையை உதறி எறிஞ்சிட்டன்"

"அப்ப இப்ப..."

"ஒரு பத்திரிகை தொடங்கலாமென்றிருக்கிறன்"

"பத்திரிகைக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறியள்?"

"மணியோசை"

"என்ரை வாழ்த்துக்கள். விலாசம் தந்தியளெண்டால் நான் ஏதும் அனுப்பலாம்" என்று கூறிவிட்டுப் பேப்பரும் பேனையும் எடுக்க உள்ளே போனாள். என்ன அமைதியான உரையாடல்.! ஆர்ப்பாட்டமில்லாத அதிகப் பிரசங்கித்தனமில்லாமல் அழகான அளவான உரையாடல்.! தனக்குள் அவளை மெச்சிக் கொண்டான். அவள் பேனையும் பேப்பரும்

கொண்டு வந்து கொடுக்க விலாசத்தை எழுதிக் கொடுத்தான். இவ்வளவோடு அவர்களின் உரையாடல் நின்று விட்டது. நேரமும் அதிகாலை ஐந்து மணியாகி விட்டது. தூங்கிக் கொண்டிருந்த கிழவரும் எழும்பி விட்டார். தினகரன் போவதற்குத் தயாரானான். சாந்தா தேநீர் போட்டுக் கொடுத்தாள். தேநீரைக் குடித்து விட்டு வெளியில் வந்தான். வானம் நிர்மலமாக இருந்தது. பஸ் ஸ்ராண்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

# பதினெட்டு

குளியலறையை விட்டு வெளியில் வந்த சுமணா அலுப்புத்தீரக் கதிரையில் இருந்தாள். சுதந்திரன் சுமணாவையே பார்த்துக் கொண்டிருந்தான். சுமணா கந்தோரில் நடந்தனவற்றையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னாள்.

"நான் எதிர்பார்த்தது தான்" என்றான் சுதந்திரன்.

"என்ன எதிர்பார்த்தது... எல்லாருமே இரக்கமற்றவர்கள்" அவள் கத்தினாள். அவளின் ஆவேசம் அவனுக்குப் புரிந்தது.

இயல்பாகவே உணர்ச்சி வசப்படும் சுமணாவுக்கு நடந்த நிகழ்ச்சி நிரம்பப் பதற்றத்தைக் கொடுத்திருந்தது. இதைப் புரிந்து கொண்ட சுதந்திரன் மேற்கொண்டெதுவும் கேட்கவில்லை. கதவு தட்டிக் கேட்டது, சுமணா கதவைத் திறக்கச் சடகோபன் நின்றிருந்தான்.

"வாரும்" என்று அவனை அழைத்து அமரச் சொன்னாள். சிறிது நேரம் மூவரும் எதுவும் கதைக்கவில்லை.

"சடகோபன் விஷயமாய்க் கதைச்சனான்" சுமணாதான் ஆரம்பித்தாள்.

"எந்த நாட்டுக்குப்போக" சுதந்திரன் கேட்டான்.

"இப்ப ஜேர்மனிக்குப் போறது தான் சுலபம். முதலிலை அங்கை போகட்டும். அதுக்குப் பிறகு பார்ப்பம்"

"என்ன சடகோபன் ஜேர்மனிக்குப் போறியே"

சடகோபன் எதுவும் கூறவில்லை. ஏனென்றால் கேள்வியையும் பதிலையும் அவர்களே கூறி விட்டார்கள்.

"சடகோபன் கொஞ்சம் இரும் சாப்பிடலாம்" என்று கூறிவிட்டுச் சமையலில் துரிதமாக இறங்கினாள்.

"சடகோபன் நாளைக்கே முயற்சி பண்ண வேண்டிவரும்? அநேகமாக நாளைக்குச் சரி வரலாம். ஒழுங்கு பண்ணின இன்னொரு பொடியன் யாழ்ப்பாணத்திலிருந்து வரவில்லையாம். அந்த இடத்திற்கு இவர்" என்ற சுமணா, தொடர்ந்து "லக்கேஜ் கனக்க வேண்டாமாம், ஒரு சூட்கேஸ் போதுமாம்" சடகோபன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அரை மணியில் சமையல் முடித்து

விட்டாள். சடகோபன் சாப்பிட்டு விட்டுக் கீழ் அறைக்குப் போய்விட்டான். சுமணாவும் ஒரு ஓரத்தில் படுத்து விட்டாள். நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. காலை எழும்பியவுடன் சுதந்திரனுக்குத் தேத்தண்ணி போட்டுக் கொடுத்து விட்டு அவசர அவசரமாக கீழிறங்கிச் சடகோபனை வெளிக்கிடச் சொல்லி விட்டு வெளியே போய்க் கந்தோருக்கு லீவு என்று தன் நண்பிக்கு ரெலிபோன் செய்து விட்டு வந்தபோது அவளுக்கு மூச்சிரைத்தது. சடகோபனும் சுமணாவும் அந்த ஏஜென்சிக்காரனை அடைந்தபோது நேரம் ஒன்பது மணி. எல்லாம் கதைத்துச் சடகோபனை அவனிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பி விட்டாள். திரும்பிக் கொண்டிருந்த போது தான் அந்த இடிச்செய்தி அவளின் காதில் வந்தடைந்தது.

சுதந்திரன் கூறிய செய்தி சுமணாவை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. சுதந்திரனுக்கு இந்த விடயத்தைக் கீழறையில் உள்ள இன்னுமொரு தமிழ் ஆள் தான் கூறியிருந்தார். யாழ்ப்பாணத்திலை நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலும் கலவரம் ஆரம்பமாகலாம் என்பதே. ஒரே ரத்தம் ஓடும் இந்த மனிதர்களுக்கிடையில் தான் எவ்வளவு குரோத மனப்பான்மை.

"சுமணா கட்டாயம் இனக் கலவரம் வருமா? எங்கடை அரசியல்வாதிகளுக்குத் தேவை. அதனாலை கட்டாயம் வரும். இதனாலை பலபேர் இறக்க வேண்டிவருமே. அதைப்பற்றி யாருக்குக் கவலை நீங்களும் நானும் தான் கவலைப்படுறம்"

“புத்தமதத்தைப் பின்பற்றும் சிங்கள மக்கள் ஏன் இப்படி நடக்கினம்”

“புத்தரைத்தான் கேக்கவேணும்” என்று இடக்காகப் பதில் கூறினாள் சுமணா.

“ஏன் சுமணா ஒரு மாதிரி இருக்கிறீர்?”

“எனக்கொண்டுமில்லை. சுதா நீங்கள் பேசாமல் படுங்கோ. நான் போய் சாமான் வாங்கி வாறன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். விடைதெரியாத வினாக்களையெல்லாம் மனதுக்குள் எழுப்பிய வாறு புரண்டு படுத்தான் சுதந்திரன். வெளியே போன சுமணாவுக்கு வெளிச் சூழ்நிலை சாதாரணமாக இருப்பதாகத் தெரியவில்லை. கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருந்தனர். தமிழர்கள் நிலத்தைப் பார்த்தபடி வேகமாக நடந்து கொண்டிருந்தனர். ஏதோ ஒன்றுக்காக ஆயத்தங்கள் நடைபெறுவது அவளுக்குப் புரிந்தது. அதுவும் அவளுக்குத் தெரிந்த அப்பாவின் கட்சிக்காரர்கள் முன்னின்று சில ஆரம்பங்கள் செய்வதை அவள் கவனிக்கத் தவறவில்லை. எதேச்சையாக நடக்கப்போகிற இனக்கலவரமாக அவள் இதனை நினைக்கவில்லை. பழிவாங்கும் நோக்குடன் அரசாங்கமே இதனைத் திட்டமிட்டுத் தொடங்குகின்றது என்பதை அவள் புரிந்து கொண்டாள். தன்னினத்தவர்களின் இந்தக் கபடத் தனத்தையும் கையாலாகத்தனத்தையும் எண்ணி மனதுக்குள் வருத்தப்பட்டுக் கொண்டாள். அவசர அவசரமாக எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு திரும்பினாள் சுமணா. அவளுடைய இருதயம் வேகமாக அடித்துக்

கொண்டிருந்தது. இனக் கலவரம் ஆரம்பித்தால் தன்னுடைய தகப்பனே ஆட்களை வைத்துச் சுதந்திரனை கொல்வார் என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே ஏதாவது முன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவள் மனம் அவசரப்பட்டது. முதல் வேலையாக இடம் மாறவேண்டும் எங்கே போவது? தகப்பனிடமிருந்து தப்புவது சுலபமான வேலையல்ல என்பதும் அவளுக்குப் புரியும். ஒரேவழி சிங்களப் பிரதேசத்தை விட்டே வெளியேற வேண்டும். சாமான்களைக் கொண்டு வந்து வைத்து விட்டுச் சுதந்திரனைப் பார்த்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சிறு குழந்தைபோல் தூங்கிக் கொண்டிருக்கும் அவனைச் சிறிது நேரம் ரசித்து விட்டு மெதுவாகத் தட்டினாள். திடுக்கிட்டுப் பதகழித்துக் கொண்டு எழும்பினான்.

"என்ன பயந்திட்டியள் போல..."

"சீச்சீ..." என்று தன்னைச் சமாளித்துக்கொண்டு நெளிந்தான் சுதா "வெளியிலை நிலமை சரியில்லை. கலவரம் வரும் போல கிடக்குது" என்று கூறிவிட்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சுதந்திரனுக்குத் திக்கென்றிருந்தது. 58ஆம் ஆண்டு 77ஆம் ஆண்டு கலவரத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். மனிதரை மனிதர் என்று பாராமலேயே வெட்டிய கொடூர சம்பவங்களை நண்பர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போ அப்படி ஒரு நிலமை வரப் போகிறது. அதற்குள் இவனும் அகப்பட்டிருக்கிறான். சுதந்திரனுக்குக் கை காலெல்லாம்

நடுங்கியது. "சுமணாவைக் கட்டினதாலை விட்டிடுவாங்கள்" அவன் இதயத்தின் ஏதோ ஒரு மூலையிலிருந்து ஒரு ஆறுதல் மொழி வந்தது.

"நாங்கள் இந்த அறையை விட்டுப் போகவேணும்"

"ஏன் நீர் இருக்கிறீர் தானே?"

என்ன பெட்டைத்தனம்.! அவளுக்குப் பின்னால் ஒளிந்து கொள்கின்ற அசட்டுத்தனம்.!

"நான் இருக்கிறது தான் பிரச்சினை. என்ரை அப்பா பொல்லாதவர். இந்தக் கலவரத்தைச் சாட்டாக வைத்து, உங்களை முடிச்சுப் போடுவர்"

இப்படிச் சுமணா சொன்னதும் நிலமையின் பயங்கரம் அவனுக்குப் புரிந்தது.

"என்னை முடிச்சால் அவற்றை பிள்ளை தானே விதவையாவாள்"

ஏதோ புத்திசாலித்தனமாகக் கேட்டுவிட்டது போல் அவளைப் பார்த்தான். அவனுடைய அறியாமையை மனதுக்குள் எண்ணிச் சிரித்தபடி,

"அவருக்கு அதைப்பற்றியெல்லாம் கவலையிருந்தால் உங்களை ஏன் பொலிசிலை பிடிச்சுக் கொடுத்தவர்?"

"அவரா பிடிச்சுக் கொடுத்தவர்?"

"பின்னை யாரெண்டு நினைக்கிறியள்? சுதந்திரன் கலங்கிப் போய்விட்டான். அவனுக்கு இந்த விடயங்களெல்லாம் புரியாததாகவே இருந்தது. ஆண்டவன் இப்படிப்பட்ட மனிதர்களை யெல்லாம் ஏன் படைக்கிறான்? விடைதெரியாத வினாக்கள் இவனுக்கு மட்டும்தான் வரும் போலும்!

"அப்ப எங்கை போறது?" சலிப்போடு கேட்டான் சுதந்திரன்.
"நான் ஒரு தீர்மானம் எடுத்திருக்கிறன். அதுக்கு நீங்கள் ஒத்து வரவேணும்"
"என்ன ? நாங்கள் யாழ்ப்பாணம் போவமோ! அங்கை என்ன பாதுகாப்பு கொட்டியா கிடக்குது? கலவரப் பயத்திலை உமக்கு விசர் பிடிச்சிட்டுது" அவனுடைய இந்தக் கிண்டல் அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. அவள் எதுவும் கதைக்கவில்லை. "நாங்கள் அங்கை போக அப்பா வெளிய-லை போ எண்டால் என்ன செய்யிறது?"
"அப்பிடிச் சொல்லமாட்டார்"
"அதெப்பிடி உறுதியாய்ச் சொல்கிறீர்?"
"நீங்கள் என்னைக் காதலிக்கிறியள் என்று தெரிஞ்ச பிறகு, உங்களை வெளியேற்றினவரே? இல்லைத்தானே!. அதின்ரை அர்த்தம் அவர் சம்மதம் இல்லாவிட்டாலும் எதிர்க்க மாட்டார் என்பது தான்"
அவளை நிமிர்ந்து வியப்போடு பார்த்தான் சுதந்திரன். எவ்வளவு துல்லியமாக மனித மனங்களை எடைபோடுகிறாள். அவள் அவனின் பதிலை எதிர்பார்க்கவில்லை. வேகமாக அவசியமான உடுப்புக்களை மட்டும் பொறுக்கி எடுத்துப் பெட்டியில் அடுக்கத் தொடங்கினாள். அவள் உறுதியாகத் தீர்மானித்துவிட்டதை அவளின் செய்கைகளில் புரிந்து கொண்ட சுதந்திரன் மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் உதவி செய்வதில் முன்னின்றான். **தனி மனித நிலையில் இருக்கும் தங்களிருவருக்கும் இடையிலுள்ள விளங்கிக் கொள்ளும், புரிந்து கொள்ளும், விட்டுக் கொடுக்கும்**

**மனோபாவம் சமூகநிலையில் ஏன் இன்னும் உருவாகவில்லை.?**

இதற்கும் விடை அவனுக்குக் கிடைக்கவில்லை. மறுநாட் காலை இவர்களுக்காகவே விடிந்தது. வேளையோடு இருவரும் எழும்பி விட்டனர். சுமணா வெளி நிலவரத்தை அறிந்துவரப் புறப்பட்டாள். போனவள் பத்து நிமிடத்தில் பதட்டத்துடன் ஓடி வந்தாள். வெளியே போயிருந்த சுமணா பதட்டத்துடன் ஓடி வந்தாள்.

"சுதா நான் நினைச்சது சரி. கலவரம் தொடங்கி விட்டது. காடையர் கூட்டம் கடையெல்லாத்தையும் கொளுத்துது. காணிற தமிழ் ஆக்களையெல்லாம் வெட்டிறாங்களாம்" என்று பதட்டத்தோடு சொன்னாள்.

யாழ்ப்பாணம் போவது சாத்தியப்படாது. அதே நேரம் இந்த அறையில் இருப்பது அதைவிடப் பயங்கரம்! சுமணா எதையோ தீர்மானம் செய்து கொண்டு வெளியே போனாள். போனவள் பத்து நிமிடத்தில் உள்ளே வந்து சுதந்திரனை அவசரப்படுத்தி வெளியில் காத்து நின்ற ராக்சியில் ஏற்றினாள். சுதந்திரன் பயத்தில்

பொம்மை மாதிரி இயங்கினான். அவனது உடல் பதறிக் கொண்டிருந்தது. ராக்சி சிறிய சிறிய வீதிகளால் சென்று பிரதான வீதியில் ஏறியது. பிரதான வீதியில் வைத்து காடையர் கூட்டம் இவர்களை மறித்தது.

"தெமள இன்னவாத?" என்றொருவன் கத்தினான். சுமணா பதிலுக்கு ஏதோ கூறினாள். ராக்சி ட்றைவரும் ஏதோ கூறினான். விட்டு விட்டார்கள். ராக்சி விரைந்தது.

"சுமணா இப்ப எங்கை போறம்"

"பேசாமல் வாங்கோ. நான் எல்லாத்தையும் கவனிக்கிறன்"

அவளின் மறை முகமாக வந்த எச்சரிக்கைத் தொனி அவன் வாயை அடைத்து விட்டது. சுமணா வழிகாட்ட ராக்சி ஒரு குறுக்கு வீதியில் சென்று நின்றது. ராக்சிக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டு சுதந்திரனையும் அழைத்துக் கொண்டு அந்த நாற்பதாம் இலக்க வீட்டினுள் நுழைந்தாள். அது சுமணாவின் நண்பியின் வீடு. நடுத்தர வயதுள்ள மனிதர் இவர்களை வரவேற்றார்.

அவரது முகத்தில் சாந்தரேகைகள் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தன. வரவேற்பறையில் இருந்தபடியே வீட்டை ஒரு தரம் நோட்டம் விட்டான் சுதந்திரன். சுமணாவின் நண்பி வந்து சுமணாவை அழைத்துச் சென்றாள். வரவேற்பறையில் எதிரும் புதிருமாக அந்த மனிதரும் சுதந்திரனும் இருந்தனர். "ஐ-ஆம் பெர்னாண்டோ" என்று ஆங்கிலத்தில் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பதிலுக்கு சுதந்திரனும் தன்னை அறிமுகம் செய்தான். அவருக்குத் தமிழ் தெரியாது சுதந்திரனுக்கு சிங்களம் தெரியாது. இருவருக்கும் நன்கு தெரிந்த ஆங்கிலம் தொடர்புப் பாலமாக சரளமாக உரையாடத் தொடங்கினார்கள். வீட்டை மிக அழகாக வைத்திருந்தனர். புத்தரின் திருவுருவம் அழகாக வைக்கப்பட்டிருந்தது. சுதந்திரனின் கண்கள் அப்படியே சுற்றி வரும் போது ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது. அவனின் வியப்பைப் புரிந்து கொண்ட பெர்னாண்டோ,

"அது ராமகிருஷ்ண பரமஹம்சருடையது" என்றார்.

"நீங்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர் அல்லவா?"

"அதனாலென்ன மதங்கள் வேறாக இருந்தாலும் கடவுள் ஒன்று தானே"

"ராமகிருஷ்ணரை உங்களுக்குப் பிடிக்குமா?"

"அவருடைய தத்துவங்கள் எனக்குப் பிடிக்கும். அவர் ஒரு உன்னதமான மனிதர்"

"எனக்கும் இபபடியான அபிப்பிராயம் உண்டு. இவர்கள் எல்லம் காலத்துக்குக் காலம் மனித குலத்தை மீட்பதற்காக உதித்தவர்கள்"

"வெளியிலே மனிதர்கள் தம்மைத் தாமே வெட்டிக் கொண்டிருக்கும் போது நாம் இருவரும் புத்தரைப் பற்றியும் ராமகிருஷ்ணரைப்பற்றியும் கதைத்துக் கொண்டிருக்கிறோம். இது சரியாகப்படுகிறதா உங்களுக்கு"

"ஏன் நாங்களும் வெட்டிக் கொள்வோம் என்கிறீர்களா? இல்லை அவர்களும் எங்களைப் போல கதைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அளவுக்கு மீறி ஆசைப்படுகிறியள். எதிரும் புதிருமாக உள்ள சமூகத்தைச் சேர்ந்த இருவரும் இன்பமாக உரையாடிக் கொண்டிருக்கும் போது அதே சமூகங்களைச் சேர்ந்த மற்றவர்கள் ஏன் அடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை"

இதற்குப் பதில் கூறாமல் பெர்னாண்டோ புன்னகைத்தார்.

"டாடி... அவரைச் சாப்பிடக் கூட்டி வாருங்கோ" என்ற குரல் கேட்டு இருவரும் எழும்பினார்கள். வெளியில் தமிழரைத்

தேடித் தேடி வெட்டுகிறார்கள். இங்கே மரியாதையாக அழைக்கப்பட்டு உணவு பரிமாறப்படுகிறது. இதற்கு நான் ஒரு சிங்களப் பெண்ணை மணந்தது காரணமா? அல்லது மனிதாபிமானம் காரணமா? இதே பெர்னாண்டோ இன்னொரு தமிழரை ஆதரிப்பாரா? வினாக்கள் மீண்டும் கோர்வைகளாகின்றன. சாப்பிடும் போது பெர்னாண்டோ கேட்டார்

"மிஸ்டர் சுதந்திரன் நீங்கள் சமுதாயத்தைப் பற்றி நிரம்பச் சிந்திக்கிறியள்"

"ஏன் நீங்கள் சிந்திப்பதில்லையா?"

"சிந்திக்க எனக்கு நேரம் இல்லை"

"மதத்துக்காக வாழும் நீங்கள் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாது?" சுமணா குறுக்கிட்டாள்.

"ஏன் மதவாதிகள் சமூகத்தில் பிரச்சினைகளைத் தொட முடியாதா?"

"முடியாது, மதவாதிகள் கருத்து முதல் வாதிகள்"

"புத்தர் கருத்து முதல்வாதியா?" பெர்னாண்டோ கேட்டார்.

"புத்தர் யார்? சித்தார்த்தன் என்னும் இந்து அரசர் தானே. வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களைக் காணச் சகிக்காமல் தானே துறவறம் பூண்டவர். அவரது துறவறம் சமூக முன்னேற்றத்துக்காகத்தானே நடந்தது"

" சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல் சமூகத்தை விட்டுப் பிரிந்து வெளியில் சென்ற பிறகு அவர் சொன்ன தத்துவங்கள் சமூகத்துக்குள்ளை வாழ்ந்து

கொண்டிருக்கிற மக்களால் எப்படிப் பின்பற்ற முடியும்.? வெறும் கருத்துக்களையே தத்துவமாக்கினார் புத்தர். அவற்றைப் புரிந்து கொள்ள முடியாத உலோகாயதத் தொடர்புள்ள மக்கள் வெறி கொண்டு ரத்தத்தில் குளிக்கிறார்கள். இவையெல்லாம் கருத்து முதல் வாதத்தின் விளைவென்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவது?"

சுமணாவின் இந்த நீண்ட விளக்கம் இருவரையும் திக்குமுக்காட வைத்துவிட்டது. சுதந்திரனின் சாப்பாட்டுக் கோப்பை வெறுமையாகிக் கொண்டிருந்தது.

"கொஞ்சம் சோறு போடவா?" சுமணாவின் நண்பி கேட்டாள்.

"இல்லை காணும்"

"உங்களுக்கு..." அவரும் போதும் என்று விட்டார். சிறிது நேரம் எதுவும் கதையாமல் சாப்பிட்டனர். சாப்பிட்ட பின் இருவரும் வரவேற்பறைக்கு வந்தனர். சுமணாவும் கூட வந்து அமர்ந்தாள். "சுமணா சடகோபன் என்ன பாடு தெரியாது. ஒருக்கா போன் பண்ணிப்பார்"

சுமணா எழுந்து சென்று சடகோபனைப் பொறுப்புக் கொடுத்த ஏஜன்சிகாரனுக்குப் போன் பண்ணினாள். சடகோபன் ஜெர்மனிக்கான விமானத்தில் ஏறி விட்டதாகச் செய்தி வந்தது. செய்தியைச் சுதந்திரனுக்குச் சொன்னாள். அப்போது மௌனத்தைக் கிழித்துக் கொண்டு வீட்டு மணி அடித்தது.

# பத்தொன்பது

மணிச் சத்தத்தைத் தொடர்ந்து பெர்னாண்டோ கதவைத் திறந்தார். பெனாண்டோவின் மனைவி தான் நின்றிருந்தாள்.

“வெளியிலை சரியான பிரச்சனை. எல்லாத் தமிழ்க் கடையும் எரிஞ்சிட்டுது. கன தமிழ் ஆக்கள் றோட்டிலை செத்துக் கிடக்கினம்” என்றாள்.

“பொலிஸ் இல்லையோ? பொலிசும் சேர்ந்து தான் செய்யுதாம்” பெர்னாண்டோ கவலையுடன் சுதந்திரனைப் பார்த்தார்.

“சமூகச் சீரழிவைப் பார்த்தீங்களா? வேலியே பயிரை

மேயிறமாதிரி பொலிசே பகையை வளர்க்குது. இதுக்கெல்லாம் காரணம், மத நம்பிக்கை கொண்ட உங்களைப் போன்றவர்கள் சமூகத்தை விட்டு விலகி நிற்பது தான்" என்றான் சுதந்திரன்.

"அப்படிச் சொல்லாதேயும் இது அரசியற் பிரச்சினை. இதிலை மதவாதிகள் தலையிட்டால் இன்னும் பிரச்சினை வளருமே யொழியக் குறையாது"

"மதம் ஒன்றிலை தான் அன்பு இருக்குது. அரசியலிலை அன்பைப் பற்றிக் கதைக்கிறதில்லை. அன்பு ஒன்றாலைதான் எந்தப்பிரச்சினையும் தீரும். இது நியாயப் பிரச்சினை. இதற்கு அரசியல் முலாம் பூசக் கூடாது. மக்களின்ரை பிரச்சினை. மதம் மக்களின்ரை வழிகாட்டி. மதம் ஒரு அழிவுப் பாதை-தயல்ல. அதை மக்களுக்கு எடுத்துச் சொன்னால் இந்தப் பிரச்சனைகளுக்கு இடமேயில்லை" சுதந்திரன் சோகமாகவும் வேகமாகவும் கூறும் போது சுமணா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பெர்னாண்டோ அதற்கு மேல் கதைக்கவில்லை. நிறுத்திக் கொண்டார்.

"அடுத்து நாங்கள் என்ன செய்வது" சுமணா கேட்டாள்.

"இஞ்ச நாலைந்து நாளைக்கு மறைஞ்சிருங்கோ பிறகு பார்ப்பம்" என்றார் பொர்னாண்டோ.

சுமணாவிற்கு இதில் உடன்பாடில்லை. தாங்கள் இங்கிருக்கப் போய் இவர்களுக்கும் ஏதும் பிரச்சனை வந்து விடக்கூடாதே என்று பயந்தாள். சுதந்திரனுக்கும், சுமணாவிற்கும் ஒரு அறை ஒதுக்கப்பட்டது. இருவரும் கட்டிலில் படுத்துக் கிடந்தபடியே சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

"சுதா என்ன கனக்க யோசிக்கிறியள்"

"இந்தச் சமூகத்தை நினைக்கத்தான் பயமாயிருக்குது சுமணா"

"நாங்கள் அடுத்து என்ன செய்யிறதெண்டு யோசியாமல் வேறை ஏதோ யோசிக்கிறியள்"

"எனக்கு ஒண்டுமே புரியாதாம்"

"சுதா கன நாளைக்கு நாங்கள் இங்கே இருக்கக் கூடாது"

"எனக்குத் தெரியும் என்ன செய்யலாமெண்டு நினைக்கிறாய்?"

"அகதிகள் முகாமுக்குப் போய் அங்கையிருந்து யாழ்ப்பாணம் போவம்" என்று கூறியபடியே உறங்கிப் போனாள்.

அவளது தோளில் தலையை வைத்தபடியே அவனும் உறங்கினான்.

# இருபது

அறிமுகமில்லாதவர்கள் வீட்டுக்குள் நுழைந்து அறிமுகமாகி வெளிவந்த தினகரன் வெறிச் சோடிக் கிடக்கும் வீதியை ஒரு தடவை பார்த்தான். ஆள் நடமாட்டம் என்பது மருந்துக்குக் கூட இல்லாமலிருந்தது. ஒரு இ.போ.ச வண்டி வந்தது. கையைக் காட்டி மறித்து அதில் ஏறிக் கொண்டான். பஸ்சில் அவன் நடத்துனர், செலுத்துனர் இந்த மூவரைத் தவிர வேறு எவருமேயில்லை. தம்பி

“எவிடம்” நடத்துனர் கேட்டார்.

"இது எங்கை போகுதண்ணை"

"பருத்தித்துறைவரை போகும் தம்பி"

"அப்ப பருத்துறைக்கொரு ரிக்கட் போடுங்கோ" என்று கூறிவிட்டுப் பின் சீட்டில் போய் அமர்ந்து கொண்டான். தன் எண்ணத்திற்குக் குலுங்கிக் குலுங்கி அழுதபடி வண்டி போய்க் கொண்டிருந்தது. நடத்துனர் ரிக்கற்றைக் கொண்டுவந்து கொடுத்தார்.

"காசைக் கொடுத்துக் கொண்டே அண்ணை ரவுணுக்கை என்னபாடு?" என்று கேட்டான்.

"அதை ஏன் கேட்கிறாய் தம்பி. கன சனத்தை முடிச்சுப் போட்டான்கள். பாவம் சனங்கள்... எங்கடை பெடியன்கள் சரியான கெட்டிக்காரன்கள்"

"ஏன் இவ்வளவு சனத்தை சாக்காட்டினதுக்கோ?" தினகரன் கோபமாகக் கேட்டான்.

"சனத்தைச் சாக்காட்டினது ஆமிக்காரன்கள் தம்பி. எங்கடை பெடியன்கள் ஆமிக்காரன்களையெல்லோ சாக்காட்டினவங்கள்"

"ஆமிக்காரனைச் சாக்காட்டினால் அவங்கள் சனத்தைச் சாக்காட்டுவான்கள் என்பது உங்கடை பொடியன்களுக்குத் தெரியாதோ?"

வார்த்தைகள் வேகமாக வெளிவந்தன. நடத்துனர் முழிமுழி யென்று முழித்தார். இடையில் பஸ் நின்று வேறு இருவரை ஏற்றியது. தினகரனோடு கதைப்பது விசர் வேலையென்று நடத்துனர் நினைத்தாரோ என்னவோ அதற்குப் பிறகு அவனுக்குக் கிட்ட அவர் வரவேயில்லை. இயல்பாகவே இச்

சமூகத்தின் மீது பாசங்கொண்டவன் தினகரன். பெருமையும் தனிமைத்துவமும் சமூகக் கட்டுக்கோப்பும் கொண்ட இச் சமூகம் தவறான ஒரு பாதையில் தவிர்க்க முடியாமல் பயணத்தைத் தொடங்கி விட்டதோ என்று தனக்குள் முறுகினான். மணியோசையில் காரசாரமாக இதைப்பற்றி எழுத வேண்டுமென்று தீர்மானித்த வண்ணம் வீடு வந்து சேர்ந்தான். வந்தபோது நேரம் பதினொன்று. கவலையே உருவாக இருந்த லாவண்யா அவனைக் கண்டதும் மலர்ந்த விதத்தை எப்படி வர்ணிப்பது? உள்ளே வந்த தினகரன் களைப்பு மிகுதியால் தொப்பென்று கதிரையில் இருந்தான். லாவண்யா ஓடிப்போய் தேநீர் போட்டு வந்தாள். வாங்கிப் பருகினான். எனக்கு அலுப்பாய் இருக்குது லாவண்யா படுக்கப்போறன் என்று சொல்லிவிட்டு அறைக்குள் நுழைந்து விட்டான். படுக்கையில் படுத்தானேயொழிய நித்திரை வரவில்லை. எழுந்து யன்னல் அருகே வந்து வெளியே பார்த்தான். அப்போது தான் அந்தச் சம்பவம் நடந்தது. வெளிக் கதவருகில் ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் சுற்றும் முற்றும் பார்ப்பதை அறைக்குள் நின்றவாறே கவனித்த தினகரன் யன்னல் ஓரமாக மறைந்து நின்று அவதானித்தான். அவன் கதவைத் தட்டவும் விரைந்து கதவடிக்குச் சென்ற லாவண்யா திரும்பித் தினகரனின் அறையைப் பார்த்தாள். தினகரன் மறைந்து விட்டான். அந்த வாலிபன் கடிதம் ஒன்றைக் கொடுத்து மெதுவாக ஏதோ சொல்வதையும் தினகரன் அவதானித்தான். யார் இந்த வாலிபன்?

# இருபத்தொன்று

கதவு தட்டப்படும் ஓசை கேட்டு சுதந்திரனும் சுமணாவும் திடுக்கிட்டு எழும்பினர். உடையைச் சரி செய்து கொண்டு கதவைத் திறந்தாள் சுமணா. Good morning' என்று கூறியபடி பெர்னாண்டோ நின்றிருந்தார். பதிலுக்குக் Good morning' கூறியபடியே நேரத்தைப் பார்த்தாள்.

பத்து மணி!

இவ்வளவு நேரமாகவா படுத்திருந்தோம்! அவர்களை எழுப்பி விட்டு விட்டு அவர் போய் விட்டார். சுமணா சுதந்திரனையும் எழுப்பி காலைக் கடன்களை முடித்தார்கள். இவர்கள் வரும்

வரை பெர்ணான்டோ வரவேற்பறையில் காத்திருந்தார். எதற்குமே பதட்டப்படாத அவர்கூட இன்று பதட்ட நிலையில் இருந்தார். வரவேற்பறைக்கு வந்த சுமணாவும் சுதந்திரனும் ஆளை ஆள் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தனர். சுமணாவின் நண்பி வேலைக்குப் போய் விட்டிருந்தாள்.

"வெளியிலை நிலமை நிரம்ப மோசம்" என்றார் பெர்ணான்டோ. சுமணாவும் சுதந்திரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"தமிழ் ஆக்களின்ரை ஒரு கடைகூட மிச்சமில்லை. கன தமிழ் ஆக்களின்ரை பிரேதங்கள் ரோட்டிலை கிடக்குதாம். அரசாங்கத்தின்ரை கட்டுப்பாட்டிலை படைகள் இல்லையாம்" சுதந்திரனின் முகம் கறுத்திருந்தது.

"யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு லொறியிலை புத்த பிக்குகளின்ரை பிரேதங்கள் வருகுதெண்டும் கதைக்கிறான்கள்" இடையில் புகுந்த திருமதி பெர்னாண்டோ கூறினார்.

"வெள்ளவத்தைப் பகுதியிலை தமிழரை மறைத்து வைத்திருந்த சிங்கள ஆட்களின்ரை வீடுகளும் சரியாம்"

"அரசாங்கம் என்ன செய்யுது?" சுதந்திரன் கேட்டான்.

"அரசாங்கம் என்ன செய்யிறது தம்பி. அரசின்ரை கையிலை இராணுவமோ பொலிசோ இல்லை. எல்லாம் தன்னிச்சையாய் இயங்குதாம்"

"கடவுள் கூடப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்" சுதந்திரன் பொங்கி வெடித்தான். இப்ப தமிழ் ஆக்களைப்

பள்ளிக்கூடம் வழிய அகதிகளாய் விடுகினம்"
"சொந்த நாட்டிலேயே அகதிகளாகிற நிலமை தமிழருக்கு" சுமணா கூறினாள்.
"எல்லாமே பயங்கரமாய் இருக்குது. வெள்ளவத்யையிலை தமிழ்க் குடும்பத்தைப் பாதுகாத்து வைத்ததற்காக அந்தச் சிங்களக் குடும்பத்தையும் கொலை செய்து போட்டான்கள்" திருமதி பெர்ணான்டோ கூறினாள். சுமணாவிற்கும் சுதந்திரனுக்கும் நிலமை புரிந்தது.
"அப்ப நாங்களும் அகதி முகாமுக்குப் போவம்" சுமணா கூறினாள். பொர்ணான்டோவும் மனைவியும் எதுவும் கூறவில்லை.
பேச்சுக்குத் தன்னிலும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. நிலமை அப்படி! சுமணா தயாரானாள். எப்படிப் போவது?
"எனக்குத் தெரிஞ்ச ஆமிக்கொமாண்டர் இருக்கிறார். அவரோடை கதைச்சுப் பார்ப்பம்" என்றார் பெர்னாண்டோ. இருவரும் தலையாட்டினர்கள். பெர்ணான்டோ காரியத்தில் இறங்கினார். பலமுறை முயற்சி செய்து ஒரு மாதிரியாகத் தொடர்பு கிடைத்தது. விடயத்தைப் பக்குவமாக எடுத்துக் கூறினார். இன்னும் சிறிது நேரத்தில் அங்கு வருவதாகப் பதில் கூறினார். பதிலைக் கூறிவிட்டு தனக்கும் அந்த இராணுவக் கொமாண்டருக்கும் உள்ள தொடர்பு பற்றி விளாசித் தள்ளினார். இதை ரசிக்கும் நிலையில் சுமணாவும் சுதந்திரனும் இல்லை. ஒப்புக்காகக் கேட்டுக் கொண்டிருந்தனர். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. சிறிது

நேரத்தில் ஜீப்பொன்று அவர்கள் வீட்டின்முன் வந்து நின்றது. நல்ல திடகாத்திரமும், முகவசீகரமும் கொண்ட அந்த ஆமிக்கொமாண்டர் இவர்களுக்குக் கைகொடுத்து ஏறச் சொன்னார். ஏறிக் கொண்டார்கள். ஜீப் புறப்பட்டுச் சென்றது. ஜீப்பில் செல்லும் போது வழி நெடுகப் பார்த்த சுதந்திரன் கலங்கிக் கொண்டு சென்றான். ஒரு பாடசாலையில் இயங்கிக் கொண்டிருந்த அகதிகள் முகாமில் விட்டு விட்டுப் போய் விட்டார். கலங்கிக் கனத்த முகங்களுடன் மனித கூட்டம் ஒன்று அங்கிருந்தது. அடி வாங்கியவர்கள், தப்பி வந்தவர்கள், பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் என்று பலரகமாக இருந்தார்கள். இவர்களோடு ஒரு ரகமாக சுதந்திரனும் சுமணாவும் சேர்ந்து கொண்டனர். குறைந்தது சுமார் 500 பேர் இருப்பார்கள். இன்று காலைதான் அந்த அகதிமுகாம் திறக்கப்பட்டிருந்தது. இன்னும் உணவு சம்பந்தமான விடயங்கள் ஒழுங்கு செய்யப்படவில்லை. குழந்தைகள் பசியால் அழுதன. பெரியவர்கள் பசியால் பசியை விழுங்கிக் கொண்டிருந்தனர். சோகமயமான அந்தச் சூழலுக்குள் வந்து சுமணாவும் சுதந்திரனும் ஒரு மூலையில் ஒதுங்கினர். இருவர் மனமும் பாரமாக இருந்தன. போதாக் குறைக்கு சுமணாவைச் சிலர் சந்தேகக் கண்களோடு பார்க்கவும் செய்தனர். இதை உணர்ந்த சுமணா சுதந்திரனைத் தட்டி மெதுவாகக் கூறினாள்.

சுமணா கூறிய இந்தச் செய்தி அவனுக்குக்

கலக்கத்தைக் கொடுத்தது. இந்தப் பார்வைகளைப் பற்றிக் கொஞ்சமும் அவன் சிந்திக்கவில்லை. எல்லாத் தமிழரும் சேர்ந்து சுமனாவைக் கொல்ல வந்தால் என்ன செய்வது? எந்தப் பிரச்சினைக்கும் மனதிற்குள் கேள்வி எழுப்புவதோடு அவன் சோர்ந்து போகிறான். அவன் வினாக்களுக்கு விடை கிடைப்பதேயில்லை. விடைக்காக அவன் முயற்சிப்பதும் இல்லை. ஏனென்றால் அவன் சகலதும் கடவுளின் நிகழ்ச்சிகளே என்று மனதார நம்புகின்றான். வருவது பாதகமாக இருந்தாலும் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளும் மன நிலை கொண்டவனாகிறான். படைக்கப்பட்ட உயிர்களை வாழ விடுவதும், வாழ்விப்பதும், அழிப்பதும் அவனே என்று உள்ளார நம்புகின்றான். கருத்து முதல் வாதத்தின் அப்பட்டமான ஒரு குழந்தை இவன். சுதந்திரனிடத்தில் உள்ள இந்த குணாம்சம் தான் அவன் மேல் ஒரு கவர்ச்சியை சுமனாவிற்கு ஏற்படுத்தியது. இருவரும் இணைந்த பின் அதே குணாம்சம் துன்பத்தையும் ஏற்படுத்தியது. அவனுக்காகச் சகலத்தையும் உதறித் தள்ளிவிட்டு வந்து விட்டாள். தன்னுடைய சமூகத்தை விட்டு புதிய சமூகத்தின் கவர்ச்சிப் பிரதேசத்திற்குள் வந்து விட்டாள். இந்தச் சமூகம் அவளைக் கவருமா? கலைக்குமா? என்பது ஒரு வினாக்குறி தான்! ஆனால் இனி அவளுடைய வாழ்வும், சாவும் இந்தச் சமூகத்தோடுதான் என்பது முடிந்த முடிவு. "சாப்பாடு வந்திட்டுதாம்" பக்கத்திலிருந்த வயது போன மனிதர் கூறிக் கொண்டே எழும்பிப் போனார்.

சுமணாவினால் சும்மா இருக்க முடியவில்லை. சாப்பாட்டுக்காக எழும்பிப் போன சுமணா வாசலில் தகப்பன் நிற்பதைப் பார்த்து அதிர்ந்து விட்டாள். இவர் எங்கே இப்படி? அவள் பார்த்த அதே நேரம் அவரும் பார்த்து விட்டார். சுமணாவின நெஞ்சு ஒரு முறை அதிர்ந்தது. விறுவிறென்று நகர்ந்து மறுபுறம் சென்று விட்டாள். சாப்பாடு வந்ததாக எல்லாரும் கதைத்தார்கள். ஆனால் யாருக்குமே சாப்பாடு கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சுமணா சென்று பார்த்தாள். இத்தனை கவலைக்குள்ளும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அங்கே சாப்பாடு வரவில்லை. அரிசியும் மாவும் மூட்டையாக வந்திருந்தது. சாப்பிட விரும்பினால் சமைத்துச் சாப்பிடுங்கோ. இல்லை எண்டால் பட்டனி கிடவுங்கோ என்று செய்து விட்டுப் போய் விட்டார்கள். தமிழர்களுக்கென்று ஒரு விசேட குணம் உண்டு. ஏதாவது காரியம் செய்ய வேண்டுமென்றால் உடனே ஒரு குழு உருவாகும். குழுவின் தலைவர் காரியதரிசி எல்லாம் தெரிவு செய்யப்பட்டு, ஈற்றில் காரியம் முடியுமுன்பு அடிபட்டு எல்லாரும் கலைந்த தலையைப் பிய்த்துக் கொண்டு நிற்பார்கள். இது பரம்பரைக் குணம். இங்கும் அப்பிடித்தான். இங்கும் ஒரு தொண்டர் குழு உருவானது. குழு வேகமாகச் செயற்பட ஆரம்பித்தது. முதற் செயற்பாடு உணவு வழங்குவது என்று தீர்மானித்தனர். கலவரத்தில் பாதிக்கப்பட்ட சாப்பாட்டுக் கடைத் தொழிலாளர்கள் தாமாக முன் வந்தனர். சமையல் வேகமாக நடந்தது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பர்.

எல்லோரும் நகமும் சதையும் போல் நின்று காரியமாற்றினர். துன்பத்தில் இன்பத்தைக்காணும் அந்தக் காட்சியைப் பார்க்க ரம்மியமாக இருந்தது. சுமணாவும் அவர்களுள் ஒருத்தியாக நின்று உதவி புரிந்தாள்.

"அது தான் தமிழ்ப் பெடியனைக் கட்டின சிங்களப் பெட்டை உவள் என்ன திட்டத்தோடை இதுக்குள்ளை வந்திருக் கிறாளோ...?"

"நஞ்சு கிஞ்சு கலந்து கூண்டோடை முடிக்கப் போறாளோ என்னவோ..? வெளியிலை உவளின்ரை ஆட்கள் வெட்டிறான்கள். உவள் இஞ்சை சமைக்க வந்திட்டாள்..." சுமணாவின காதில் இந்த வார்த்தைகள் நுழையாமலில்லை. பொறுமையாகச் சகித்துக் கொண்டு நின்றாள். இந்த வசனங்களைச் சுமணா மட்டுமல்ல இன்னுமொரு வாலிபனும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் தான் தொண்டர் குழுத் தலைவன். அவன் மெதுவாக நகர்ந்து கதைத்தவர்களை நெருங்கினான். யாருக்கும் தெரியாமல் அவர்களை எச்சரித்த விதத்தை சுமணாவின் கண்கள் விழுங்கிக்கொண்டன. நன்றியோடு ஒரு புன்னகை அவனை நோக்கிச் சென்றது. சுமணா திரும்பவும் சுதந்திரன் இருக்குமிடம் வந்தாள். சுதந்திரன் அவ்விடத்தில் இல்லை. கண்களைச் சுற்றிப் படரவிட்டாள்.

# இருபத்தியிரண்டு

ஒரு வாலிபன் வந்ததும் அவன் லாவண்யாவுக்கு கடிதம் கொடுத்ததும் தினகரனுக்குக் குழப்பத்தைக் கொடுத்தாலும் எதுவுமே நடவாதது போல் மறுநாள் நடந்து கொண்டான். அவளுடைய நடைமுறையில் மட்டும் அவன் பல மாறுதல்களை அவதானிக்கத் தவறவில்லை. அன்றைய தினசரியுடன் வந்த மகாலிங்கத்தார்

“தம்பி கொழும்பிலை பெரிய கலவரமாம்” என்ற செய்தியைக் கூறினார். தினகரன் எதிர்பார்த்த ஒன்றுதான். மக்களின் மன நிலைகளையும் யதார்த்தங்களையும் புரிந்து கொள்ள முடியாத அரசியல்வாதிகளால் இதைவிட வேறு என்ன செய்ய

முடியும்? மகன் என்னபாடோ பயமாயிருக்குத் தம்பி என்று அங்கலாய்த்தார் மகாலிங்கத்தார்.

"பயப்படாதையுங்கோ மாஸ்டர் அவருக்கு ஒண்டும் நடக்காது" என்று கூறினான் தினகரன்.

"லாவண்யா எங்கை மாஸ்டர்"

"எனக்கு அவள் ஒண்டும் சொல்லிறதில்லைத் தம்பி. காலமை வெள்ளென எழும்பி ஆரோ சிநேகிதியிட்டைப் போட்டு வாறனெண்டிட்டுப் போனவள்... இன்னும் காணயில்லை" என்று சலிப்போடு கூறியவர்,

"மெய்யே தம்பி சடகோபன் ஜெர்மனிக்குப் போயிருப்பானே" தினகரனுக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.

"சடகோபன் கட்டாயம் ஏறியிருப்பார். அவரை நான் ஒரு பொறுப்பான ஆளிட்டைத்தான் குடுத்திட்டு வந்தனான்" லாவண்யாவின் போக்கு மாற்றம் அவனுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. கடிதம் வந்தது. கடிதத்தை வாங்கிய தினகரன் முகவரியைப் பார்த்தான். அது அவனுக்குத்தான் வந்திருந்தது. சாந்தா அனுப்பியிருந்தாள். அழகான ஒரு கவிதை மணியோசைக்கு அனுப்பியிருந்தாள்.

***ரோஜா' என்றால்***
***அவனுக்குக் கொள்ளை ஆசை***
***அதன் மணமே***
***சில வேளை***
***அவனுக்குச் சாப்பாடு***
***அதனை***
***கவர்ந்து மணக்க நினைத்தான்***

*கவர்ந்தான்*
*கையில் குத்தியது முள்ளு*
*சிலிர்த்தான்!*
*சினங்கொண்டு கோபமாய்*
*அதனைச் சிதைத்தான்*
*நாளைக்கு*
*ரோஜாவுக்கு எங்கே*
*போவான்!?*

முட்டாள் என்ற தலைப்பில் இந்தக் கவிதையை எழுதியிருந்தாள். சாந்தாவின் அறிவும் தூரப் பார்வையும் அவனுக்கு வியப்பைக் கொடுத்தன. சிறிய வயதில் பெரிய சிந்தனைகளை என்ன லாவண்யமாகப் புகுத்துகின்றாள். இவன் இப்படியாக நினைத்துக் கொண்டிருக்கும் போது லாவண்யா வந்தாள். என்ன கையில் கடிதம் என்று கேட்டுக் கொண்டே அவனருகில் வந்தாள். கவிதையொன்று மணியோசைக்கு வந்திருக்குது என்றவாறு அதை அவளிடம் கொடுத்தான். அதை வாங்கிப் படித்த அவள் "நல்லாயிருக்குது யார் எழுதியது?" என்றாள்.

"சாந்தா"

"ஆரிந்த சாந்தா, அவளுக்கென்னண்டு உங்கடை விலாசம் தெரியும்?" என்ன தான் அறிவு பூர்வமான சிந்தனை உடையவளாக இருந்தாலும் இன்னுமொரு பெண் தினகரனுடைய விலாசத்தைத் தெரிந்து கொள்ளவோ அவனுக்கு எழுதுவதையோ அங்கீகரிக்க முடியாது

தவித்தாள். அவளுடைய கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட போதிலும் புரியாத மாதிரிக் கதையைத் தொடர்ந்தான் தினகரன். சாந்தாவைச் சந்தித்த சூழ்நிலையையும் அந்த ஒரு இரவில் சாந்தாவின் உயர்ந்த பழக்க வழக்கங்களைத் தான் அவதானித்துக் கொண்டதையும் அவளிடம் உள்ள கவிதா சக்தியின் உயர்வையும் தன்னால் முடிந்தளவுக்கு விபரித்தான் தினகரன். இவனது இந்த விபரிப்பு லாவண்யாவுக்கு எரியிற நெருப்பிலை எண்ணெய் ஊற்றியது போலாயிற்று. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு போய்விட்டாள். அவளைச் சீண்டுவதில் அவனுக்கொரு இன்பம்.

போனவளின் பின்னால் தொடர்ந்து போனான். லாவண்யா... பிகு பண்ணிக்கொண்டு போனாலும் அவன் கூப்பிட்டதும் நின்று விட்டாள்.

"மணியோசை கெதியாய் வெளியிடவேணும்" கதையைத் திசை திருப்பினான். மணியோசை வெளி வரவேண்டு மென்பதில் அவளுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். மணியோசை பற்றிக் கதைத்ததும் நின்ற லாவண்யா

"ஏன் சாந்தாவைக் கேட்கலாமே?" என்றாள். தினகரன் சிரித்துக் கொண்டே

"இது என்ன லாவண்யா சின்னப் பிள்ளையைப் போல" என்றான். அப்போ மகாலிங்கத்தார் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். உள்ளே நுழைந்த மகாலிங்கத்தார் இருவரும் கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துப்

புன்னகைத்தபடி தன் வேலையில் இறங்கினார். அவன் கூறியது அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்து விட்டுக் கிணற்றுக் கட்டில் அமர்ந்தனர்.

"யாழ்ப்பாணத்திலை நடந்த நிகழ்ச்சி தமிழரின்ரை விடுதலைப் பாதையிலை ஒரு திருப்பு முனை" என்றாள் லாவண்யா.

"எந்த வகையில்?"

"நெடுக அரசியல் வாதிகள் சொல்லிற பொய்களிலை மயங்கி குட்டக் குட்ட குனிந்து கொண்டிருந்த தமிழ் இனம் நேற்றைய நிகழ்ச்சி மூலம் ஒரு நாட்டின்ரை இராணுவத்துக்கு சவால் விட்டிருக்கு"

"இல்லையே சனம் சவால் விடேல்லையே. இளைய தலை முறையைச் சேர்ந்த பத்துப் பேர் சேர்ந்து இராணுவத்தைத் தாக்கியிருக்கினம். இவை எப்படி சனத்தைப் பிரதி நிதித்துத்துவப்படுத்தலாகும்"

"காலப்போக்கிலை இது நிகழலாம் தானே. சீனாவிலை மாசேதுங் கூட ஆரம்பிக்கேக்கை பத்துப் பேர்தான். எல்லா நாட்டிலையும் ஆயுதப் போராட்டம் ஒரு குழு நிலையிலை ஆரம்பிச்சுப் பிறகு பரந்த மக்கள் போராட்டமாகத்தானே மாறியிருக்கு... என்னைப் பொறுத்தவரை நிச்சயமாய் இந்த நிகழ்ச்சி மக்களைச் சிந்திக்க வைக்கும். மக்களுக்குச் சிந்திக்கிறதுக்கான ஒரு தைரியத்தையாவது கொடுக்கும்"

"இதனாலை எவ்வளவு அழிவு, முன் யோசனையில்லாமல் செய்து எவ்வளவு உயிர்களை இழந்திட்டம்"

"விடுதலைப் போராட்டத்தின்ரை ஆரம்பத்திலை அழிவுகள் தவிர்க்க முடியாதது தான். ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றை அடையலாம்"

"போராடி அழியலாம். போராடாமல் அப்பாவி நிலையிலை அழியிற மக்களுக்கு விடுதலைப் போர் மீது பயத்தைத்தான் தோற்றுவிக்கும்"

"அப்ப போராட்டம் பிழையா?"

"அப்பிடி நான் சொல்லேல்லை. தமிழர்கள் தங்கள் விடுதலைக்காக போராடவேண்டிய காலகட்டம் தான் இது. ஆனால் ஒரு குழு நிலைப் போராட்டமாய் இல்லா மக்களை இணைத்ததாய் இருக்கவேண்டும்"

"கம்யூனிச வாதிகள் நெடுக மனப்பாடமாய் உதைத்தான் சொல்லிறியள். அதற்கான வேலைத் திட்டங்களை என்றைக்காவது முன் வைச்சிருக்கிறியளே. நீங்கள் சீனாவிலையும் ரூசியாவிலையும் மழை பெய்ய இஞ்சை குடைபிடிக்கிற ஆக்கள் தானே. யதார்த்தம் யதார்த்தம் எண்டு கதைப்பியள் ஆனால் யதார்த்தமான பிரச்சினைகளை அணுகக்கூட உங்களுக்குத் தெரியாது. பாரதியார் சொன்ன மாதிரி நீங்கள் எல்லாம் வாய்ப்பேச்சிலைதான் வீரர். இண்டைக்குத் தமிழ் மக்கள் இருக்கிற நிலையிலை முதல் அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படவேணும். அதற்கு இப்படியான சில வேலைகள் அவசியம்" என்று பொரிந்து தள்ளினாள் லாவண்யா.

"தன்னம்பிக்கை தத்துவ ரீதியாகத்தான் ஏற்பட வேணும். ஆயுத நடவடிக்கையின் கவர்ச்சியினால் எற்பட்டால் அது

நிலைக்காது. சினிமாப்படம் பார்த்து விட்டு மறந்த மாதிரித்தான் இருக்கும்" "உங்கடை வாதம் பிழை. நடை முறையிலை சாத்தியப்படாது. எழுதவும் சொல்லவும் தான் நல்லாயிருக்கும். மணியோசையிலை எங்கடை விடுதலைப் போரை நீங்கள் வலியுறுத்தி மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டவேணும்."

"மணியோசை மக்களைச் சார்ந்தது. மக்களுக்கு எது சரியோ? எது பாதகமோ? அதை அப்பட்டமாய் எழுதுவன். இப்ப நடந்த நிகழ்ச்சியை கடுமையாய் விமர்சிக்கப்போறன்"

"உங்களுக்குப் பிடிக்காவிட்டால் விடுங்கோவன். ஏன் வீணாய் விமர்சிக்கப் போய் வில்லங்கத்தைத் தேடிறியள்"

"அப்பிடி என்ன வில்லங்கம் வரும்"

"அது ஏன் உங்களுக்கு? நீங்கள் பிரச்சனையளுக்கை அகப்படிறதை நான் விரும்பேல்லை"

"உண்மையை எழுத நான் பயப்படமாட்டன். என்ன சூழ் நிலையிலை என்ன காரணத்துக்காக மணியோசை தொடங்கினனான் எண்டு உமக்குத் தெரியும் தானே?"

"சொல்ல வேண்டியது என் கடமை. இனி உங்களைப் பொறுத்தது" என்று சொல்லிவிட்டு எழும்பினாள்.

தினகரனுக்கு அவளின் போக்கு விசித்திரமாக இருந்தது. எவ்வளவு மாறிவிட்டாள்! லாவண்யா போன பின்பு சிறிது நேரம் இருந்து விட்டு தன் அறைக்குள் வந்து படுத்தான்.

# இருபத்துமூன்று

சுதந்திரனையும் அழைத்துக் கொண்டு கதவடிக்கு வந்த சுமணா தகப்பனைத் தேடினாள். ஒரு ஓரமாக அவர் நிற்பது தெரிந்தது. அவள் அவரைப் பார்க்க அவர் அவளைக் காணவும் சரியாக இருந்தது. இவர்களுக்கருகில் வந்த திலகரத்னாவின் பார்வையில் தெரிந்த சோகம் சுமணாவை உலுக்கியது. அதைக் காட்டிக் கொள்ளாமல் தகப்பனையே உற்றுப் பார்த்தாள். அவர் சுதந்திரனோடு கதைத்த போது அந்தக் கதையின் ஒவ்வொரு சொல்லிலும் அன்பு நிரம்பிச் சிந்துவது போலிருந்தது சுமணாவுக்கு.

"நான் உயிரோடை இருக்கும் வரைக்கும் நீங்கள் இங்கை

இருக்கக்கூடாது" என்று அவர் கூறிய போது சுமணா தன்னையே மறந்து போனாள்.

விதி ஒரு மனிதனைச் சுற்றும்போது சிந்திக்கும் தன்மை எல்லா வற்றையும் மனிதன் இழந்து விடுகிறான் போலும். சுமணா இப்படி என்றால் சுதந்திரன் அதற்கு மேலாக இருந்தான்.

அந்தக் கணத்தில் சிங்களவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்றும் தமிழர்கள் எல்லாம் கூடாதவர்கள் என்றும் மனம் எண்ணியது என்றால் பாருங்களேன்! தன்னுடைய வாழ்க்கையில் இனி ஒரு வசந்தம் வீசப்போகிறதென்று எண்ணிக் கொண்டான். சுமணா தகப்பனை முரடன் என்று இதுவரை எண்ணியவற்றை எல்லாம் மூட்டை கட்டி அவரை ஒரு புத்தராக மனதிற்குள் நினைக்கிற அளவுக்குப் போய்விட்டாள். கொஞ்சம் கூடச் சந்தேகம் வராமல் திலகரத்னா நடந்து கொண்டார். இப்படியெல்லாம் இவர்கள் மனதிற்குள் கற்பனை செய்து கொண்டிருக்கும் போது தன் திட்டப்படி வலைக்குள் விழுந்து விட்ட இரு இளசுகளையும் பார்த்து மனதிற்குள் வக்கிரமாகச் சிரித்துக் கொண்டார் திலகரத்னா. என்னதான் மனதிற்குள் வக்கிரமாகச் சிரித்துக் கொண்டாலும் முகத்தில் மட்டும் அன்பு வழியும் பாவனையை வைத்துக் கொள்வதில் அசகாய சூரராக இருந்தார் அவர். இதுவரை நாளும் மனதிற்குள் யாழ்ப்பாணத்துப் பொடியன்களில் அனுதாபம் கொண்டிருந்த சுதந்திரன் இப்போது காணாததைக் கண்டமாதிரி மனதிற்குள் திட்டினான். இவனுடைய இந்தக் கற்பனையெல்லாவற்றையும்

உடைத்துத் தம்பி என்று அவர் அழைத்தபோது உண்மையிலேயே அவன் அவருள் அமிழ்ந்து போனான். அவர் அழைத்தபோது எவ்வித மறுப்பும் சொல்லாமல் இருவரும் புறப்பட்டனர். விதி அவர்களைப் பார்த்துச் சிரித்தவாறே கூடப் புறப்பட்டது. இது யாருக்குத் தெரியும்? சுமணாவின் வீட்டைக் கார் நெருங்கத் தாயைக் காணப் போகிறோம் என்ற சந்தோசத்தில் திளைத்துப் போயிருந்தாள் சுமணா. கார் நின்றதும் வாசலில் காத்து நிற்கும் தாயை ஓடிப் போய்க் கட்டிப் பிடித்தாள். அப்போதுதான் அவசர அவசரமாக அவள் காதுக்குள் அந்தப் பயங்கரமான செய்தியைச் சொன்னது அந்தத் தாயுள்ளம். இதைத்தவிர வேறென்ன செய்ய முடியும்? சுமணாவின் இதயம் ஒரு தடவை நின்று மீண்டும் இயங்கத் தொடங்கியது. அவளின் கனவுகள் கற்பனைகள் எல்லாம் பொலபொல வென்று உதிர்ந்தன. வேகமாகத் திரும்பினாள். நால்வரின் பிடியில் அகப்பட்ட சுதந்திரன் திமிறிக் கொண்டிருந்தான். அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று பாய்ந்த அவளின் காலைத் தட்டிக்குப்புற வீழ்த்தி நிலத்தோடு வைத்து அமத்தியது ஒரு மனித மிருகம். சுமணா பலம் கொண்ட மட்டும் கத்தினாள். யாருமே அவளின் கதறலைக் கேட்கவில்லை. பல மனித மிருகங்கள் வேடிக்கை பார்க்கச் சுமணா கதறக்கதற அந்தக் கோரசம்பவம் நடக்கத் தொடங்கியது. ஒரு சடப்பொருளை வெட்டுவது போல் வெட்டினார்கள். என்ன வெறி! சுமணா பார்க்க அவள் தகப்பனே அவனை வெட்டினான். கொஞ்ச நேரத்துக்கு முன்

சிரித்துக் கதைத்த சுதந்திரன், சுமணாவின் இதய அரசன்– சுமணாவின் இரு கண்களும் பார்த்துக் கொணடிருக்கப் பரிதாபமாக உயிரை விட்டுக் கொண்டிருந்தான்.

தான் மனதார நேசித்த சுதந்திரனைத் தன் தகப்பனே வெட்டிக் கொல்லும் காட்சியில் ஏற்பட்ட அதிர்ச்சியில் மயங்கி விட்டாள். எவ்வளவு நேரம் மயங்கி இருந்தாளோ தெரியாது விழித்தபோது வீட்டுக்குள் வளர்த்தப்பட்டிருந்தாள். அவள் கண் விழித்தபோது நடுச்சாமம் மூன்று மணி. அந்தக் காட்சி அவள் கண்களில் படமாக ஓடியது. அவளுக்குள் அவளையறியாமலே ஒரு வெறி தோன்ற ஆரம்பித்திருந்தது. மெதுவாகத் தலை யைத் திரும்பிப் பார்த்தாள். தாய் அருகில் படுத்திருந்தாள். கொஞ்சம் தள்ளித் தகப்பன் என்ற மிருகம் படுத்திருந்தது. என்ன நினைத்தாளோ? தெரியாது அவளுள் ஆத்மீகம் நிறைந்த ஒரு உத்வேகம் தோன்றிக் கொண்டிருந்தது. வெளியில் எழும்பிப் போனவள் கத்தியுடன் உள்ளே வந்தாள். கண்களில் கொலை வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தகப்பனருகே வந்தவள் எதைப்பற்றியுமே யோசிக்கவில்லை. கண்ணை மூடிக்கொண்டு வெட்டினாள். இரத்தம் பீச்சியடித்தது. சத்தம் கூட வரவில்லை. ஒரே வெட்டு. தலை வேறு–முண்டம் வேறு ஆகிவிட்டது. அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டு நின்றவள் தன் நிலைபெற்று வெளியே ஓடி வந்தாள். இரத்தத்தைக் கழுவி விட்டு வேகமாக வீட்டைவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

# இருபத்து நான்கு

வேகத்தில் கொலையைச் செய்தவளுக்கு அடுத்து எங்கே போவது என்பது புரியவில்லை. பிரதான வீதிக்கு வர பஸ் ஒன்று வந்தது. ஏறிக் கொண்டாள். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் இறங்கி வீதிக்குக் குறுக்கால் நடந்து சுதந்திரனது அறையை அடைந்தாள். அறையுள் சுதந்திரன் விலாசத்துக்கு வந்திருந்த கடிதத்தை எடுத்து உடைத்தாள். சடகோபன் போட்டிருந்தான். தான் ஜேர்மனிக்கு சுகமாகப் போய்ச் சேர்ந்ததாகவும், கலவரம் பற்றிக்

கேள்விப்பட்டதாகவும், அண்ணியையும் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் போகும்படியும் எழுதியிருந்தான். வாசித்துக் கொண்டிருக்கும் போது கண்ணீர் பொலபொலவென்று வடிந்தது. மனதுக்குள் ஒரு வஞ்சினம் உருவாக, எழும்பிப் பெட்டியொன்று எடுத்து சுதந்திரனது உடுப்பு சிலவற்றையும் படத்தையும் எடுத்து வைத்தாள். மறக்காமல் யாழ்ப்பாண வீட்டு விலாசத்தை எடுத்துத் தன்னுடைய சட்டைப் பையுள் வைத்து விட்டு விறுவிறுவென்று வெளியில் வந்தாள். அரை குறையாக எரிந்த கடைகள் மெதுவாக எரிந்து கொண்டிருந்தன. வீதியில் சன நடமாட்டம் இல்லை. வீதியைக் கடந்து புகையிரத நிலையத்துக்குள் சென்று அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள். மூச்சு இப்போது தான் வந்து போய்க் கொண்டிருந்தது, எத்தனை நாள் சுதந்திரனோடு இந்த இடத்தில் இருந்து கதைத்திருப்பாள். சுதந்திரனை நினைக்க நினைக்க அழுகைதான் வந்தது. காதலனையும் இழந்து, தகப்பனையும் கொலை செய்து விட்டு நிர்க்கதியாக நிற்கும் அவள், மனதைத் திடப்படுத்திக் கொண்டு அடுத்து என்ன செய்வது? எங்கே போவது? எனச்சிந்திக்க ஆரம்பித்தாள். மனதை எந்தக் கோணத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு யோசித்தபோதும் முடிவு யாழ்ப்பாணம் போவதேமேல் என்பதாக வந்தது. முடிவு செய்து விட்டாள்.!

யாழ்ப்பாணத்தை நோக்கிப் புகையிரதம் போய்க் கொண்டிருந்தது. மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஒரு

மூலையில் அவள் இருந்தாள். ஒரே சனமாக இருந்தது. கலவரத்துக்குப் பிறகு ஓடுகின்ற முதல் புகையிரதம் இது. ஒவ்வொரு பெட்டியிலும் ஒவ்வொரு ராணுவக்காரன் துவக்கோடு நின்றிருந்தான். அவ்வளவு துன்பத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. இவர்கள் யாரைக்காக்க நிற்கிறார்கள்? இவர்கள் தானே கலவரத்தின் காவல்காரர்கள். யன்னலூடாக வெளியே பார்த்தாள்.

கண்ணைப் பறிக்கும் ரம்மியமான இயற்கைக் காட்சிகள் இருந்த போதும் சுமணாவிற்கு அவையெல்லாம் சூனியமாகவே இருந்தன.

எத்தனையோ விதமான மனங்களைச் சுமந்த வண்ணம் எவ்வித சலனமுமின்றிப் பாட்டுப் பாடிய வண்ணம் சென்று கொண்டிருந்தது அப் புகையிரதம். சுதந்திரனது வீடு செல்ல எந்த நிலையத்தில் இறங்குவது? எதுவுமே தெரியாமல் புறப்பட்டுவிட்ட இந்தப் பயணத்தை நினைக்கச் சுமணாவுக்கு விரக்தியாகவே இருந்தது. இவள் இப்படிக் குழம்பிக் கொண்டிருக்கும் போது அவளை இரு கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன. சும்மா திரும்பிய சுமணாவும் அக் கண்களைச் சந்தித்தாள். அக் கண்களுக்குரியவன் ஒரு இளைஞன். அவனை எங்கோ சந்தித்தது போன்ற உணர்வு அவளுக்கு. எங்கே?

அவளை நீண்டநேரம் சிந்திக்க அவன் விடவில்லை.

"நீங்கள் Mrs சுதந்திரன் தானே.?" என்றான்.

"ஆமாம். நீங்கள்..."

"நாங்கள் அகதி முகாமிலை சந்திச்சமே ஞாபகமில்லையா?"

என்று கேட்டான். இப்போது தான் சுமணாவிற்கு விளங்கியது. அகதிகள் முகாமில் தொண்டர் படையில் அவனும் இருந்தது. தன்னைத் தெரிந்த ஒருவன் அந்தக் கூட்டத்திற்குள் உருவானமை அவளுக்குத் தெம்பைக் கொடுத்தது. தனக்கு நடந்தவைகளை இப்போ அவனிடம் சொல்ல முடியாது. சொல்லக் கூடிய சூழ்நிலையும் இல்லை. சொல்வதால் ஆகப் போவதெதுவும் இல்லை. இருந்தாலும் அவனுடைய நட்பு அவளுக்குத் தேவை என நினைத்தமையால் அவனை நினைவு படுத்தி மெதுவாகச் சிரித்தாள்.

"அகதிகள் முகாமிலை எல்லாரும் போயிட்டினமா?" சுமணா கேட்டாள்.

"இல்லை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அனுப்புகினம்"

"நானும் யாழ்ப்பாணம் தான் போறன்" என்று சுமணா சொல்ல வியப்புடன் அவளைப் பார்த்த அவன்,

"உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டனான். பேப்பரிலை எல்லாம் வந்தது. நீங்கள் சரியான துணிச்சல்காரி. இண்டையான் பேப்பரில வந்திருக்குது" என்று சொல்லி பேப்பரை அவளிடம் கொடுத்தான். தான் எதை மறைக்க நினைத்தாளோ அதை அவன் தனக்குத் தெரிந்ததாக காட்டிய போது சிறிது சங்டப்பட்டாலும் சமாளித்துக் கொண்டு மற்றவர்கள் யாரும் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாதவாறு மறைத்துக் கொண்டாள்.

"அந்த நேரத்திலை என்னாலை அப்பிடித்தான் நடக்க முடிஞ்சுது. உலகத்தின்ரை கண்களுக்கு அது

தவறாகப்பட்டாலும் . என் மனச்சாட்சிக்கு . நியாயமாகத்தான் படுகுது"

"சில விடயங்களை நியாய அநியாயக் கோட்பாடுகளுக்குள்ளை அடக்க முடியாது. சுதந்திரனுக்கு நடந்தது நியாயம் என்றால் நீங்கள் செய்ததும் நியாயம் தான்"

அவன் கூறியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சுமணா, "நான் இப்ப அவர் வீட்டைபோறன். அவையளிலை ஆரையும் எனக்குத் தெரியாது. எதிர்த் தாக்கத்தை நினைக்கப் பயமாயிருக்குது"

"உங்கடை முடிவு சரி. இனி உங்கடை சமூகம் உங்களை ஏற்காது. சுதந்திரனின் பெற்றோர் கட்டாயம் உங்களை ஏற்பினம். எங்கடை சமூகம் கட்டாயம் உங்களை வரவேற்றுத்தான் ஆகவேண்டும். அது தான் மனிதாபிமானம். தற்செயலாய் உங்களுக்கு அங்கை வரவேற்புக் கிடைக்காவிட்டால் என்ரை வீட்டை பயப்படாமல் வாங்கோ. ஆனால் பொலிசாரின்ரை கண்களிலையிருந்து உங்களை எப்படிக் காப்பாற்றப்போறியள் " என்று மிக மெதுவாகக் கேட்டுவிட்டுத் தன் விலாசத்தை ஒரு துண்டில் எழுதிக் கொடுத்தான். அவனை நன்றியோடு

பார்த்தாள் சுமணா. இவ்வளவு தூரம் கதைத்தும் அவன் பெயர் அவளுக்குத் தெரியாமல் இருந்தது. அவன் எழுதித்தந்த துண்டைப் பார்த்தாள் முகுந்தன் என்றிருந்தது.

"உங்களிட்டைச் சுதந்திரன் விலாசம் இருக்கோ?"

"இருக்கு என்று சொல்லி அதை எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்த அவன் இதுக்கு நீங்கள் கொடிகாமம்

ஸ்ரேசனிலை இறங்கவேணும். ஸ்ரேசனுக்கு முன்னாலை பஸ் நிற்கும். பருத்தித்துறை போற பஸ்சிலை ஏறினியளெண்டால் ஆரைக் கேட்டாலும் கருணையூரைக் காட்டுவினம. எதுக்கும் கவனமாகப் போங்கோ" இப்போ அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அவள் எவ்வளவுதான் சரளமாக தமிழ் கதைத்தாலும் அவளின் உடலமைப்பு அவள் தமிழச்சி அல்ல என்பதைக் காட்டிக் கொடுத்தது. கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக அப் புகையிரத்தில் இருந்ததால் அவளை ஒருவித வெறுப்புடனேயே நோக்கினார்கள். இதனை முகுந்தனும் அவதானித்தான். ஆனாலும் இது பார்வை அளவில் தான் இருக்கும் அத்துமீறாது என மனதுள் கணக்கிட்டுக் கொண்டு அடுத்த ஸ்ரேசனில் சுமணாவிடம் விடைபெற்றுக் கொண்டு இறங்கி விட்டான். யன்னலினூடாக எட்டிப் பார்த்தாள். காடுகள் தெரிந்த இடங்களில் பனை மரங்கள் தெரிந்தன. யாழ்ப்பாணப் பிரதேசம் இது தான் என அவை பறை சாற்றின.

கொடிகாமம் வந்தது. சுமணா இறங்கிக் கொண்டாள். முற்றிலும் புதிய பிரதேசம். முகுந்தன் கூறியவாறு வெளியில் வந்து பருத்தித்துறை போகும் பஸ்சில் ஏறிக் கொண்டாள். நடத்துனரிடம் தன்னை இறக்கிவிடும்படி கூறிவிட்டு அமர்ந்து விட்டாள். கருணையூரை அவள் அடைந்தபோது நேரம் ஒன்பது மணி. கருணையூரில் இறங்கிய சுமணாவுக்குத் திகைப்பாக இருந்தது. முற்றிலும் புதிய ஊர். பஸ் நிலையத்துக்கு நேரே உள்ள கடைக்குச் சென்று தன் கையிலுள்ள விலாசத்தைக் காட்டிக் கேட்டாள். அந்தக்

கடைக்காரர் காட்டிய வழியில் சென்று சுதந்திரன் வீட்டை அடைந்தபோது நேரம் பத்து மணியாகி விட்டது. மெதுவாகக் கதவைத் தட்டினாள்.

தினகரன்தான் கதவைத் திறந்தான். அவனுக்குத் திகைப்பாக இருந்தது. ஏற்கனவே பார்த்த ஒரு முகம்.
"நீங்கள் சுமணா தானே..."
சடகோபனை கொழும்புக்குக் கொண்டு சென்று விடப் போன போது பார்த்த அறிமுகம். சுமணாவிற்கு நிம்மதியாக இருந்தது. தன்னைத் தெரிந்த ஒரு மனிதன் இருக்கிறானே என்று.
"வாங்கோ உள்ளை" என்று கூப்பிட்டு இருத்தி விட்டுத் தானும் அமர்ந்தான். அப்போதுதான் வெளியிலிருந்து உள்ளே நுழைந்த லாவண்யா சுமணாவைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை மட்டும் உதிர்த்து விட்டுத் தினகரனிடம் வந்த விருந்தாளி என நினைத்து உள்ளே போய் விட்டாள். இதைக் கவனித்த தினகரன் உள்ளே போய்
"லாவண்யா உம்மட்டை வந்த விருந்தாளி" என்றான். வியப்போடு வந்த லாவண்யா சுமணாவைக் கேள்விக் குறியோடு பார்த்தாள்.
"என்ரை பெயர் சுமணா. உங்கடை அண்ணாவின்ரை மனைவி"
என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டாள். லாவண்யாவுக்கு பக் கென்றிருந்தது. பதிலேதும் கூறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பூகம்பம்

உருவாகக் கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக தினகரனின் உள் மனம் கூறியது.

“ஏன் மிஸ்டர் சுதந்திரன் வரவில்லையா?” என்று தினகரன் கேட்டான். இல்லை என்று கூறிவிட்டு அழத்தொடங்கினாள் சுமணா. அவள் அழுது முடியட்டும் என்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த இருவரும் ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதென்பதை மட்டும் தமக்குள் கணக்கிட்டுக் கொண்டனர். அவள் மெதுவாக விசும்பிய வண்ணம் நடந்தவைகளை விளக்கினாள். லாவண்யா ஓ வென்று கதறினாள். அவளின் கதறல் கேட்டுப் பின் வளவில் நின்ற மகாலிங்கத்தார் அடுத்த வளவில் நின்ற பவளமக்கா இருவரும் கையில் வைத்திருந்தவைகளை அப்பிடியே போட்டுவிட்டு ஓடிவந்தனர். மகாலிங்கத்தாருக்கு எதுவுமே விளங்கவில்லை.

“அண்ணா...அண்ணா” என்று லாவண்யா கத்த அவளோடு சேர்ந்து அவரும் அழுதார். தினகரனின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. விடயத்தைப் புரிந்து கொண்ட பவளமக்கா அக்கம் பக்கம் எல்லாம் விடயத்தைச் சொல்ல எல்லாரும் குழுமி விட்டனர். தினகரன் நிலமையைப் புரிந்து கொண்டு புத்திசாலித்தனமாக சுமணாவை அழைத்துச் சென்று தன் அறையுள் அமர்த்தினான். பிரேதம் இல்லாத செத்த வீடு நடந்து கொண்டிருந்தது. அழுது அழுது உடல் சோர்ந்து மயங்கிவிட்டாள் லாவண்யா. மகாலிங்கத்தாரும் சோர்ந்து போய் ஒரு மூலையில் சுருண்டு விட்டார். வந்தவர்களும் தங்களால்

முடிந்த மட்டும் சோகங்களைக் கொட்டிவிட்டுப் புறப்பட்டு விட்டனர். இப்போ வீட்டில் சுமணா லாவண்யா மகாலிங்கத்தார் தினகரன் நால்வரும் தான் இருந்தனர். நால்வரும் ஆளுக்கொரு மௌனத்தால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தனர். வளி மண்டலத்தில் சோக அலைகள் ஊர்ந்து கொண்டிருந்தன. சாமிப் படத்தின் முன் எரிந்து கொண்டிருந்த சாம்பிராணிக் குச்சு அழுதழுது எரிந்து கொண்டிருந்தது. லாவண்யா சுமணாவை ஏற்றுக் கொள்ள மாட்டாள் ஆனால் ஏற்றுக் கொள்ள வைக்கவேண்டும் என்று தினகரன் மனதுள் நினைத்துக் கொண்டான். பக்கத்து வீட்டுப் பவளமக்கா சாப்பாடு கொண்டு வந்திருந்தாள். சாப்பாட்டை வாங்கி வைத்துவிட்டு முதலில் மகாலிங்கம் மாஸ்டரை முதலில் எழுப்பினான். அவர் மெதுவாகக் கண் விழித்தார். நிரம்பக் கலங்கி விட்டார். அவரைப் பார்க்கத் தினகரனாலேயே தாங்க முடியவில்லை. சிறிது சாப்பிடும்படி அவரைக் கேட்டான். அவர் மறுத்துவிட்டார். லாவண்யாவை எழுப்பிக் கேட்டான். மறுத்து விட்டாள். எழும்பியவள் ஏகாந்தமாக எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் கிஞ்சித்தும் சோகம் இல்லை. தினகரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவள் சாப்பிடச் சம்மதிக்கவேயில்லை. சாப்பாட்டை எடுத்துக் கொண்டு சுமணாவிடம் சென்றான். சுமணா கண்களில் நீர் வழிய இருந்தாள். அவளுடைய பார்வையில் ஒரு வெறுமை இருந்தது. கணவனைக் கண் முன்னால் கொலை செய்யும் போது எதுவுமே செய்ய முடியாதிருந்தவள். தகப்பனைத்

தானே வெட்டிக் கொன்றவள். இப்போ தங்குமிடமின்றி இவர்களையே நாடி வந்து வேதனையோடு இருக்கிறாள். எவ்வளவு துன்பமான விதி இவளுக்கு! அவள் சாப்பாட்டை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தினகரன் எவ்வளவோ நயமாகச் சொல்லிப் பார்த்தான். எதுவுமே பயனற்றுப் போய்விட்டது. அன்று அந்த வீட்டில் எவருமே சாப்பிடவில்லை. சாப்பாடு உறக்கம் இரண்டுமே இருக்கவில்லை!

பொழுது விடிய விடிய தினகரன் கலங்கிக் கொண்டிருந்தான். லாவண்யாவின் குணம் அவனுக்குத் தெரியும்! அவள் பழையவளாகவும் இப்போது இல்லை. நிரம்பத் தீவிரத்தன்மை கொண்டிருந்தாள். அவளுக்கும் தீவிரவாத சக்திகளுக்கும் தொடர்பிருப்பதாக எண்ணினான். இப்போ நடந்த நிகழ்ச்சி அவளின் தீவிரத் தன்மையை மேலும் மேலும் அதிகரிக்கப் போகிறது. சுமணாவை இப்போ என்ன செய்வது,? எவ்வளவு துயரமான சம்பவம்! தன்னினத்தையும் துறந்து விட்டாள். அண்டவந்த இனத்திலும் நிலமை வேதனைக்குரியதாக இருக்கிறது. அறைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். லாவண்யா எழும்பியிருந்தாள். மகாலிங்கத்தாரும் எழும்பியிருந்தார். மெதுவாக அவர்களுக்குக் கிட்டப் போனான். அவனை ஏறெடுத்துப் பார்த்த லாவண்யா

“எங்கை அவள்?” என்று கத்தினாள். அவளுடைய கத்தலின் வெம்மை தினகரனையே சுட்டதென்றால் சுமணா எந்த மட்டில்? எதற்குமே கலங்காத நெஞ்சுரம் கொண்ட தினகரன்

எதுவுமே விளங்காதவன்போல் "ஆர்" என்று கேட்டான். அவனை எரித்து விடுவது போல் பார்த்துவிட்டு "அவள்தான் அந்தச் சிங்களத்தி" நறுக்குத் தெரித்தாற்போல் வார்த்தைகள் குத்தின. என்ன அநாகரிகமான வார்த்தைகள்.! இப்போ தான் வந்த பெண்ணைப் பற்றிய விபரங்கள் மகாலிங்கத்தாருக்குப் புரிந்தது.

"அவள் இஞ்சை இருக்கக் கூடாது" என்று கத்தினாள். மகாலிங்கத்தாரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தினகரன் மகாலிங்கத்தாரைக் கூட்டிக் கொண்டு போய் நடந்தவற்றை விளக்கினான்.

"புருசனையும் இழந்து புருசனுக்காகத் தகப்பனையே கொலை செய்து அநாதரவாய் எங்களை மதிச்சு வந்திருக்கிற பெண்ணை நாங்களும் மதிக்கத்தானே மாஸ்டர் வேணும்" என்று தினகரன் கேட்டவிதம் மகாலிங்கத்தாரின் மனதை இளக வைத்துவிட்டது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் அவன் எதிர்பார்த்திருந்தான். அது உடனடியாக வந்தபோது மனசு கொள்ள மகிழ்ந்தான். இனி அடுத்த கட்டமாக அவரை உஷார்ப்படுத்தினான்.

"இந்தச் சந்தர்ப்பத்திலை நீங்கள் கொஞ்சம் உசாராய் நிண்டால் காரியம் கையை மிஞ்சாது. இல்லாட்டில் ஊர் சிரிக்கும்" என்று பக்குவமாகச் சொன்னான். "நீ பயப்பிடாதை தம்பி நான் எல்லாம் பார்க்கிறன்" என்று கூறிவிட்டு உள்ளே வந்தவர்... "பிள்ளை சுமணா..." என்று கூப்பிட்டார். லாவண்யா திடுக்கிட்டுப்போய் அவரைப் பார்த்தாள். "அப்பா..." என்று கத்தினாள்.

"நீ பேசாமலிரு எனக்கெல்லாம் தெரியும். தலையிருக்க வால் ஆடக்கூடாது" என்றார். இப்போ லாவண்யாவின் கோபம் தினகரன் மேல் திரும்பியது.

"ஓ...! எல்லாம் உம்மடை வேலையோ!" என்று அவன்மேல் பாய "பொத்தடி வாய்...உனக்கு நல்லாய் வாய் நீளுது..." என்று கூறியவாறு பாய்ந்து அவளின் கன்னத்தில் ஐந்து விரல்களையும் பதித்தார் மகாலிங்கத்தார். இதைத் தினகரனும் எதிர்பார்க்க வில்லை. ஏன் லாவண்யாவும் எதிர்பார்க்கவில்லை. லாவண்யா பதறிப்போனாள். தினகரன் மேலும் அது தொடராமல் அவரைப் பிடித்தான். எவ்வளவு காலத்திற்குப் பிறகு தகப்பன் அவளுக்கு அடித்திருக்கிறார். அவள் மேற் கொண்டு எதுவும் கதைக்கவில்லை. சட்டென்று எழும்பித் தன்னுடைய அறைக்குள் சென்று கதவைப் படாரென்று அடித்தச் சாத்தினாள். அறைக்குள் சென்ற அவள் ஏதும் செய்துவிடுவாளோ என்று மகாலிங்கத்தார் கலங்கினார். அவள் அவ்வளவு கோழையல்ல என்று குறிப்பால் உணர்த்தினான் தினகரன். ஒரு பெரிய சிக்கலை ஓரளவு முடிவுக்குக் கொண்டு வந்த நிம்மதியில் தன் அறையை எட்டிப் பார்த்தான். சுமணா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மகாலிங்கத்தார் கூப்பிட்டபோது அவள் வராமல் உறங்கிக்கொண்டிருந்ததும் நல்லதாகப் போயிற்று என்று மனதுள் நினைத்துக்கொண்டு தன் அலுவல்களைக் கவனிக்கத் தயாரானான் தினகரன்.

# இருபத்து ஐந்து

அச்சகத்துக்குச்சென்று பத்திரிகைக்கான விடயதானங்களைக் கொடுத்து விட்டு பஸ் நிலையத்துக்கு வந்தான் தினகரன். யாழ்ப்பாண பஸ்வர இன்னும் அரைமணித்தியாலம் இருந்தது. சுமணாவைப் பற்றிய சிந்தனைகள் அவன் மனதில் அலை பாய்ந்து கொண்டிருந்தது. எவ்வளவு துணிவான பெண்! துணிந்து வந்திருக்கிறாளே என்பதை நினைக்கும்போது உடலெல்லாம் சிலிர்த்தது. சந்தியிலுள்ள புத்தகக் கடைக்குச் சென்று பத்திரிகை ஒன்றை வாங்கி வந்து பஸ் நிலையக் கம்பியில் சாய்ந்த வண்ணம் படித்தான். பத்திரிகையில் கொழும்பு

நிலவரம் பந்தி பந்தியாக இருந்தது. ஆயிரக்கணக்கான அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் விரைவில் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அரசாங்க அறிக்கை கூறியது. வெளிநாடுகள் அரசைக் கண்டித்திருப்பதாயும், இதன் பொருட்டு இந்திய வெளி நாட்டமைச்சர் நாளை வருவார் என்றுமிருந்தது. இவற்றை வாசிக்கும் போது என்னவோ போலிருந்தது. சொந்த நாட்டிலேயே அந்த நாட்டுப் பிரஜை அகதியாக நேர்ந்த கோலத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. பத்திரிகையை மூடிவிட்டுப் பஸ்வரும் திசையில் பார்வையைச் செலுத்தினான். ஆடி அசைந்து குலுங்கி இ. போ. ச பஸ் வந்து கொண்டிருந்தது. பஸ்ஸில் ஏறிக் கொண்டவனது மனது மட்டும் அழுது கொண்டிருந்தது. யன்னலூடாக வெளியைப் பார்த்தான். பச்சைப் பசேல் என்ற மரங்கள். அழகான குடிசைகள். ரம்மியமாக இருக்கும் இந்த இயற்கைக் காட்சிகளை ரசிக்க அவனால் முடியவில்லை. மனம் போராடிக் கொண்டிருந்தது. "யாழ்ப்பாணம்" என்ற கொண்டக்டரின் குரல்கேட்டுத் திடுக்கிட்ட தினகரன் பஸ்சை விட்டு இறங்கிக் கொண்டான். இறங்கியவன் நேராகக் கஸ்தூரியார் வீதியால் சென்று வின்சர் தியேட்டரையும் தாண்டிச் சாந்தா வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். வீதியில் போவோர் வருவோரெல்லாம் கொழும்பைப் பற்றியே கதைத்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் சோகம் தன்னிச்சையாக இடம் பிடித்திருந்தது. அவன் சாந்தா வீட்டுக்கு வந்து கதவைத் தட்டும் போது நேரம் பத்து

மணியாகி இருந்தது. அவன்

கதவைத் தட்டிய போது சாந்தாவின் தாத்தா தான் கதவைத் திறந்தார்.

"தம்பியா என்ன இந்தப் பக்கம்?"

"ரவுணுக்கு வந்தாப்போலை உங்களையும் பார்த்துப் போகலாமெண்டு..." இது அப்பட்டமான பொய். அவன் வந்ததே சாந்தாவைப் பாக்கத்தான். ஏதோ ஒரு குற்ற உணர்வு உண்மையைச் சொல்வதைத் தடுத்து விட்டது.

"சாந்தா தினகரன் தம்பி வந்திருக்கிறார்" என்று குரல் கொடுத்தார் தாத்தா. சமையலறையில் அலுவலாக இருந்த சாந்தா வெளியில் வந்தாள். அவனைக்கண்டு மெல்லிய புன் சிரிப்பை உதிர்த்து விட்டு அருகில் கதிரையில் அமர்ந்தாள்.

"உங்கடை கவிதை கிடைச்சுது"

"நல்லமா... பிடிச்சுதா?"

"ம்... நல்லாயிருக்குது"

"இன்னும் நாலைஞ்சு எழுதி வைச்சிருக்கிறேன்"

"அப்ப மணியோசைக்கு எழுத்துப் பஞ்சமில்லை"

"கருத்து உங்களுக்குப் பிடிச்சுதா?"

"இன்றைய சூழ்நிலையைப் புதிய கோணத்திலை பார்க்கிறியள்". "மணியோசை எப்ப வருகுது"

"அநேகமாய் இன்னும் பத்து நாளிலை வரும்"

"மறக்காமல் எனக்கொண்டு அனுப்பி வையுங்கோ" என்று கூறிவிட்டு தேநீர் போடக் குசினிக்குள் போனாள். தனிமை. கண்களைச் சுழல விட்டான். சிறிய வீடாக இருந்தாலும்

அழகாக இருந்தது. மேசையின் மீது ஒரு புத்தகம் இருந்தது. மெதுவாக எழும்பிப் போய் அதனை எடுத்துப் பார்த்தான். கலை இலக்கியம் பற்றிய யெனான் கருத்தரங்கு என்றிருந்தது. அவனுக்கு வியப்பாகவும் அதிசயமாகவும் இருந்தது. இதையெல்லாம் இவள் படிக்கிறாளா? அவன் புத்தகத்தை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வந்த சாந்தா தேநீரை அவன் கையில் கொடுத்து விட்டு,

“எனக்கு இலக்கியத்தில் யாதார்த்தத் தன்மையை உருவாக்கியதே இந்தப் புத்தகம் தான். எந்தப் பிரச்சனையையும் கூர்மையாகப் பார்த்துத் தெளிவடைய எனக்குப் பல வழிகளிலை இந்தப் புத்தகம் உதவி இருக்குது” அவள் இப்படித் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கும்போது அவளையே வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான் தினகரன். “என்னை விடத் தீவிரமாகவும் புத்திசாலியாகவும் இருக்கிறியள்” என்றான் தினகரன். “எனக்கிந்தத் தீவிரவாதம் என்ற சொல்லுப் பிடிக்காது”

“சரியானதைப் படிக்கிறன் சரியானதை எழுதிறன். சரியான–வர்களோடை தொடர்பு கொள்ளிறன். இதை ஏன் தீவிரம் என்று சொல்லிறியள்” தினகரன் வாயடைத்துப் போயிருந்தான். எவ்வளவு தெளிவான வசனங்கள். “அதெப்படிச் சொல்லிற–யிள். சாதாரண நிலையிலை நீங்கள் சொல்கிற மாதிரி ஒருவரும் இருக்கிறதில்லையே.”

“சாதாரண நிலைக்கு அடுத்த அசாதாரணம் தீவிரம் தானே”

"இல்லையே! சாதாரண நிலையிலிருந்து சிறப்பு நிலைக்கு வந்திருக்கிறேனேயொழிய சாதாரண நிலையை மறுத்து முரணாக எதிர் நிலைக்குப் போகவில்லையே. அப்பபடிப் போயிருந்தால் தீவிரம் என்று சொல்லலாம்" என்று அவள் கூறியபோது அடுத்து என்ன கூறுவதென்று அவனுக்குப் புரியவில்லை. அவனுடைய இந்தத் தர்மசங்கடமான நிலையை அவள் ரசித்தாள். அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு

"எங்க தாத்தாவைக் காணவில்லை" என்று கதையை மாற்றினான். அவள் சிரித்துக்கொண்டே

"சரி கதையை விடுவம். என்ன விசயம் வந்தனீங்கள்" என்று கேட்டாள்.

"இல்லை....நான் வேறை அலுவலாய் ரவுணுக்கு வந்தனான். அதாலை உங்களையும் பார்த்துப் போகலாமெண்டுதான்."

"எனக்கெண்டால் அப்பிடிப்படேல்லை"

"நீங்கள் தாத்தாவோடை இருக்கிறியள்.....உங்கடை அப்பா...அம்மா..."

"அது பெரிய கதை" என்று பெருமூச்சுவிட்டுவிட்டு

"உங்களுக்குச் சொன்னாலென்ன. அம்மாவும் அப்பாவும் 77ஆம் ஆண்டுக் கலவரத்திலை பரலோகம் போயிட்டினம். அப்ப நாங்கள் பதுளையிலை இருந்தம். ஒரு நாள் இரவு திடீரென நுழைஞ்ச சிங்களக் காடையன்கள் வீட்டையும் கொள்ளையடிச்சு அப்பாவை வெட்டிப்போட்டு அம்மாவைத் தூக்கிக் கொண்டு போட்டான்கள். நானும் தம்பியும் கட்டிலுக்குக் கீழைபோய் ஒழிச்சதாலை தப்பினம். இண்டு

வரைக்கும் அம்மாவைப்பற்றி ஒரு தகவலுமில்லை."
அவள் சொல்லி முடித்துவிட்டு அழுதாள். தினகரன் திடுக்கிட்டுச் சிலைபோல இருந்தான். இந்த அழகான சிலைக்குள் இத்தனை துன்பங்களா!
மனங்கலங்கினான். இனித்தானிருப்பது அவர்களை மேலும் துன்பப்படுத்தும் என்பதால் மெதுவாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

# இருபத்தாறு

தினகரன் யாழ்ப்பாணம் போய் விட்டு வந்தபோது சுமணா அவனுடைய அறையில் இருக்கவில்லை. அவனுக்குத் திக்கென்றிருந்தது. வெளியில் மகாலிங்கத்தாரைக் கேட்க வாயை உன்ன, அவரே

"சுமணாவிற்குப் பின்பக்க அறையைக் குடுத்திருக்கிறன் தம்பி" என்றார். அவனுக்கு நிம்மதியாக இருந்தது. அப்போது அவசர அவசரமாக உள்ளே நுழைந்தாள் லாவண்யா. அவளுடைய கையில் சில அச்சடிக்கப்பட்ட போஸ்டர்கள் இருந்ததைத் தினகரனின் கண்கள் கவனித்தாலும் கவனியாதது போல

"என்ன லாவண்யா எப்பிடிச் சுகம்,?" என்றான். அவள்

பதிலேதும் கூறாது அவனை முறாய்த்துப் பார்த்துவிட்டு அறைக்குள் போய்விட்டாள். அவளுடைய கையில் இருந்த போஸ்டர்களைக் கொண்டு அவளுக்கும் தீவிரவாதக் குழுவுக்கும் தொடர்பு உண்டாகிவிட்டது என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

அவன் தன்னுடைய அறைக்குப் போகத் திரும்ப சுமணா அறையை விட்டு வெளியே வந்தாள்.

“எப்பிடி இருக்கிறியள்.?” என்று தினகரன் கேட்க,

“இருக்கிறன்” என்றவாறே கதிரை ஒன்றில் அமர்ந்தாள்.

தினகரனும் கதிரையில் இருக்கச் சிறிது நேரம் அமைதியாக இருவரும் இருந்தனர்.

“நீங்கள் நல்லாய் தமிழ் கதைக்கிறியள்” என்று அமைதிை-யக் கிழித்தது தினகரனின் குரல்.

“நாய்க்கு வேஷம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும்”

“ஆர் உங்களுக்குத் தமிழ் படிப்பிச்சது”

“அவர் தான்” சுதந்திரனின் நினைவு வந்து சிறிது நேரம் முகட்டைப் பார்த்தபடி இருந்தாள்.

“நீங்கள் துணிஞ்சனீங்கள்”

“ஒரு பெண்ணுக்குத் துணிச்சல் இல்லாவிட்டால் இந்தச் சமூகத்திலை வாழ ஏலாது”

“உண்மைதான். லாவண்யாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கி

றியள்?” இப்படி தினகரன் கேட்கும் போது அறைக்குள் ளிருந்தபடி இவர்களின் உரையாடலை செவிமடுத்துக் கொண்டிருந்த லாவண்யா உசாரானாள்.

"என்ன நினைக்கிறது. ஒரு அப்பாவிப் பெண். அவவின்ரை நிலைமையிலை நான் இருந்தாலும் அப்பிடித்தான் நடப்பன். ஒன்று அவள் சகோதரனை இழந்த கோபம். மற்றது இண்டைக்கு எதிரும் புதிருமாக மாறிக் கொண்டிருக்கிற சமூகத்தைச் சேர்ந்தவள் என்பதாலை இருக்கலாம்"

"நீங்கள் பெருந்தன்மையாய் கதைக்கிறியள். லாவண்யாவை யிட்டு உங்களுக்குக் கோபம் இருந்தால் எனக்காக அவளை மன்னிச்சுக் கொள்ளுங்கோ"

"இது என்ன? யாரை யார் மன்னிக்கிறது. ஏன் லாவண்யா எனக்கென்ன செய்தவ? ஒரு சாதாரண பெண்ணாக நடந்து கொண்டா. என்னைக் கொறகொறவென்று இழுத்துப் போய் றோட்டிலை விட்டவவா? இல்லையே! இதிலிருந்து அவவின்ரை மனது முழுசாய் வெறுக்கயில்லை எண்டு தானே அர்த்தம்" சுமனாவின் இந்த வசனங்கள் லாவண்யாவை அதிர்ச்சிக் குள்ளாக்கின.

தினகரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் சந்திக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு கோணத்தில் நிற்பதை நினைத்தபோது மிகமிக ஆச்சரியப்பட்டான். சிறிது நேரம் இருவரும் கதைக்கவில்லை.

"கொழும்பிலை நிலவரம் சரியான மோசமாகுது" என்றான் தினகரன்.

"அரசாங்கம் தன்ரை சுய நலத்துக்காக இதைச் செய்யுது. ஆனால் இதனாலை அரசாங்கம் தான் பெருங் கஷ்டப்படப்போகுது. எங்கடை பெடியளுக்கும்

தேவையில்லாத வேலை. சினிமாப்படங்களைப் பார்த்துவிட்டு ஸ்ரண்ட் விளையாட்டு விளையாடுகினம். கஷ்டப்படுகிறதும் சாகிறதும் சனங்கள் தானே" என்று தினகரன் சொன்ன போது அறைக்குள்ளிருந்த லாவண்யா பற்களை நறநற வென்று கடித்தாள்.

"உங்கடை பார்வை சரியான பிழை. உங்கடை இளைஞர்களைப் பொறுத்தவரை ஆயிரம் பிரச்சனைகள். எந்த அரசும் அவயின்ரை பிரச்சனையை தீர்த்து வைக்கவில்லை. சிவப்பு கட்சிகள் பிரச்சனைகளை இனங் கண்டு வெறும் கோஷங்களை எழுப்பிச்சினமேயொழிய நடைமுறையிலை எந்தத் தீர்வையும் வைக்கவில்லை. இந்த நிலையிலை விரக்தி அடைந்த இளைஞர் தங்கடை கையிலை ஆயுதத்தைத் தூக்கிச்சினம். இப்பத்தானே தொடங்கியிருக்கினம் போகப் போகத்தானே தெரியும். சும்மா ஸ்ரண்ட் விளையாட்டென்று அவையின்ரை போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாதையும்" சுமணா இப்படிக் கதைப்பாள் என்று தினகரன் கனவிலும் நினைக்கவில்லை. உள்ளுக்குள்ளிருந்த லாவண்யாவிற்கும் ஆச்சரியமாக இருந்தது. சுமணா இன்னும் தொடர்ந்தாள்.

"ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படும்போது அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் அவன் உரிமை. இதற்கெதிராக எதிராளி ஆயுதத்தைத் தூக்கினால் அவனும் ஆயுதத்தைத் தூக்கவேண்டியது தவிர்க்க முடியாத கட்டாயம் தானே. சுதந்திரனோடை கதைக்கேக்கை யாழ்ப்பாண

இளஞர்களின்ரை நடவடிக்கைகளை நான் வெறுத் திருக்கிறன். ஆனால் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கேக்கை அவை செய்யிறது பிழை மாதிரி எனக்குத் தெரியேல்லை"

சுமணா இப்படிச் சொல்லச் சொல்ல அறையுள்ளிருந்த லாவண்யா சிலையாகிப் போனாள்.

சுமணாமீதிருந்த வெறுப்பு அனுதாபமாக மாறத் தொடங்கியிருந்தது. அப்போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. தினகரன் அருகே போய் விசாரிக்க லாவண்யாவைப் பார்க்க வந்ததிருப்பதாகக் கூறினான். தினகரன் அவனை மேலுங் கீழுமாகப் பார்த்து விட்டு உள்ளே வந்து லாவண்யாவிற்கு அறிவித்தான். வெளியே வந்த லாவண்யா எட்டிப் பார்த்து அவனை உள்ளே அழைத்தாள். உள்ளே வந்தவனுக்கு ஒரே திகைப்பு. சுமணாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. இருவரும் ஒரே சமயத்தில் "நீங்களா?" என்றார்கள்.

தினகரனும் லாவண்யாவும் ஆளை ஆள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டனர். தினகரனும் லாவண்யாவும் திகைத்துப்போய் நிற்பதைப் பார்த்துத் தான் அந்த இளைஞனை, அகதி முகாமில் சந்தித்ததையும் பின்பு புகையிரதத்தில் சந்தித்ததையும் கூறினாள் சுமணா. ஆனால் தினகரன் லாவண்யாவைப் பார்த்து

"இந்த நண்பர் யார் என்று சொல்லவில்லையே? என்று கேட்டான்" லாவண்யா உடனே பதில் கூறாமல் சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். பின்பு என்ன நினைத்தாளோ

தெரியாது,

“இவர் எங்கடை பிரச்சார பிரிவைச் சேர்ந்தவர்” முதல் முறையாகத் தன்னுடைய சமீபகால நடவடிக்கை சம்பந்தமான ஒரு செய்தியை பகிரங்கப்படுத்தி இருந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்த மாதிரி யாரும் அதிர்ச்சி அடையவில்லை. மாறாக “நான் உன் நடவடிக்கைகளைக் கொண்டே ஊகித்திட்டன். ஆனால் உன் வாயால் இதைச் சொல்லத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டனான்” என்று தினகரன் கூறினான். லாவண்யா எதுவும் கூறவில்லை. லாவண்யாவின் இரண்டு விழிகளும் ஒரு தடவை தினகரனின் விழிகளைச் சந்தித்துத் திரும்பின. லாவண்யா தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தேநீர் போடவா? என்று கேட்டுவிட்டு சுமணாவைப் பார்த்து “அண்ணி உங்களுக்கும் போடவா?” என்று கேட்டாள். இவள் இப்படிக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிய சுமணாவுக்கு ஆயிரம் மின்னல்கள் ஒரே நேரத்தில் தன்னைத் தாக்கியது போலிருந்தது. தினகரனுக்கு விண்ணில் பறக்காத குறை. லாவண்யா புன் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டுக் குசினிக்குள் போய்விட்டாள். தேநீரைக் குடித்து விட்டு நாட்டுப் பிரச்சனைபற்றி நால்வரும் காரசாரமாக விவாதித்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது. அந்த இளைஞன் லாவண்யாவிடம் எதையோ கொடுத்து விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான். தினகரனும் தன் அறைக்குப் போனான். சுமணா சிறிது நேரம் இருந்து விட்டுப் போய்ப் படுத்தாள். லாவண்யா மட்டும் தனியே இருந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

# இருபத்தேழு

காலை பொலபொலவென்று விடிந்தது. இரவு முழுவதும் சுதந்திரனுக்கு நித்திரையில்லை. தீவிரவாத இயக்கம் ஒன்றுடன் லாவண்யா தொடர்பு வைத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. மனசுக்குப் பிடித்தவளாக அவள் இருந்தபோதும் கொள்கையில் எதிரும் புதிருமாக இருக்கிறாளே என்று மனம் குழம்பினான். எப்பிடி முடிவெடுப்பதென்று அவனுக்குப் புரியவில்லை. படுக்கையில் இருந்தபடியே முகட்டைப் பார்த்த வண்ணம் சிந்தித்துக் கொண்டிருந்தான் தினகரன். சில நாட்களாகவே அவனுடைய மனம் அவனையறியாமல் லாவண்யாவையும் சாந்தாவையும்

ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்திருந்தது. தபால்காரன் மணியடிக்கும் சத்தம் கேட்டது. யன்னலூடாக எட்டிப் பார்த்தான். லாவண்யா கடிதங்களை வாங்கிக் கொண்டிருந்தாள். தினகரன் அறைக்கு வெளியே வந்தான். லாவண்யா அவனை நிமிர்ந்து பார்க்கத் திராணியில்லாதவள் போல் பார்த்து அவன் கடிதங்களைக் கொடுத்தாள். கடிதம் ஒன்று சாந்தாவிடமிருந்து வந்திருந்தது. லாவண்யாவிற்கு ஜெர்மனியிலிருந்து சடகோபன் எழுதியிருந்தான். சடகோபனுடைய கடிதத்தில் சுதந்திரனையும், சுமணாவை யும்பற்றி விசாரித்து எழுதியிருந்தான். சுதந்திரனைப்பற்றி அவன் விசாரித்த விதம் அவள் கண்களில் கண்ணீரைத் தோற்றியது. கண்களைக் கசக்கிக் கொண்டு தொடர்ந்து வாசித்தாள். சுமாணாவைப்பற்றி அவன் எழுதியிருந்த வசனங்கள் அவளின் கோபத்தீயை மேலும் அணைத்தன. இப்படி அவள் வாசித்துக் கொண்டிருக்கும் போது சுமணா வெளியில் வந்தாள். மகாலிங்கத்தாரும் நுழைந்து கொண்டிருந்தார். மகாலிங்கத்தார் நுழைந்ததை லாவண்யா கவனிக்கவில்லை.

“உங்களைப் பற்றித் தம்பி கடிதம் எழுதியிருக்கிறான்” லாவண்யா சுமணாவைப் பார்த்துச் சொன்ன போது, சுமணா திகைத்து விட்டாள் என்றாலும் சமாளித்துக் கொண்டு

“ஆர் சடகோபனே?” என்று சாதாரணமாகக் கேட்டாள். வந்து கொண்டிருந்த மகாலிங்கத்தாருக்கு இந்த உரையாடல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் கனவிலும் லாவண்யாவின் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை.

அதைக் காணாத மாதிரி,
"பிள்ளை ஆற்றை கடிதம்?" என்றார்.
"தம்பி கடிதம் போட்டிருக்கிறான். ஜேர்மனியிலை சரியான குளிராம்" என்று கூறி முடிக்கும் முன் கடிதத்தைத் தன் கையில் வாங்கி விட்டார் மகாலிங்கத்தார்.
இந்த நேரம் பார்த்துத் தினகரனும் வெளியில் வந்தான். அவனை எதிர் கொள்ள முடியாமலோ என்னவோ அவன் வந்ததும் உள்ளே போய் விட்டாள். தினகரன் ஒரு புன் சிரிப்புடன் வந்து
"என்ன மாஸ்டர் மகனின்ரை கடிதத்திலை என்ன சொல்லியி ருக்கிறான்" என்று சூழ்நிலையை மாற்றினான். தினகரன் வந்ததும் லாவண்யா சென்றதைச் சுமணா அவதானிக்கத்தான் செய்தாள். பின்பு தினகரன் இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டான். தினகரன் போனதும் வெளியில் வந்த லாவண்யா ஹோலில் உள்ள கதிரையில் அமர்ந்தாள். அமைதியாக அவளுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள் சுமணா. "உங்களுக்கு என் மேலை கோபமா?" என்று கேட்டாள் லாவண்யா.
"ஏன்?"
"நீங்கள் வந்தவுடனேயே ஆத்திரத்திலை சரியாய் கத்திப் போட்டன்" நான் இப்பிடித்தான் சரியான அவசரக்காரி. எனக்குச் சரியான முன்கோபம். எதையும் யோசிக்க மாட்டன். படபட வென்று பேசிப் போடுவன். பின்னுக்கு முன்னுக்கு வாறதைப்பற்றி யோசிக்கிறதேயில்லை. நான் சின்னனிலை யிருந்து இப்படித்தான். என்னை மாற்றவேணுமெண்டுதான்

யோசிக்கிறன். முடியேல்லை. எனக்குச் சிங்களவரென்றால் வெறுப்பு. அண்ணாவின்ரை சாவுக்கு நீங்கள் தான் காரணம் எண்டு நினைச்சுட் போட்டன். நீங்கள் நேற்றுத் தினகரனோடை இருந்து கதைக்கேக்கை தான் உங்கடை நிலமை புரிஞ்சுது" என்று மூச்சுவிடாமல் தன்னைத்தானே விமர்சனம் செய்தாள் லாவண்யா. சுமணாவுக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"நான் ஒண்டும் கோபிக்கேல்லை. ஆனால் சிங்களவரெல்லாரையும் ஏன் எதிர்க்கிறீர் எண்டு தான் எனக்குப் புரியேல்லை. நான் விளங்கிக் கொண்டளவு உமக்கும் தீவிரவாத இயக்கத்துக்கும் தொடர்பு இருக்கெண்டுதான் நினைக்கிறன் சரிதானே"

"நான் உள்ளுக்கை இன்னும் போகேல்லை. வெளியிலை பிரச்சாரப் பிரிவிலை இருக்கிறன்... உங்களை நம்பித்தான் இதைச் சொல்லிறன். நான் இப்படிச் சொல்லிறது கூடாது"

"நீர் பயப்பிடாதையும். நான் எண்டைக்கு உங்கடை அண்ணனைக் கலியாணம் கட்டினனோ அண்டைக்கே நான் உங்களிலை ஒருத்தி. உங்களை நினைக்க எனக்குப் பெருமையாயிருக்குது. உரிமைக்காக நீங்கள் போராடுறது சரி. ஆனால் முழுச் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடக் கூடாது. எப்பவும் சிறுபான்மை மக்களின்ரை போராட்டம் பெரும்பான்மை மக்களின்ரை ஆதரவோடுதான் வெல்லும். இது வரலாறு. போராட்டம் அரசுக்கெதிராக இருக்கவேணுமேயொழிய மக்களுக் கெதிரானதாக இருக்கக்கூடாது" என்றாள் சுமணா.

அவள் சொல்வதையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த லாவண்யா வியப்பு மிகுதியில் மேலும் என்ன பேசுவதென்றறியாமல் முழித்தாள்.

“நீங்கள் பிரச்சாரக் குழுவிலை என்ன செய்யிறியள்?” சுமணா லாவண்யாவிடம் கேட்டாள்.

“மக்களுக்கு எங்கடை போராட்டத்தைப்பற்றிக் கூறி விழிப்புணர்வை எற்படுத்தப் போகிறோம்”

“இண்டைக்கு இதுதான் தேவை. ஆயுத பாவனையைக் குறைச்சு அதை வெறும் தற் பாதுகாப்புக்காக மட்டும் வைச்சுக் கொண்டு முழுத் தமிழ் மக்களையும் அரசுக்கெதிரான போராட்டத்துக்கு வழி நடத்தவேணும்.”

“நீங்கள் என்ன கொம்யூனிஸ்டா? அவையின்ரை பாணியிலை கதைக்கிறியள்”

“இல்லையே எனக்குக் கொம்னியூஸ்ட் என்று சொல்லித் திரியிறவையைப் பிடிக்காது. இவர்கள் சரியான முற்போக்கு முலாம் பூசிய பிற்போக்கு வாதிகள். மக்களைப் பேசவும் விடமாட்டினம். அதே நேரம் தத்துவத்தையும் சரியாய் சொல்லிக் குடுக்க மாட்டினம்”

“இது உண்மைதான். இவர் தினகரனும் உப்பிடித்தான் போராட்டத்தை முழுத் தவறு என்று மட்டும் சொல்லிப் போட்டுத் தீர்வு எதையும் கூறாமல் மழுப்புவார். உங்களுக்குக் கனக்க விசயம் தெரியுது. எங்களோடை நீங்களும் சேர்ந்தால் நல்லது தானே” என்றாள் லாவண்யா.

“பார்ப்பம்” என்று மழுப்பிவிட்டாள், சுமணா,

அப்போது கதவு தட்டிச் சத்தங் கேட்டது. லாவண்யா போய் எட்டிப் பார்த்தாள். யாரோ ஒரு பெண் வாசலில் நிற்பது தெரிந்தது. லாவண்யா போய்க் கூட்டி வந்தாள்.

"நான் சாந்தா. தினகரன் நிற்கிறாரோ?"

"இல்லை. இருங்கோ வந்திடுவார்"

"நீங்கள் தான் லாவண்யாவே?"

"ஓம்"

"உங்களைப்பற்றி அடிக்கடி கதைக்கிறவர்"

"அடிக்கடி அங்கை வாறவரோ?"

"யாழ்ப்பாணம் வந்தால் வீட்டையும் வருவார்"

"அவ எங்கடை அண்ணி அவவிடை பெயர்..."

" தெரியும் சுமணா"

"பிறகென்ன எல்லாம் தெரியுது"

"ஹலோ" என்று சுமணாவைப் பார்த்துக் கூறினாள். பதிலுக்கு சுமணா அவளைப் பார்த்துப் புன்சிரிப்பொன்றை உதிர்த்தாள். இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது தினகரன் உள்ளே நுழைந்தான். பத்திரிகை அலுவலாக வெளியில் சென்ற தினகரன் வீட்டுக்கு வந்தபோது சாந்தா வந்திருப்பதையும் அவளுடன் லாவண்யாவும் சுமணாவும் கதைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்து அதிசயப் பட்டாலும் கவனியாதது போல் அவர்களுடன் வந்து கலந்து கொண்டான். தேநீரோடு வெளியில் வந்த லாவண்யா, தினகரனும் வந்திருப்பதைப் பார்த்துத் தன்னுடைய தேநீரை அவனுக்குக் கொடுத்தாள்.

"அகதிகள் முகாமிலை இருக்கிற சனங்களெல்லாம் கப்பலிலை வருகினம்" என்று கூறினான் தினகரன்.

"சொந்த நாட்டுப் பிரசை தன் நாட்டிலே அகதியாகி யாழ்ப்பாணம் வருவதென்றால் சரியான வெட்கமான விசயம்" என்று சுமணா சொன்னாள்.

"அதைவிடச் சிரிப்பு இன்னொரு. நாட்டுக்குப் பாதுகாப்புத் தேடி அனுப்புறது மாதிரி யாழ்ப்பாணம் அனுப்புறது அவையே நாட்டை இரண்டாய்ப் பிரிக்கிற மாதிரி இருக்கு"

"சாந்தா இதிலையிருந்து என்ன தெரியுது? தமிழனுக்கு கட்டாயம் ஒரு நாடு தேவை. இல்லையெண்டால் அவன் உயிர் வாழ முடியாது. முந்தி எனக்கு இதிலை உடன்பாடில்லை. ஆனால், இவ்வளவும் நடந்தாப் போலை எந்த ஒரு இனமும் தான் வாழத் தனக்கென்றொரு இடத்தைத் தேடவேணும் இல்லையெண்டால் தான் இருக்கிற இடத்திலை முழு உரிமையோடு வாழவேணும். ஆனால், உலகத்தின்ரை இன்றைய நிலையில சிறுபான்மை இனங்கள் மேற்கூறிய இரண்டுக்காகவும் போராடவேண்டிய கால கட்டம் தான் வாய்த்திருக்கு" என்றாள் சுமணா.

சுமணாவின் பார்வைகள் மிகமிக வித்தியாசமாக இருந்தன.

"என்னைப் பொறுத்தவரை தனிநாட்டுக் கோரிக்கை அர்த்தமில்லாதது. அது ஒரு கற்பனைக் கூத்து" என்று தினகரன் சொல்ல அதைச் சாந்தாவும் ஆமோதித்தாள்.

"நீங்கள் இரண்டு பேரும் யதார்த்தமாய்ப் பிரச்சினையைச் சிந்திக்காமல் சீனாவிலை பெய்யிற மழைக்குச் சிலோனிலை

குடைபிடிக்கிறவை மாதிரிக் கதைக்கிறியள்" என்று லாவண்யா சீறி விழுந்தாள். பேச்சு வேறு திசையில் அனலாக மாறுவதையுணர்ந்த சுமண்ா, லாவண்யாவை அடக்கினாள். யாருக்குமே கட்டுப்படாத லாவண்யா சுமணாவின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு விட்டாள். அத்தோடு பேச்சுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சாந்தா சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டு விட்டாள். லாவண்யாவும் புறப்பட்டு விட்டாள். வெளியே புறப்பட்டுப் போன லாவண்யா தன்னுடைய பிரசாரப் பிரிவுத் தலைவரைச் சந்தித்தாள். அன்றைய சந்திப்பின் நோக்கமே சுமணாவைப் பற்றி முடிந்தவரை விளக்கினாள். சுமணாவின் அறிவுத் திறமையையும், அவளைப் பயன்படுத்துவதால் பலவித நன்மைகளை அடையலாம் என்பதையும் விளக்கிக் கூறினாள். இவள் எவ்வளவு தான் கூறிய போதிலும் சுமணாவைச் சேர்ப்பது உசிதமல்லவென்று அவன் மறுத்துவிட்டான். லாவண்யாவுக்கு, மிக மன வருத்தமாகிவிட்டது. மனம் தளர்ந்த நிலையில் திரும்பவும் வீடு வந்து சேர்ந்தாள். லாவண்யா சோர்ந்த மனத்துடன் வீட்டுக்கு வந்து கதிை- ரயில் தொப்பென்று

இருந்தாள். சமைத்துக் கொண்டிருந்த சுமணா சத்தம் கேட்டு வெளியே வந்தாள். லாவண்யாவின் சோர்விலிருந்து நடந்ததை ஊகித்துக் கொண்டாள். மெதுவாக லாவண்யா வுக்கு அருகில் வந்து அவளைத் தட்டிக் கொடுத்து "நீயெல்லாம் எப்படிப் பிரச்சாரம் செய்கிறாய்? என்று எனக்குப் புரியவேயில்லை" என்றாள்.

லாவண்யா திடுக்கிட்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள். "லாவண்யா முதலில் உன்னை நீ திடப்படுத்திக்கொள்ள வேண்டும். உங்கடை போராட்டம் இன்று தற்காப்பு நிலையிலைதான் இருக்கு. சிங்களவரிட்டையிருந்து உங்களைக் காப்பாத்திறது தான் நோக்கம். அப்படியிருக்கேக்கை ஒரு சிங்களத்தியை எப்படிச் சேர்க்கலாம். யோசித்துப்பார். இதற்காக மனஞ் சோராமல் உற்சாகமாய் உங்கடை விடுதலைப் போரிலை ஈடுபடு. நான் ஐயாவைப் பார்த்துக் கொள்கின்றேன்" என்று சுமணா சொன்னபோது மெய்சிலிர்த்துப் போன லாவண்யா வேகமாக எழும்பி அவளைக் கட்டிப் பிடித்து அழுதாள். "உங்களோடை வாழ அண்ணாவுக்குக் குடுத்து வைக்க யில்லையே" என்று கேவிக்கேவி அழுதாள். அவளை ஆறுதல் படுத்தி விட்டுக் குசினிக்குள் சென்று விட்டாள் சுமணா. வெளியே போயிருந்த மகாலிங்கத்தார் உள்ளே வந்து கொண்டிருந்தார். லாவண்யா தனிய இருப்பதைப் பார்த்து அவளுக்கருகில் சென்று தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம்

"பிள்ளை கொம்மா இருந்திருந்தால் இவ்வளவைக்கு கலியாணம் நடந்திருக்கும். கொண்ணையும் எங்களை விட்டிட்டுப் போட்டான். நீயெண்டாலும் ஒரு கலியாணத்தைக் கட்டிப் பிள்ளை குட்டியோடை இருந்தால்தான் எங்கடை குடும்பம் தழைக்கும்.

இவ்வளவு நாளும் கதைக்காத ஒரு விஷயத்தை இண்டைக்குக் கதைக்கப் போறன். எங்கடை வீட்டிலை இருக்கிற தம்பி தினகரனோடை நீ பழகிறதைப் பார்த்துக்

கொண்டுதான் வாறன். உனக்கு அந்தத் தம்பியிலை விருப்பம் எண்டாச் சொல்லு. நான் ஜாம் ஜாம் என்று கலியாணத்தை நடத்தி வைக்கிறன்" என்று கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

லாவண்யா எதுவும் கூறாமல் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மனதிற்குள் ஒரு போராட்டமே நடந்து கொண்டிருந்தது. இறுதியில் என்ன சொல்வதென்று முடிவெடுத்து

"அப்பா நீங்கள் சொல்வது நியாயம். அம்மா போனாப் போலை நீங்கள் என்னை வளர்த்த விதம் எல்லாம் எனக்குத் தெரியுது. ஆனால் நான் இப்ப நீங்கள் சொல்லிற மாதிரிச் செய்ய முடியாமல் தவிக்கிறேன். நீங்கள் சொன்ன மாதிரி தினகரனை நான் விரும்பியது உண்மைதான். நீங்கள் எதிர்த்தால் கூட அவரைத்தான் கட்ட வேணுமென்று மனதுக்கை நினைச்சுக் கொண்டிருந்தனான். இப்ப நீங்களே அவரைக் கட்டு என்று சொல்லேக்கை என்னாலை முடியாது என்று மட்டும் தான் சொல்லலாமப்பா" என்று கூறிவிட்டு விக்கி விக்கி அழுதாள். அவர் அவளின் பரிதாபகரமான நிலமையைப் பார்த்து முதுகில் தடவி ஆதுரப்படுத்தினார்.

"இப்ப நான் ஓமெண்டால் கூட அவர் ஓமெண்ண மாட்டார். எங்கடை விடுதலைப் போராட்டமெல்லாம் அவருக்குப் பிடிக்காது. நான் என்ரை உயிரை எங்கடை விடுதலைப் படைக்கு அர்ப்பணிச்சிட்டன். என்னைத் தடுக்காதையுங்கோ" என்று கதறினாள். இதற்கு மேல் எதுவும் கதைக்க மகாலிங்கத்தார் விரும்பவில்லை. எழும்பிப் போய்விட்டார்.

மகாலிங்கத்தார் போய் சிறிது நேரத்தில் அந்த வாலிபன் முகுந்தன் உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஒரு கடிதம் லாவண்யாவுக்காகக் காத்திருந்தது. முகுந்தன் கொடுத்த கடிதம் மேசையிலிருந்தது. தினகரன், சாந்தா, சுமணா, மகாலிங்கத்தார் நால்வரும் ஆளுக்கொரு கதிரையில் அமர்ந்திருந்தனர். நால்வருடைய முகங்களும் இறுகிக் கறுத்திருந்தது. லாவண்யாவைப் பிரசாரப் பிரிவிலிருந்து எடுத்து ஆயுதப் பயிற்சிக்காக அனுப்பும் உத்தரவுதான் அந்தக் கடிதம். இன்னும் சில மணி நேரங்களில் அவளைக் கூட்டிக் கொண்டு போய் வள்ளத்தில் ஏற்ற முகுந்தன் வந்து விடுவான். எல்லோருடைய மனங்களும் பாரமாகிப்போய் இருந்தன. லாவண்யா மெதுவாக எழும்பிச் சுமணா விற்கருகில் சென்றாள். சுமணா அவளைக் கட்டிப் பிடித்தாள். "அண்ணி உங்களிட்டைத்தான் ஐயாவை விட்டிட்டுப் போறன்" என்று கூறிய அவளால் மேற்கொண்டு ஏதும் கதைக்க முடியவில்லை. தினகரனைப் பார்த்து "என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றாள். பக்கத்தில் நின்ற சாந்தாவை அவள் பார்த்த பார்வையில் எத்தனையோ அர்த்தங்கள் தொக்கி நின்றன. மகாலிங்கத்தாரைக் கண்வெட்டாமல் சிறிது நேரம் பார்த்தவள் ஓவென்று கதறியழுதாள். அவரும் கதறியழுதார். எல்லோரும் கண்களைக் கசக்கிக் கொண்டனர். கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு முகுந்தன் தான் வந்திருந்தான். கையில் அவள் உடுப்புக்கள் அடங்கிய பை ஒன்றுடன் முகுந்தனின் பின்னால் நடக்கத் தொடங்கினாள்.

இவள் போவதை வேலிக்குள்ளால் பார்த்துக் கொண்டு நின்ற பவளமக்கா இந்தச் செய்தியை அடுத்த வீட்டில் சொல்ல விரைந்து கொண்டிருந்தாள். ஒரு வீட்டிலிருந்து இருவர் வெவ்வேறு நோக்கங்களுக்காகக் கடல் கடந்து போன நிலையை எண்ணி தனக்குள் சிலிர்த்துக் கொண்டான் தினகரன். உயிரைக் காப்பாற்றச் சடகோபனையும் உயிரைக் கொடுக்க லாவண்யாவையும் கடல் கடந்து அனுப்பி விட்ட இறுமாப்பில் வேலியிலுள்ள கறையானைத் தட்ட விரைந்து கொண்டிருந்தார் மகாலிங்கத்தார். இந்தக் கதை இப்போது முடிவடையலாம். ஆனால் இதில் தொடங்கியுள்ள போர் எப்போது தான் முடிவடையுமோ??

Kadal Kadanthu ponavarkal
(Novel)
Karavai M. Thayalan
Tamil
First Edition
August 2007
...ed by: Luxmy Pathippakam
57 Blandford Way
Hayes
Middlesex
UB4 0PB
United Kingdom

£4.00

...at Luxmy Pathippakam ...
by UK PRINTERS ...

# கடல் கடந்து போனவர்கள்

## நாவல்பற்றி.....

**கடல் கடந்து போனவர்கள்** நாவல் நண்பர் கரவை மு. தயாளனின் கன்னிப்படைப்பு. மார்க்ஸிய சிந்தனையில் கருத்தூன்றியவராகவும் வடபுலத்தில் சாதிய அடக்குமுறைக்கு எதிராகத் தீவிரமாக இயங்கிய முற்போக்காளராகவும் இயங்கிய நற்குணதயாளன் என்ற இயற்பெயரைக் கொண்ட கரவை மு. தயாளனுடனான எனது பரிச்சியம் முற்பது ஆண்டுகளுக்கு மேலானது. சமூக அக்கறையும் ஈடுபாடும் அவரது வாழ்வுக் கண்ணோட்டத்தில் அழுத்தமாகச் சுவறியுள்ளன............

**- மு. நித்தியானந்தன்-**

.....புலம்பெயர் நிலங்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டு அந்நியப் புலங்களையும் பூகம்பங்களையும் சூழல்களையும் சூறாவளிகளையும் எதிர்கொண்ட நிலையில் எமது தாயக நிகழ்வுகளைப் படைப்புக்களின் கருவாக்கி இலக்கிய வாழ்வினை மேற்கொள்வது சுலபமான காரியமல்ல என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.
தம்பி கரவை மு. தயாளன் இதில் வெற்றி பெற்றுள்ளார் என எண்ணவைக்கின்றது. அவரது நாவலின் ஓட்டம்........

**-புலவர் சிவநாதன்-**

..........தேவையற்ற கதாபாத்திரங்களை தோற்றுவிக்காது உயிர்த்துடிப்புள்ள கதாபாத்திரங்களை உலாவவிடுவதனால் நாவல் உயிர் ஓட்டம் உள்ளதாக மாறி படித்து முடிக்கும் வரை நூலை கீழே வைக்கக்கூடாது என்ற உணர்வுத் தூண்டலைத் தருகின்றது. இந்த உணர்வுத் தூண்டலுக்கு மெருகூட்டக்கூடிய வகையில் ஆசிரியரின் வளமார்ந்த தமிழ் நடையும் மண்சார்ந்த மொழிநடையும் அமைகின்றன.

**-பத்மிமாகரன்-**